අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

2024 වර්ෂයේ ප්‍රගතිය හා 2025 වර්ෂයේ ඉදිරි ගමන් මග

2024 வருடத்திற்கான முன்னேற்றம் மறறும் 2025 வருடத்திற்கான எதிர்கால பயணப் பாதை

The Progress of 2024 and the Way Forward 2025

වෙළුම I - සාමාන්‍ය අධ්‍යාපනය
இதழ் I - பொதுக் கல்வி
Volume I - General Education

වෙළුම් පෙළගැස්ම

වෙළුම I	-	සාමාන්‍ය අධ්‍යාපනය
වෙළුම II	-	උසස් අධ්‍යාපන
වෙළුම III	-	වෘත්තීය අධ්‍යාපන

இதழ்களின் ஒழுங்கமைப்பு

இதழ் I	-	பொதுக் கல்வி
இதழ் II	-	உயர் கல்வி
இதழ் III	-	தொழில் கல்வி

Series of volumes

Volume I	-	General Education
Volume II	-	Higher Education
Volume III	-	Vocational Education

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

2024 ஆம் வருடத்தின் முன்னேற்றம் மற்றும் 2025 ஆம் வருடத்திற்கான எதிர்கால பயணப் பாதை

இதழ் I

பொதுக் கல்வி

நோக்கு

இலங்கையின் அடையாளத்தின் பங்குதாரர்களான திறமையான பிரஜைகளுடான உலகளாவிய சமூகத்தில் சிறந்த நிலையினை அடைதல்

பணிக்கூற்று

பங்குதாரர்கள் திருப்தியடையக் கூடிய வகையில் வினைத்திறன் மற்றும் உயர் பண்புத் தரத்தை உறுதிப்படுத்தக்கூடிய நவீன கல்வி அனுகுமுறையொன்றினூடாக சர்வதேச போக்குகளுடன் பொருந்தக்கூடிய திறமையாக பிரஜைகளை உருவாக்குதல்.

பொருளடக்கம்

01.	கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு விடயப் பரப்பு	01
	செயற்பாடுகள் மற்றும் பணிகள்	01
	பாடசாலை முறைமை தொடர்பிலான தரவுகள் சுருக்கமாக *(2023)*	04
02.	கல்வியின் எதிர்கால பயணப் பாதை	08
03.	2024 ஆம் வருடத்தின் முன்னேற்றம்	18
	வெளிநாட்டு உதவிச் செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்கள் - பேரளவு/ வெளிநாட்டு நிதிய செயற்றிட்டங்களின் சாராம்சம் (*2024* திசெம்பர் *31*ஆம் திகதிக்கு)	59
04.	நிதி முன்னேற்றம்	60
05.	மாணவர் அடைவு	62
06.	பொதுக் கல்வித் துறை சார்ந்த நிறுவனங்கள்	66
	தேசிய கல்வி நிறுவகம்	66
	கல்வி வெளியீட்டுத் திணைக்களம்	70
	இலங்கை பரீட்சைத் திணைக்களம்	79
	யுனெஸ்கோ ஸ்ரீலங்கா தேசிய ஆணைக்குழு	85
	அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம்	89
	தேசிய கல்வி ஆணைக்குழு	90

01. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

அமைச்சின் பணிகள்

விடயப் பரப்பு

தேசிய கொள்கைகளுக்கமைய கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வித் துறைகள் சார்ந்த கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல், வினைத்திறன் மற்றும் பொதுமக்களுக்கு நேயமான முறையில் அரச சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்துதல் மற்றும் வீண் விரயம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல், முன் பிள்ளைப் பருவம் முதல் உயர் கல்வி வரையில் தேசிய கல்வி முறைமை ஒன்றை உருவாக்குதல், விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகள் உட்பட அனைத்து பிள்ளைகளுக்கும் தடையின்றிய கல்விக்கான பிரவேசத்தை உறுதிப்படுத்துதல், தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி மேம்பாடு, தகவல் தொழில்நுட்பத்தை தொடர்புபடுத்தி தொலைக் கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், தேசிய பாடசாலைகளின் மேற்பார்வை, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளைக் கண்காணித்தல், அரச பல்கலைக்கழகங்களின் முகாமைத்துவம் மற்றும் கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துதல், தொழிற் சந்தைக்குப் பொருத்தமான தொழிற் படை ஒன்றை உருவாக்குவதற்காக தொழிற் கல்வியை நவீனமயப்படுத்துதல், பௌத்த மற்றும் பாளி மொழிக் கற்கை மேம்பாடு, இலங்கையின் கல்வி முறைமையானது உலகளாவிய தரநிலைகளுக்கு அமைவாக உள்ளதை உறுதிப்படுத்துதல் போன்றன கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் விடயப் பரப்பிற்குட்படுகின்றன.

பணிகள் மற்றும் செயற்பாடுகள்

- அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளுக்கமைய கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் சட்டபூர்வமான நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய விடயங்கள் சார்ந்த கொள்கைகள், செயலுபாயங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல், பின் தொடரல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- அமைச்சின் விடயப் பரப்பிற்குரித்தாகும் பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனுடன் மக்கள் நேயம் மிக்க வகையில் வழங்குதல்.
- வீண் விரயம் மற்றும் ஊழலை ஒழிப்பதனூடாக அமைச்சின் பணிகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு உறுதுணையளிக்கும் விதமாக நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைமைகள் மற்றும் விதிகளை மறுசீரமைத்தல்.
- முன் பிள்ளைப் பருவம், ஆரம்ப, இடை நிலை மற்றும் மூன்றாம் நிலைப் பிரிவுகளிடையே சிறந்த தொடர்பு ஏற்படும் வகையில் கல்வி அபிவிருத்திக்குரிய துறைசார் கொள்கைகளை வகுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- உலகளாவிய சவால்களுக்கு தன்னம்பிக்கையுடனும், வெற்றி தொடர்பான நம்பிக்கையுடனும் இலங்கையின் சிறுவர் மற்றும் இளம் சந்ததியினர் முகங்கொடுப்பதற்கான திறமைகளை ஏற்படுத்தும் வகையிலான தேசிய கல்வி முறை ஒன்றை உருவாக்குதல்.
- முன் பள்ளிக் கல்வி முதல் உயர் கல்வியை நிறைவு செய்யும் வரையில் தெளிவான பயணப் பாதை ஒன்றை கட்டமைப்பதற்கான கொள்கை ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல்.
- முன் பள்ளிகளுக்கான தேசிய கொள்கையொன்றைத் வகுத்து நடைமுறைப்படுத்துதல்.
- சகல பிள்ளைகளுக்கும் கல்விக்கான பிரவேச உரிமையினை உறுதி செய்தல்.
- தேசிய பொருளாதாரத்திற்கு சாதகமான பங்களிப்பு மற்றும் சுறுசுறுப்பான முறையில் சமூகம் சார் பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய பிரஜைகளாக்குவதற்காக பிள்ளைகளை ஆயத்தப்படுத்தும் பொருட்டு பாடசாலைகளில் இணைப் பாடவிதான செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

- தேசிய பாடசாலைகளுக்கு அவசியமான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல்.
- தேசிய கல்விக் கொள்கையுடன் பொருந்தும் வகையில் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளைக் கண்காணித்தல்.
- கல்வியின் பண்புத் தரம், மாணவர் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளை நேர்த்தியாக பேணுவதற்கு அவசியமான கொள்கை ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.
- விசேட தேவைகளுடன் கூடிய மாணவர்களுக்கு கல்விக்கான வாய்ப்பினை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- தேசிய மற்றும் இணைப்பு மொழிக் கல்வி மேம்பாட்டிற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பௌத்த மற்றும் பாளி மொழிக் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் சமயக் கல்விக் குறிக்கோள்களை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் பிரிவெனாக் கல்வியைக் கட்டியெழுப்புதல்.
- இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவையின் நிர்வாகம் மற்றும் ஏனைய கல்விச் சேவைகளுக்குரிய ஆளணி முகாமைத்துவம் சார் செயற்பாடுகள்
- பாடசாலை நூலக மேம்பாடு மற்றும் அபிவிருத்தி
- பாடசாலைப் பாடப் புத்தகங்கள், சீருடைகள், மாணவர்களது ஏனைய தேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வழிப்படுத்துதல்.
- அனைத்து பாடசாலைகளதும் சுகாதாரம் சார் செயற்பாடுகள், சிறுவர் நேயம் மிக்க வகுப்பறைகள், ஆசிரியர்களது விடுதி மற்றும் ஓய்வறை வசதிகள் உட்பட அனைத்து பௌதீக வசதிகளையும் மேம்படுத்துதல்.
- கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறைக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்துவதை ஊக்குவித்து அபிவிருத்தி செய்தல்.
- தொழிற் கல்விக்கான விருப்பினை அதிகரிப்பதற்கான செயலுபாயங்களை வகுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதல்.
- கல்வித் தகைமைகளைக் கருத்தில் கொள்ளாமல் தொழிற் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைக்கு பொருத்தமான தொழிற் படை ஒன்றை உருவாக்குவதற்காக பொறிமுறை மற்றும் தொழில்நுட்பக் கல்வியை நவீனமயப்படுத்துதல்.
- பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகிச் சென்றதன் பின்னர் பல்கலைக்கழக கல்வியைப் பெற்றுக் கொள்ள தகுதி பெறாத மாணவர்களுக்கு தொழிற் கல்விக்கான வாய்ப்பினை விரிவுபடுத்தக்கூடிய வகையில் கொள்கைகளை வகுத்தல் மற்றும் வசதியளித்தல்.
- பயிலுனர் பயிற்சி வாய்ப்புக்களை மேம்படுத்த நடவடிக்கையெடுத்தல்.
- பொருத்தமான தொழிற் பயிற்சி நிறுவனங்களை தொழில்நுட்பவியல் பட்டமளிப்பு நிறுவனங்களாக்குதல்.
- தற்போதுள்ள தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டங்களை 7 இலிருந்து 10 வரையில் அதிகரித்தல் மற்றும் அதனுடன் பொருந்தும் வகையில் இலங்கை தகைமைச் சட்டகத்தை (SLQF) திருத்தம் செய்தல்.
- தொழிற் கல்விப் பாடநெறிகளில் முயற்சியாண்மை, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிகளை உள்ளடக்கி கலைத்திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- நடமாடும் தொழில்நுட்பக் கல்விச் சேவைகள் மூலம் தொழிற் பயிற்சி வாய்ப்புக்களை விரிவாக்கம் செய்தல்.

- தரம் 10 முதல் 13 வரையில் தொழிற் கல்விப் பாடத்துறையினை அறிமுகம் செய்வதனூடாக பல்வேறு தொழில்நுட்பத் துறைகளில் சேவையாற்றுவதற்கு மாணவர்களைத் தயார்படுத்தல்.
- தாதியர் கல்லூரிகளை தேசிய தாதியர் பல்கலைக்கழகமொன்றுடன் ஒன்றிணைத்தல்.
- தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்காக ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதியளித்தல்.
- புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிப் பெறுபேறுகளை பிரயோசனப்படுத்துவதற்கான வினைத்திறனுடன் கூடிய பொறிமுறை ஒன்றைத் தயாரித்தல்.
- விஞ்ஞான ரீதியான, தொழில்நுட்ப மற்றும் சமூக, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- சமூகத்தை புத்தாக்கங்களில் ஈடுபடச் செய்தல் மற்றும் ஈடுபட ஊக்குவித்தல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்தின் கீழுள்ள அரச பல்கலைக்கழகங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி செய்தல்
- பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதில் ஏற்படக்கூடிய தாமதங்களை இல்லாமல் செய்தல்
- மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- பட்டப் பின் பட்டக் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை வலுவூட்டுவதற்கு அவசியமான நிதி மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல்.
- இலங்கையில் உயர் கல்வியின் பண்புத்தர பெறுமதியினை மேம்படுத்தும் குறிக்கோளுடன் சர்வதேச கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் ஒன்றிணைதல் மற்றும் ஒத்துழைப்பினை மேம்படுத்துதல்.
- உயர் கல்விக்கான பிரவேசப் பாதையினை விரிவுபடுத்துவதற்கு பொருத்தமான நியதிகளை இனங்காணல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைகளை இலக்காக கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவதற்காக ஒட்டுமொத்தக் கல்வி மறுசீரமைப்புக் கொள்கையினுள் கலைத்திட்டத்தை திருத்தம் செய்தல்.
- பல்கலைக்கழக கல்வியினுள் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டு வசதிகளை ஏற்படுத்துதல்.
- தகைமைகளைக் கொண்ட இலங்கை மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- இலங்கையில் இயங்கும் தனியார் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களைக் கண்காணித்தல் மற்றும் அங்கீகரித்தல்.
- பௌத்த மற்றும் பாளி மொழிக் கல்வி கல்வி மேம்பாடு மற்றும் பிக்குமார்களது உயர் கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியமான வசதிகளை வழங்குதல்.

- உலகளாவிய தேவைகளுடன் பொருந்தும் வகையில் ஒட்டுமொத்தக் கல்வித் துறையும் உள்ளடங்கும் விதமாக கல்வி மறுசீரமைப்புக்களை அறிமுகம் செய்தல்.
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தொலைக் கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.
- வினைதிறனுடன் கூடிய கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறையொன்றை அடைந்துகொள்வதற்கு அவசியமாகும் ஆசிரியர்களை உருவாக்குவதற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களது திறமைகளை விருத்தி செய்தல்.
- கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சிற்குரித்தான நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுக்குமுரிய செயற்பாடுகள்
- கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சிற்குரித்தான அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.

பாடசாலை முறைமை தொடர்பான எண் தரவுகள் சுருக்கமாக (2023)

■ மொத்த அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை

பாடசாலைகளின் எண்ணிக்கை	ஆசிரியர்களின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை
10,096	237,787	3,882,688

■ பாடசாலை வகைப்படுத்தல் மற்றும் நிர்வாகத்திற்கமைய அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை

பாடசாலை வகை	பாடசாலைகளின் எண்ணிக்கை		மாணவர் எண்ணிக்கை		ஆசிரியர் எண்ணிக்கை	
	தேசிய பாடசாலைகள்	மாகாணப் பாடசாலைகள்	தேசிய பாடசாலைகள்	மாகாணப் பாடசாலைகள்	தேசிய பாடசாலைகள்	மாகாணப் பாடசாலைகள்
1AB	362	626	801,784	742,449	41,437	39,020
1C	33	1,942	28,227	1,005,655	1,853	63,211
வகை 2	1	3,272	10	693,136	10	57,889
வகை 3		3,860		611,427		34,367
மொத்தம்	**396**	**9700**	**830,021**	**3,052,667**	**43,300**	**194,487**

அரச பாடசாலைகளில் மாணவர் ஆசிரியர் விகிதம் -2023

வகைப்படுத்தல்	பாடசாலைகளின் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை	ஆசிரியர் எண்ணிக்கை	STR
மாணவர் சனத்தொகைக்கமைய பாடசாலைகள்				
1-50 மாணவர்கள்	1,506	44,866	8,967	5.0
51-100 மாணவர்கள்	1,638	121,732	15,902	7.7
101-200 மாணவர்கள்	2,128	310,515	29,543	10.5
201-500 மாணவர்கள்	2,638	837,351	55,592	15.1
501-1,000 மாணவர்கள்	1,309	901,777	48,317	18.7
1,001-1,500 மாணவர்கள்	379	459,603	23,242	19.8
1,501-2,000 மாணவர்கள்	200	344,691	16,771	20.6
2,001-3,000 மாணவர்கள்	198	475,852	22,435	21.2
3,001-4,000 மாணவர்கள்	67	226,908	10,168	22.3
4,000 இற்கு மேல் மாணவர்கள்	33	159,393	6,850	23.3

- **மாகாணங்களுக்கமைய அரச பாடசாலைகளின் வகைப்படுத்தல்**

மாகாணம்	தேசிய பாடசாலைகள்	மாகாணப் பாடசாலைகள்	மொத்த அரச பாடசாலைகள்
மேல்	79	1,265	1,344
மத்திய	56	1,452	1,508
தென்	70	1,031	1,101
வடக்கு	24	950	974
கிழக்கு	42	1,082	1,124
வடமேல்	39	1,204	1,243
வட மத்திய	17	791	808
ஊவா	38	855	893
சபரகமுவ	31	1,070	1,101
மொத்தம்	**396**	**9,700**	**10,096**

- ***பாடசாலைகளில் வகுப்பு இடைவெளிக்கமைய அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை***

வகுப்பு இடைவெளி	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஆசிரியர்களின் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை
1-5	3,860	34,367	611,427
1-9	64	625	6,759
1-11	3,185	56,975	683,752
1-13	1,997	93,626	1,667,000
6-11	24	299	2,635
6-13	966	51,895	911,115

- ***பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை இடைவெளிக்கேற்ப பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை***

பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை	பாடசாலைகளின் எண்ணிக்கை	ஆசிரியர்களின் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை
1-50	1,506	8,967	44,866
51-100	1,638	15,902	121,732
101-200	2,128	29,543	310,515
201-500	2,638	55,592	837,351
501-1000	1,309	48,317	901,777
1001-1500	379	23,242	459,603
1501-2000	200	16,771	344,691
2001-3000	198	22,435	475,852
3001- 4000	67	10,168	226,908
4000இற்கு மேல்	33	6,850	159,393

- ***கற்றல் மொழி மூலத்திற்கமைய அரச பாடசாலைகளின் எண்ணிக்கை***

கற்கும் மொழி மூலம்	பாடசாலைகளின் எண்ணிக்கை
சிங்களம் மாத்திரம்	6,247
தமிழ் மாத்திரம்	3,011
சிங்களம் மற்றும் தமிழ்	39
சிங்களம் மற்றும் ஆங்கிலம்	581
தமிழ் மற்றும் ஆங்கிலம்	183
சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்	35

- ***க.பொ.த (உத) ஒவ்வொரு பாடத்துறைகளுடனும் கூடிய பாடசாலைகளின் எண்ணிக்கை***

பாடத்துறை	பாடசாலைகளின் எண்ணிக்கை
விஞ்ஞானப் பாடத்துறையுடன் கூடிய பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை	988
உயிரியல்	966
பௌதீகவியல்	931
கலை	2,944
வணிகம்	1,856
தொழில்நுட்பம் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்/ பொறியியல் தொழில்நுட்பம்)	528
பொது/ தொழிற் பாடத்துறை	489

- ***நியமனத்தின் தன்மைக்கமைய அரச பாடசாலைகளில் ஆசிரியர்களது எண்ணிக்கை***

நியமனத் தன்மை	ஆண்	பெண்	மொத்தம்
பயிற்றப்பட்ட பட்டதாரிகள்	25,906	75,355	101,261
பட்டதாரிகள்	9,278	28,517	37,795
பயிற்றப்பட்ட	20,466	73,463	93,929
பயிற்றப்படாத	850	3,608	4,458
ஏனையவை	70	274	344
மொத்தம்	**56,570**	**181,217**	**237,787**

- ***தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை***

பாடசாலைகளின் எண்ணிக்கை	ஆசிரியர் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை
95	8,170	137,869

- ***பிரிவெனாக்களின் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை***

பிரிவெனாக்களின் எண்ணிக்கை	ஆசிரியர் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை
822	7,118	69,108

வலயக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கை	கோட்டக் கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கை
	312

மூலம்: புள்ளி விபரவியல் கிளை, கல்வி அமைச்சு, 2023.12.31 ஆம் திகதிக்கு

02. கல்வியின் எதிர்கால பயணப் பாதை

கல்வி என்பது நிலவிய மற்றும் நிலவுகின்ற அனைத்து சமூக நிலைகளாலும் உருவாக்கப்பட்ட அறிவைக் கைப்பற்றுதல் மற்றும் பகிர்ந்தளிப்பதனூடாக புதிய அறிவினை உருவாக்கக்கூடிய கலாசார ரீதியிலான ஒரு செயன்முறையாகும் என்பதுடன், ஒழுக்கமான மற்றும் பொறுப்புடைமையுடன் கூடிய பிரஜைகளைக் கொண்ட சமூகம் ஒன்றின் நடத்தை மற்றும் அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் பணி குறித்த சமூகத்தின் பண்புத்தரம் மிக்க கல்விச் செயன்முறையில் தங்கியுள்ளது.

ஆகக் குறைந்தது 13 வருட பாடசாலைக் கல்வியையேனும் பூரணப்படுத்தாமல் இடைநடுவே பாடசாலைகளிலிருந்து விலகுதல், பாடசாலை முறைமையினுள் மனித மற்றும் பௌதீக வளப் பகிர்வில் காணப்படும் சமத்துவமின்மை மற்றும் தரம் ஒன்று முதல் இளமானி பட்டம் வரையில் இலவசக் கல்வி வழங்கும் தேசிய கொள்கையொன்று நடைமுறையில் இருந்தாலும் தமது பிள்ளைகளது கல்விக்காக பெற்றோரால் மேற் கொள்ளப்பட வேண்டிய செலவானது தேசிய கல்விச் செயன்முறையில் ஏற்பட்டுள்ள பிரச்சனையொன்றாகும். இலங்கையின் கல்விச் செயன்முறையானது பண்புத்தரம் மிக்க பிரஜைகளை உருவாக்குவதில் தோல்வியடைந் துள்ளதாக பல்வேறு சமூக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கல்வியின் குறிக்கோளானது வெறுமனே தொழிற் சந்தைக்குரிய நபர்களை உருவாக்குவதல்ல என்றாலும் கல்விச் செயன்முறையினூடாக உருவாகும் பிரஜையொருவர் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்து சமூகப் பொறுப்புக்கள் தொடர்பில் சாதகமான முறையில் பதிலளிக்கும் ஒருவராக இருத்தல் வேண்டும். இருப்பினும் பொருளாதாரத்தின் பிரதானமான மூன்று தூண்களான விவசாயம், தொழிற்றுறை மற்றும் சேவைத் துறைகளில் தொழிற் சந்தைத் தேவைகள் மற்றும் கல்விக்கிடையே காணப்படும் பொருத்தப்பாடற்ற தன்மை ஆகியன இதன் கீழ் பிரதானமாக கவனத்திற்குள்ளாகியுள்ளது.

அரசின் கல்விக் கொள்கையின் குறிக்கோள் உயர் மனிதாபிமானம் மிக்க மற்றும் பொறுப்புடைமையுடன் கூடிய பிரஜைகளைக் கொண்ட சமூகமொன்றிற்காக பண்புத்தரம் மிக்க கல்வியை வழங்குவதாகும். அதனை அடைந்துகொள்வதற்காக கல்வித் துறைக்கான அரச முதலீடு அதிகரிக்கப்படுவதுடன், மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை படிப்படியாக 6% (சதவீதம்) வரையில் அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வியின் எதிர்காலப் பயணப் பாதைக்கு அடிப்படையான பிரதானமான கூறுகள்

தற்போதைய அரசினால் முன்வைக்கப்படும் கொள்கைசார் வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் கல்விக்கு பிரதானமானதொரு நிலை உரித்தாகின்றது. இதன் போது இலவசக் கல்வி மற்றும் சம பிரவேசம், மானிட அபிவிருத்தி மற்றும் சேவையில் ஈடுபடுவதில் உள்ள பொருத்தப்பாடு போன்ற அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தன்மை, சமூகத்திற்கு பொறுப்புக் கூறும் பிரஜைகள், நிலைபேறுடன் கூடிய தன்மை மற்றும் புத்தாக்கம் மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வி ஆகிய பிரதான கூறுகள் இதில் அடிப்படையாக கொள்ளப்படுகின்றன. அதற்கமைய கல்வித் துறையின் பல்வேறு பிரிவுகளின் கீழ் விசேடமான இலக்குகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டு மற்றும் இனிவரும் காலத்திற்கான விசேட இலக்குகள்

முன் பிள்ளைப் பருவ விருத்திக் கல்வி

03 முதல் 05 வயதுடைய அனைத்து பிள்ளைகளுக்கும் முறையான முன் பிள்ளைப் பருவ விருத்திக்கான கல்வி வழங்க நடவடிக்கையெடுக்கப்படும். சகல பிள்ளைகளுக்கும் தமது வீடுகளில் இருந்து அல்லது பெற்றோரின்

சேவை நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான கல்வி நிலையமொன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் போது பிள்ளைகளின் உடலியல் மற்றும் உளவியல் நிலைமைகளுக்கு உகந்த வகையில் சமூக வாழ்வினுள் பிரவேசிப்பதற்கு அவசியமான நற் பழக்கவழக்கங்கள், மனப்பாங்கு மற்றும் நெறிமுறைகளை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள் உள்ளடங்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தாய்மொழிக்கு மேலதிகமாக பேச்சுத் தொடர்பாடல் மொழியாக ஆங்கிலம் உட்பட ஏனைய தேசிய மொழி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல்கலாசார பல்வகைமைக்கு பழக்கப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். குறித்த பிள்ளைகளது சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலையினை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்கப்படும். அவ்வாறே முன் பிள்ளைப் பருவ நிலையங்களைக் கண்காணிப்பதற்காக தேசிய முன் பிள்ளைப் பருவ விருத்திக் கண்காணிப்பு நிலையமொன்றை நிறுவுவதற்கும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலைய காப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள், கட்டாயமான தொழிற் பயிற்சிகள் மற்றும் போதுமான அளவில் சம்பளமும் வழங்க நடவடிக்கையெடுக்கப்படும். அத்துடன், முன் பிள்ளைப் பருவ தொழில்வாண்மை யாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக முறையான தேசிய நிறுவனம் ஒன்றும் அதன் கீழ் கிளைகள் கொண்ட வலையமைப்பு ஒன்றையும் நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பாடசாலைக் கல்வி**

பாடசாலைக் கல்வியானது பிரதானமான நான்கு பருவங்களின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்றது. அதாவது தரம் ஒன்று முதல் தரம் 5 வரையில் ஆரம்பக் கல்வி, தரம் 6 முதல் தரம் 9 வரையில் கனிஷ்ட இடைநிலைக் கல்வி, தரம் 10 முதல் தரம் 11 வரையில் சிரேஷ்ட இடைநிலைக் (கீழ்) கல்வி மற்றும் தரம் 12 மற்றும் 13 வரையில் சிரேஷ்ட இடைநிலைக் (மேல்) கல்வி என்றவாறாகும்.

- **ஆரம்பக் கல்வி**

எழுத்தறிவு, எண் கணித அறிவு, படைப்பாற்றல் மற்றும் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வது ஆரம்பக் கல்வியின் பிரதானமான குறிக்கோளாகும். தமது வீடுகள் அல்லது பெற்றோரின் சேவை நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தினுள் ஆரம்பக் கல்விக்காக அரச பாடசாலை ஒன்றிற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவது அரசின் எதிர்பார்ப்பாகும். பிள்ளைப் பருவத்திற்கு தடைகள் ஏற்படாத வகையில் சிந்தனைக் கிளர்ச்சி மற்றும் அறிவு விருத்தியை தூண்டக்கூடிய மாணவர் மையக் கல்வி வழங்க நடவடிக்கையெடுக்கப்படும். ஆரம்பக் கல்விக்குரிய ஆகக் குறைந்த வசதிகளைப் பேணக்கூடிய வகையில் பௌதீக மற்றும் மனித வளங்களை பாடசாலைகளுக்கு வழங்குவது அரசின் பொறுப்பாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இப் பருவத்திலுள்ள பிள்ளைகளது தேவைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கமைய பாடசாலைப் போக்குவரத்து முறைமை ஒன்றை வழங்குவது அரசின் இலக்காக உள்ளது.

- **கணிஷ்ட இடைநிலைக் கல்வி**

சனத்தொகை மற்றும் புவியியல் ரீதியான அமைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இரண்டு அல்லது மூன்று ஆரம்ப பாடசாலைகள் உள்ளடங்கும் வகையில் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை முறைமை ஒன்றும் சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலை முறைமை ஒன்றும் என்பதாக பாடசாலை முறைமையானது ஒழுங்குபடுத்தப்படும். மாணவர்களது திறமைகள் மற்றும் விசேட திறன்களுக்கமைய உயர் கல்வி அல்லது தொழிற் கல்வியை தெரிவு செய்யக்கூடிய வகையில் பிரதான பாடங்களைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். விசேடமாக மாணவர்களது வயது வகுதி மற்றும் அதற்குரிய அறிவு மற்றும் திறன் விருத்திக்காக மாணவர் மையக் கல்வி மற்றும் சமூக விழுமியங்கள் மற்றும் பிரஜைகள் பொறுப்பினை விருத்தி செய்வதற்காக மேலதிக பாடங்கள் மற்றும் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கும் வசதியளிக்கப்படும். மாணவர்களுக்கு தமது

சமயம் தொடர்பிலான கல்விக்கு மேலதிகமாக இலங்கையில் உள்ள பிரதானமாக சமயங்கள் தொடர்பான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்காள், அவ் அவ் வயதிற்கு உகந்த வகையில் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான கல்வி, கலாசாரம், சூழல் நேயம் மற்றும் சூழலைப் பேணல் தொடர்பில் மனப்பாங்கு விருத்தி மற்றும் புத்தாக்கங்கள் தொடர்பில் அனுபவங்களைப் பெற்றுத் தரக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்கள் கனிஷ்ட இடைநிலைக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படும்.

- **சிரேஷ்ட இடைநிலைக் கல்வி**

சிரேஷ்ட இடைநிலைப் பருவ மாணவர்களுக்காக தரம் ஒன்பதில் நடாத்தப்படும் தேசிய மட்ட பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் பாடசாலை மைய தொடர் மதிப்பீட்டு அறிக்கைகளின் படி மாணவர்களது இயலுமை மற்றும் விருப்புக்களுடன் பொருந்தும் வகையில் விஞ்ஞானம், கலை, வணிகம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பொதுப் பாடத் துறைகள் அல்லது தொழிற் பாடத்துறையை (vocational education stream) *(நேரடியாக ஏதேனும் ஒரு தொழிலுக்குரிய)* தெரிவு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். சிரேஷ்ட இடைநிலைக் கல்வி *(கீழ்)* காலத்தினுள் ஒரு பாடத்துறையிலிருந்து இன்னுமொரு பாடத்துறைக்கு மாறுவதற்கு முடியுமான வகையில் நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய கலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும். கல்விப் பாடத்துறைகளுக்கு விசேடமான பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்யக்கூடிய தொழில்நுட்ப அறிவு, மொழிகள், வாழ்க்கைத் தேர்ச்சிகள், இலக்கிய ரசணை, அடிப்படை சட்டங்கள் போன்ற பொதுப் பாடங்களைக் கற்பதற்கும் கலாசார பல்வகைமைக்கு இசைவடைந்து அப் பல்வகைமையை மதித்து செயற்படுவதற்கும் பிள்ளைகளைப் பழக்கப்படுத்தும் கற்றல் சூழல் மற்றும் புத்தாக்கம், வாழ்க்கைத் தேர்ச்சிகள் மற்றும் சமூகத் தொடர்புகளுக்கு அவசியமான அறிவு மற்றும் பிரயோகத் திறன்களை விருத்தி செய்வதே இலக்காக உள்ளது. மாணவர்களது உடலியல் மற்றும் உளவியல் சமநிலையைப் பேணுவதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் இளைஞர்களுக்குப் பொருத்தமான பாலியல் மற்றும் இனப் பெருக்க சுகாதாரம் தொடர்பான கல்வி மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சட்ட ஆலோசனை சேவைகள் மற்றும் ஏனைய சமூக உதவி முறைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான புரிதலைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

- **தேசிய மட்ட மதிப்பீடு மற்றும் கலைத்திட்ட அபிவிருத்தி**

அனைத்து தொழில்நுட்ப மற்றும் ஏனைய பௌதீக வசதிகளுடனும் கூடிய தேசிய பரீட்சை மதிப்பீட்டு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கும் தேசிய பரீட்சை மதிப்பீட்டுச் செயற்பாடுகளை ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்வதற்கும் இரண்டு மாதங்களுக்கும் பெறுபேறுகளை வழங்க முடியுமான வகையிலும் வருடாந்த பாடசாலை நாட்காட்டியொன்றைத் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. பரீட்சை மதிப்பீட்டுச் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் பங்குதாரர்களது அறிவுசார் பங்களிப்புக்குப் பொருத்தமான கொடுப்பனவு முறை ஒன்றும் உருவாக்கப்படும். கலைத்திட்ட அபிவிருத்தி, ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி, கல்வி ஆராய்ச்சி மற்றும் கொள்கை வகுத்தலுக்காக தேசிய கல்வி நிறுவகத்தின் செயற்பாடுகள் முறைமைப்படுத்தப்படும். தேசிய கல்வி நிறுவகத்தினுள் கலைத்திட்ட அபிவிருத்திக்காக முழுமையான வசதிகளுடன் கூடிய கலைத்திட்ட அபிவிருத்தி அலகொன்று தாபிக்கப்படும்.

மனித வளத்தின் மேம்பாடு மற்றும் பேணுகை

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களது சம்பள முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதிய ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் ஆசிரியர் சபை ஒன்றை நிறுவுதல் மற்றும் ஆசிரியர் தொழிலை உயர் சம்பளம் பெறும் *10* தொழில்வாண்மையாளர்களுக்கிடையே கொண்டுவருவதும் அரசின் எதிர்பார்ப்பாகும். ஆசிரியர் தொழிலில் பிரவேசிக்க முன்னர் கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பாக

ஒரு வருட வாண்மைத்துவப் பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். அனைத்து கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் ஒன்றிணைத்து தேசிய கல்வியியல் பல்கலைக்கழகமொன்று நிறுவப்படும். சகல ஆசிரியர்களும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். கலைத்திட்ட அபிவிருத்தி, பாடப் புத்தகங்களைத் தயாரித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறை ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி பேணக்கூடிய வகையில் நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புக்கான கட்டமைப்பொன்றும், பாடசாலை முறைமையினுள் அனைத்து தரப்பினரும் முகங்கொடுக்கும் பாலியல் அல்லது ஏனைய துன்புறுத்தல்களை இல்லாதொழிப்பதற்காக வலுவானதொரு கட்டமைப்பும் தாபிக்கப்படும்.

- **தொழிற் கல்வி**

தொழிற் துறைகளது பிரயோக ரீதியான அறிவைப் பெற்று ஏதேனும் ஒரு தொழிற் துறையில் மாணவர்கள் ஈடுபடக்கூடிய வகையில் தொழிற் கல்விச் செயன்முறை ஒன்று உருவாக்கப்படும். பொதுக் கல்விக்கு நிகரானதாக தரம் 10 முதல் 13 வரையில் கட்டுமானம், மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், படைப்பாற்றல் தொழிற் துறைகள், ஆரம்ப தொழிற்றுறைகள், சேவைத் தொழிற்றுறைகள், சமூக மற்றும் சமூக சேவைகள் மற்றும் உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளை உள்ளடக்கி தொழிற் பாடத்துறை கட்டமைக்கப்படும். தொழிற் சந்தை மற்றும் உலகளாவிய போக்குகளை கருத்தில் கொண்டு அவ் அத் தொழிற்றுறைகள் மற்றும் கல்வித் துறைகளுக்குரிய வாண்மையாளர்களைக் கொண்ட தொழிற் கல்வி கண்காணிப்பு செயலகம் ஒன்று நிறுவப்படும்.

- **உதவி பெறும் பாடசாலைகள்**

பிரிவெனாக்கள் உட்பட ஏனைய உதவி பெறும் பாடசாலைகளுக்கு போதியளவு ஒதுக்கீடுகளை வழங்கி அவற்றின் கல்வியை முறைமைப்படுத்த நடவடிக்கையெடுக்கப்படும்.

- **உயர் கல்வி**

தேசிய பல்கலைக்கழக முறைமையினை உயர் கருப்பொருள் ரீதியான மற்றும் ஆராய்ச்சி மையக் கல்வியை வழங்கும் நிலையங்களாக்கி சர்வதேச மட்டத்தில் உயர்ந்த தொழிற் கல்வியை வழங்கக்கூடிய சமாந்தரமான பல்கலைக்கழக முறைமை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச பல்கலைக்கழக முறைமை

பல்கலைக்கழகங்களது சுயாதீனத் தன்மைக்கு மதிப்பளித்து அப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் பாடநெறிகளை தேசிய கொள்கைகளுக்கு அமைவாக தயாரிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் சமூக பல்வகைமையின் பிரதிநித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள், அரசியல் மற்றும் ஏனைய தொடர்புகளின் கீழ் உப வேந்தர்களை நியமிப்பதற்குப் பதிலாக புதிய நடைமுறை ஒன்று உருவாக்கப்படும்.

பல்கலைக்கழகங்களின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினூடாக பல்கலைக்கழக வெளிவாரி நிர்வாக சபை உறுப்பினர்களாக சுயாதீனமான நபர்களை நியமிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து நிர்வாக சபைகளிலும் பல்வேறு தொழிற் துறைகள் மற்றும் ஆண் பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும் வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதுடன், அதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பொதுவாக பரிந்துரைக்கப்பட்டவர்களது பெயர்கள் உள்ளடங்கிய குழாம் ஒன்று நிறுவப்படும். நலன்புரி மற்றும் ஏனைய மாணவர் செயற்பாடுகளை வரையறுக்கப்பட்ட அளவில் மேற்கொள்வதற்காக மாணவர் பிரதிநிதி ஒருவர் குறித்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களது வாக்குகளின் அடிப்படையில் நிர்வாக சபைக்கு நியமிக்கப்படுவார். நிர்வாக சபை உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலம் ஆகக் கூடியது இரண்டு தவணைகளுக்கு மட்டுப்படுத்தப்படும். கல்வித் துறை ஒன்றின் பிரதானி அல்லது மூன்று வருடங்கள் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வகித்துள்ள அனைத்து பீட உறுப்பினர்களும் பீடாதிபதி பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்பதுடன், பீடாதிபதி ஒருவரது பதவிக் காலம் ஆகக் கூடியது தொடர்ச்சியான இரண்டு தவணைகளுக்கு மட்டுப்படுத்தப்படும்.

சகல பல்கலைக்கழகங்களிலும், கல்விசார், கல்விசாரா மற்றும் மாணவர்களது பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்வதற்கும் அவற்றிற்கு தீர்வு வழங்குவதற்கும் பொருத்தமான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக பீடங்களின் மட்டங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலும் பொறிமுறையொன்று தயாரிக்கப்படும். பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் ஏற்படக்கூடிய தாமதத்தை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அவ் அப் பாடநெறிகளுக்குரிய ஆகக் குறைந்த தகைமைகளை இனங்கண்டு அத்தகைய தகைமைகளைக் கொண்டிருக்கும் அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் தொழிற் கல்வி முறைமையானது படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் விரிவுரை மண்டபங்கள், ஆய்வு கூடங்கள், நூலகங்கள், உணவகங்கள், இணைய வசதிகளை உரிய தரங்களுக்கமைய அமைப்பதற்கு அவசியமான ஒதுக்கீடுகள் வழங்கப்படும். மாணவர் உதவிப் புலமைப் பரிசில்கள், மகாபொல என்பனவற்றை வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் கல்வியைப் தொடர்வதற்கு அவசியமான ஆங்கில மொழி உட்பட ஏனைய அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்து மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங் களிலும் விசேட அலகுகளை நிறுவுதல் மற்றும் குறித்த அலகுகளூடாக சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் பட்டக் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான தொடர்புகள் விரிவாக்கம் செய்யப்படும். உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு சர்வதேச தரம் கொண்டு பல்கலைக் கழகங்களில் பட்டக் கல்வியைத் தொடர்வதற்காக ஒரு வருடத்தில் 200 புலமைப் பரிசில்கள் வழங்கப்படு கின்றன. மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் பகிடி வதை அல்லது வேறு ஏதேனும் துன்புறுத்தல்கள் நிகழ்வதை தடுப்பதற்காக ஒன்றிணைந்த கட்டமைப்பு ஒன்று நிறுவப்படும் என்பதுடன், அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரநிலைகளுக்கு அமைவான கல்வியை வழங்குவதற்கு அவசியமான வசதிகளும் வழங்கப்படும்.

- **ஆராய்ச்சி மற்றும் பட்டப் பின் கல்வி**

பட்டப் பின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான பல்கலைக்கழகமொன்று தாபிக்கப்படும். பட்டப் பின் கல்வி மற்றும் ஆராய்ச்சியினை வலுப்படுத்துவதற்கு அவசியமான நிதி மற்றும் பௌதீக வளங்கள் வழங்கப்படுகின்றன என்பதுடன், தொழிற்றுறை மற்றும் சேவைசார் துறைகளுக்குரிய ஆராய்ச்சிகளை வலுப்படுத்துவதற்காக தனியார் துறையினரின் ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

- **தொழிற் கல்விப் பல்கலைக்கழகம்**

சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் பின்னர் மூன்றாம் நிலைக் கல்விக்குரிய அனுமதிப் பரீட்சையின் சித்தியடைபவர்களுக்காக தொழிற் கல்விப் பல்கலைக்கழக முறைமை ஒன்றும், தாதியர் கல்லூரிகளை ஒன்றிணைத்து தேசிய தாதியர் பல்கலைக்கழகம் ஒன்றும் தாபிக்கப்படும்.

- **தனியார் கல்வி**

உயர் கல்விக்கு அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக் கொள்பவர்களை அரச கல்வி நிறுவனங்களுக்கு அனுமதிக்கக்கூடிய வகையில் அம் முறைமையானது போதுமான அளவில் விரிவுபடுத்தப்படாமையின் காரணத்தால் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், ஏனைய தனியார் மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களுக்கும் பாரியதொரு கேள்வி நிலவுகின்றது. இருப்பினும் தனியார் கல்வி முறைமையின் பண்புத்தரம் அல்லது அவ் அப் பாடநெறிகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களைக் கண்காணிக்கும் பணிகள் இடம்பெறுவதில்லை. தற்போதுள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் பாடநெறிகளை கண்காணிப்பதற்காக அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கான அலகொன்று கல்வி அமைச்சின் கீழ் தாபிக்கப்படும்.

- **வயதுவந்த மூத்தவர்களுக்கான கல்வி**

பிரதேச கல்வி நிறுவனங்கள், நூலகங்கள், கலாசார நிலையங்களுடன் ஒன்றிணைந்த முறையில் கல்வியை வழங்குவதற்காக சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் சமூக கல்வி நிலையங்கள் நிறுவப்படும். பிரஜைகளுக்கு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள், அடிப்படைச் சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளின் பாவனை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகள் வழங்கப்படும்.

- **திறந்த மற்றும் தொலைக் கல்வி**

திறந்த மற்றும் தொலைக் கல்வியினை மூன்றாம் நிலைக் கல்வியின் ஒரு அங்கமாக ஏற்று பல்வேறு தொழில்களில் ஈடுபடும் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூன்றாம் நிலைக் கல்வியை நிறைவு செய்ய முன்னர் முறையான கல்வியிலிருந்து இடைவிலகியவர்களுக்கு மூன்றாம் நிலைக் கல்வி வழங்க வாய்ப்பளிக்கப்படல் வேண்டும். தமது சேவையின் தன்மை மற்றும் புவியியல் காரணிகளை அடிப்படையாக கொண்டு தடைகள் ஏற்படாத வகையில் உயர் கல்விக்கு பிரவேசிக்க கூடிய வகையில் திறந்த மற்றும் தொலைக் கல்வியை விரிவுபடுத்துவதனூடாக இலங்கையின் திறந்த பல்கலைக்கழக வசதிகள் விரிவாக்கம் செய்யப்படும்.

நெறிமுறை சார்ந்த கொள்கைகளை மேம்படுத்துவதுவதற்காகவும் சுத்தமான பௌதீக சூழல் ஒன்றையும் நாடு பூராகவும் விழுமியங்களுடன் கூடிய அர்ப்பணிப்புக்கான அனுகலையும் குறிக்கோளாக கொண்டு ஆரம்பிக்கப் பட்டுள்ள Clean Sri Lanka செயற்றிட்டமானது சமூக, சூழல், நெறிமுறை ஆகிய மூன்று தூண்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. பிரஜைகளிடையே பொறுப்பு, நிலைபேறுடன் கூடிய தன்மை மற்றும் சூழலியல் அறிவு தொடர்பான மனப்பாங்கினை வளப்படுத்தக்கூடிய தூய்மையான சிந்தனைகளை விருத்தி செய்யும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடச் செய்வது இச் செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். இது தனிநபர்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், பொது இடங்களிலிருந்து ஆரம்பமாகும் என்பதுடன் மொத்தத்தில் "சிரிப்பு நிறைந்த மனிதர்கள் வாழும் அழகிய நாடொன்றை" இலக்காக கொண்டு தூய்மையான இலங்கையாக்குவதற்காக முழு நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பலாத்காரமாகவன்றி, "பழக்கம்" ஒன்றாக மாறக்கூடிய மனித மனோநிலையினை ஏற்படுத்தக்கூடிய நிலைபேறுடன் கூடிய நடத்தைகளை மதிக்கும் செயன்முறைகளை உருவாக்குவதும் இதில் உள்ளடங்குகின்றது. இச் செயற்றிட்டமானது ஊழல் எதிர்ப்புக்காக செயற்படுவதல், அரச வளங்களை தவறாக கையாளுவதை இழிவளவாக்குதல் மற்றும் சமூக மற்றும் சுற்றாடல் ரீதியான ஆரம்பத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளூடாக குறித்த எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவது உறுதிப்படுத்தப்படும். இச் செயன்முறையுடன் தழுவியதாக கல்வி அமைச்சின் 2025 மற்றும் எதிர்வரும் காலங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

2025 ஆண்டிற்கான பிரதான/ விசேடமான இலக்குகள்

பண்புத்தரம் மிக்கதொரு கல்விச் செயன்முறையினூடாக ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய மற்றும் பொறுப்பு வாய்ந்த பிரஜைகள் சமூகம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பதன் பொதுக் கல்வியின் பிரதானமான குறிக்கோளாகும். அதன் படி பொதுக் கல்விக்கான கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்வரும் வருடத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- இலவசக் கல்வி உரிமைகளை தொடர்ந்தும் பாதுகாத்தல்
- இலவசக் கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் முக்கிய முன்னுரிமையளித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. (உதா: இலவச கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், இலவச பாடப் புத்தகங்கள், காகிதாதிகள், பாடசாலை காலணிகள், சீருடைகள், மதிய உணவு மற்றும் காப்புறுதி வசதிகள் போன்றன)
- பாடசாலை முறைமையினுள் மனித மற்றும் பௌதீக வளங்களின் பகிர்வில் காணப்படும் சமநிலையற்ற தன்மையினை இழிவளவாக்குதல் மற்றும் பாடசாலை முறைமையின் மீது நம்பிக்கையை உறுதிப்படுத்துதல்.
- கல்வி மறுசீரமைப்புக்குரியதாக கலைத்திட்ட அபிவிருத்தி, ஆசிரியர் பயிற்சி மற்றும் பாடசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உயர் கல்விச் செயன்முறைக்குரிய வசதிகளை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

  - பரீட்சை மைய செயன்முறைக்குப் பதிலாக மாணவர் மையக் கல்வி முறைமை ஒன்றை தயாரித்தல்.
  - மாணவர்களது திறமைகளை மேம்படுத்துதல் மற்றும் அறிவுசார் பொருளாதாரத்துடன் பொருந்தும் வகையில் நிலைபேறுடன் கூடிய கலைத்திட்ட சட்டகம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீளாய்வு செய்தல் மற்றும் கலைத்திட்ட சட்டகம் ஒன்றைத் தயாரித்தல்.
  - அதற்கமைய, கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் பல்வகைமைப்படுத்துதல்.
  - பிள்ளைகளது திறமைகளை மேலும் மெருகூட்டும் வகையில் மாணவர் மைய அடிப்படையில் கலைத்திட்டத்தை திருத்தியமைத்தல்.
  - உரிய ஆசிரியர்களை கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்துவதற்கான திருத்தங்கள் தொடர்பில் அறியப்படுத்துதல்.

  தற்போதளவில் மறுசீரமைப்புக் கிளையின் தலைமையில் தேசிய கல்வி நிறுவகத்தினூடாக, புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்கள் 2026 ஆம் ஆண்டு முதல் அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கலைத்திட்டத்தை பாடசாலை முறைமையினுள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இலங்கை கல்வியியல் பல்கலைக்கழகத்தை தாபித்து அனைத்து தேசிய கல்வியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழக வளாகங்களாக்குவதனூடாக கல்விமானி பட்டம் வழங்கும் நிலைக்கு தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்று, அதற்குரிய சட்ட மூலம் வரைவாக்கம் செய்யப்பட்டு சட்ட வரைஞர்கள் அதற்குரிய அனுமதியை புதிய அரசிடமிருந்து கோரியுள்ளதுடன், இது தொடர்பில் உரிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- பொருளாதாரத்தின் பிரதான தூண்களான விவசாயம், தொழிற்றுறை மற்றும் சேவைத் துறைகளின் தொழிற் சந்தைத் தேவைகள் மற்றும் கல்விக்கிடையே காணப்படும் பொருத்தப்பாடற்ற தன்மையை இழிவளவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கல்வி அமைச்சின் முன்னுரிமையளிக்கப்பட்ட செயற்பாடொன்றாக சூழலியல் நிலைபேறுடன் கூடிய தன்மையினை மேம்படுத்துதல், வீண் விரயத்தை இழிவளவாக்குதல் மற்றும் நெறிமுறை ரீதியான பெறுமதியினை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் Clean Sri Lanka செயற்றிட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் ஆண்டில் அது கல்வித் துறையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதன் படி நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை வருடாந்த செயற்பாடுகளின் கீழ் (பொதுக் கல்வித் துறைக்குரிய அனைத்து நிறுவனங்களிலும்) நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது .அதற்குரிய சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு என்பன தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- கல்வி முறையின் எதிர்கால நடவடிக்கைளின் போது கீழ்வரும் விடயங்களுக்கு முன்னுரிமையளித்து நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கைகள்

- முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கல்வியினை பல்வேறு துறைகளூடாகவும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- ஆரம்பக் கல்வியினை எழுத்தறிவு, எண்கணித அறிவு, படைப்பாற்றல் மற்றும் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்யும் குறிக்கோளுடன் மேற்கொள்ளல்.
- கனிஷ்ட இடைநிலைக் கல்வியின் அறிவு நிலைகள் மற்றும் திறன்களை விருத்தி செய்யக்கூடிய மாணவர் மையக் கல்வியினூடாக பிள்ளைகளது உடலியல் மற்றும் உளவியல் நிலைமைகளுக்குப் பொருத்தமான வகையில் சமூக வாழ்விற்கு அவசியமான நற்பழக்கவழங்க்கங்கள், மனப்பாங்கு மற்றும் நெறிமுறைகளை விருத்தி செய்யக்கூடிய செயற்பாடுகள் உள்ளடங்கிய நிகழ்ச்சித்திட்டங்களூடாக வழங்குதல்.
- இடைநிலை கல்வியை புத்தாக்கம், வாழ்க்கைத் தேர்ச்சி மற்றும் சமூகத் தொடர்புகளுக்கு அவசியமான அறிவு மற்றும் பிரயோகத் திறன்கள் விருத்தியடைந்த சமநிலையுடன் கூடிய பிள்ளைகளை உருவாக்குவதற்கு அவசியமான நிலைபேறுடன் கூடிய கலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.
- தேசிய மட்ட மதிப்பீட்டினை முறைமைப்படுத்துதல்.
- கல்வித் துறைக்குரிய மனித வள மேம்பாடு மற்றும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பினை வலுவூட்டுதல் மற்றும் தொழில் சார் வசதிகளை வழங்குதல்.
- தொழிற் கல்வியை தொழிற் சந்தை மற்றும் உலகளாவிய போக்குகளையும் கருத்தில் கொண்டு உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளூடாக விரிவாக்கம் செய்தல்.
- உதவி பெறும் பாடசாலைகளுக்கான ஒதுக்கீடுகளை அதிகரித்தல் மற்றும் உயர் கல்வியினை சர்வதேச மட்டத்தில் உயர் தொழிற் கல்வியை வழங்கக்கூடிய வகையில் மேம்படுத்தல்
- தனியார் கல்வியைக் கண்காணிப்பதற்கான செயன்முறையினைப் பலப்படுத்துவதனூடாக அதன் பண்புத்தரத்தை மேம்படுத்துதல்.
- நிகழ்கால கல்விக் கொள்கைகளுடன் பொருந்தும் வகையில் பொதுக் கல்வியின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை பிரதானமாக கீழ்வரும் விதமாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.
  - சமூக, பொருளாதாரத் தேவைகளுடன் பொருந்தக் கூடிய வகையில் கல்வி மறுசீரமைப்புக்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்பது தொடர்பில் விமர்சன ரீதியான ஆய்வொன்றில் ஈடுபடல்.
  - அதற்கமைய மனித வள அபிவிருத்தி, கல்வியின் கட்டமைப்பில் மாற்றம் செய்தல் மற்றும் கலைத்திட்ட மறுசீரமைப்பிற்கு முன்னுரிமையளித்தல்.
  - அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி மற்றும் இயலுமை விருத்திப் பாடநெறிகளை நடாத்துதல்.
  - கல்வி முறைமையின் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களுக்கான திட்டங்களை வகுத்தல்.

- கல்வி மறுசீரமைப்புக்களின் பிரதான கட்டத்தை 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடல் மற்றும் 2026 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக கல்வி மறுசீரமைப்பினை முறைமையினுள் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- ஆரம்பக் கல்வியினுள் கீழ்வரும் விசேடமான விடயங்களை 2025 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.
- உட்படுத்தப்பட்ட கல்விச் சூழல் ஒன்றை ஏற்படுத்துதல் மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை ஆரம்பக் கல்வியினுள் விரிவாக்கம் செய்தல்.
  - வாசிப்பு, பல் நிலைக் கற்றலை பரவலாக்கம் செய்தல்
  - ஆரம்ப பிரிவுகளின் பௌதீக வசதிகளை விருத்தி செய்தல்.
  - டிஜிட்டல் புத்தாக்கத்தினூடாக மாணவர்களது வாய் மொழி மூலத் திறன்களை வலுப்படுத்துதல் மற்றும் கணிதத் திறன்களை இலக்காக கொண்டு பரிகார வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
  - ஆரம்பக் கல்விக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான கண்காணிப்புச் சட்டகத்தை வலுப்படுத்துதல்.

- அழகியல் ஆசிரியர் பயிற்சிகள், பிரயோக திறன்களின் விருத்தி, அறிவை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு மேம்பாடு
  - அனைத்து அரச ஆரம்ப பாடசாலைகளிலும் "பாடசாலை உணவு வேலைத்திட்டத்தை" நடைமுறைப்படுத்துதல்.

    மாணவர் காப்புறுதியை நடைமுறைப்படுத்துதல், இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பில் அறியப்படுத்துதல் மற்றும் அரச பாடசாலைகளில் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தொழில்நுட்பக் கல்வியின் செயன்முறை செயற்பாடுகளை முறையாக நடாத்துதல்.
  - புத்தாக்கங்களை கௌரவிக்கும் நிகழ்வுகளை நடாத்துதல்.
  - NVQ தகைமைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியுடன் ஒழுங்குவரிசைப்படுத்தல்.

2025 ஆம் ஆண்டு நிறைவடையும் போது நிறைவேற்ற எதிர்பார்க்கும் வேலைத்திட்டங்கள்

- உலக வங்கியின் அவதானிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் GEMP செயற்றிட்டத்தின் நிறைவுக் கூட்டம் (GEMP Wrap-up meeting)
- Clean Sri Lanka வேலைத்திட்டத்தை கல்வி முறைமையினுள் நடைமுறைப்படுத்துதல்.
- விளைபேறுடன் கூடிய பாடசாலை வலையமைப்பொன்றை உருவாக்குவதற்காக பாடசாலைகளை மீள ஒழுங்குபடுத்தும் வேலைத்திட்டம்

2026 ஆம் ஆண்டிற்குரிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு முதல் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

♦ 2025 ஆம் ஆண்டு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக்கள்

- கல்வி நிர்வாக சேவையின் தரம் III *(திறந்த)* - 113 *(மட்டுப்படுத்தப்பட்ட) - 442*
- இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-1 (ஆ) இற்கு தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்கள் - 4140
- அனைவருக்கும் ஆங்கிலம் வேலைத்திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர்கள் - 2500
- தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு அரச சேவையில் உள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்த்தல் - 22000

(நீதிமன்ற செயற்பாடுகள் நிறைவடைதல் அல்லது அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குட்பட்டு)

- சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர் ஆலோசகர்கள் - 2100
- தமிழ் மொழி மூலமான பெருந்தோட்டப் புறப் பாடசாலை ஆசிரியர் உதவியாளர்கள் - 2935 (இலக்கம் 2389 மற்றும் 2024-06-14 ம் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தல்.) .
- ஓய்வு பெறல், இராஜினாமா மற்றும் சேவையை விட்டுச் செல்லல் காரணமாகவும், அதிபர் சேவைக்கு பதவி உயர்வு பெற்றுக் கொண்ட காரணத்தாலும், ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்த்தல்

03. 2024 ஆம் வருடத்தின் முன்னேற்றம்

கல்வியில் உயர் பங்குபற்றுகைக்காக மாணவர் நலன்புரி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

அண்மைக் காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுக்கு மத்தியிலும் கல்வி பெற வேண்டிய அனைத்து பிள்ளைகளுக்கும் சமத்துவம் மற்றும் பண்புத்தரத்துடன் கூடிய கல்வியை வழங்குவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் படி பொதுக் கல்வி முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும் மாணவர் நலன்புரி வேலைத்திட்டங்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனூடாக இலவசக் கல்விக்கான சம பிரவேச உரிமையினை உறுதிப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

வேலைத்திட்டம்	முதலீடு (ரூ. மில்லியன்)	அனுகூலம் பெறுபவர்களின் எண்ணிக்கை
பாடசாலை சீருடை	* 850,387,966.27 ** 226,057,497.83	4,559,420 மாணவர்களுக்கு பாடசாலை சீருடைத் துணி வழங்கப்பட்டுள்ளது.
பாடப் புத்தகங்கள்	3,936,460	தரம் 1 – 11 அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
கஷ்ட மற்றும் அதிகஷ்டப் பாடசாலை மாணவர்களுக்கு காலணிகள்	நடைமுறைப்படுத்தப் படவில்லை	ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 2500 மில்லியன் தொகை நிதியானது சுகாதார ஆரோக்கிய துவாய் வழங்குதல் மற்றும் மாணவர் களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக மாற்றம் செய்யப்பட்டது.
சுரக்ஷா காப்புறுதி	2,292	அனுகூலங்கள் வழங்கப்பட்ட தொகை ரூ. 93 மில்லியன்கள் என்பதுடன், அனுகூலம் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 4 மில்லியன்
பாடசாலை போஷாக்கு வேலைத்திட்டம்	100	1.4 மில்லியன் மாணவர்களுக்காக பாடசாலை போஷாக்கு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

* அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுத் தேவையின் 20% சதவீத செலவு

* * சீன அரசினால் நன்கொடையாக கிடைக்கப் பெற்ற 80% சதவீத சீருடைத் துணிகளை விடுவித்து விநியோகம் செய்வதற்கான செலவு

புலமைப் பரிசில் வழங்குதல்

புலமைப் பரிசில்	அனுகூலம் பெறும் மாணவர் தொகை	அனுகூலம்
புத்தாக்கம், அழகிய, விளையாட்டு ஆகிய துறைகளில் திறமைகளை வெளிக்காட்டிய திறமையானவர் களுக்கு வழங்கப்படும் சுபக புலமைப் பரிசில்	285 845	25,000 *285 = ரூ.7,125,000.00 25,000*845 = ரூ.21,125,000.00
குறைந்த வருமானம் பெறும் குடும்பங் களைச் சேர்ந்த தரம் 5 புலமைப் பரிசில்தாரர்களுக்கான புலமைப் பரிசில்	125,000 (வருடத்தி ற்கு)	125,000*750*10 = ரூ.937,500,000
க.பொ.த (உயர் தர) தொழில்நுட்பவியல் பாடத் துறையில் கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்	700	ரூ.10,500,000.00
க.பொ.த (உயர் தர) தொழில்நுட்பவியல் பாடத் துறையில் கற்கும் மாணவியர்களுக்கான சுஜாத தியணி புலமைப் பரிசில்	250	ரூ. 3,750,000.00
க.பொ.த (உயர் தர) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான மகாத்மா காந்தி புலமைப் பரிசில்	150 (வருடத்தி ற்கு)	இவ் வருடத்தில் இப் புலமைப் பரிசில் நடைமுறைப்படுத்தப்படவில்லை
க.பொ.த (உயர் தர) கணிதப் பாடத் துறை மாணவர்களுக்கான டயலொக் புலமைப் பரிசில்	30 (வருடத்தி ற்கு)	ரூ.75,000.00

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்வி

வேகமாக மாற்றத்திற்குள்ளாகும் உலகில் நவீன தொழில்நுட்பத்திற்கு இணையாக அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்வி மேம்பாட்டிற்காக 2024 ஆம் ஆண்டிலும் அமைச்சினால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி மேம்பாடு

- செயற்கை அறிவு சார்ந்த மாணவர் சமூகத்தை கல்வி முறைமையில் அறிமுகம் செய்தல்.

முன்னோடி செயற்றிட்டமொன்றாக 100 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அப் பாடசாலை அதிபர்களுகளை அறியப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. அப் பாடசாலைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்குரிய 2 ஆசிரியர்கள் வீதம் தெரிவு செய்து அவர்களுக்கு அவசியமான அறிவை வழங்குவதற்காக ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பாடசாலைக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவையான பொருட்களை வழங்குவதற்காக பாடசாலை மைய வழங்கலாக ஒரு பாடசாலைக்கு ரூ. 100,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய மட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வீரர்கள் போட்டியை ஒழுங்கு செய்தல்.

கீழ்வரும் வகுதிகளின் கீழ் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டது :-

- இளம் கணினி விஞ்ஞானப் போட்டி (YCS) கல்வி அமைச்சு மற்றும் தகவல் தொழில்நுட்ப தொழிற்றுறையாளர்களது சபை ஆகியன ஒன்றிணைந்து ஒழுங்குசெய்யப்பட்டது. இப் போட்டியில் சிறந்த திறமைகளை வெளிக்காட்டிய அரச பாடசாலைகளின் மூன்று மாணவர்களும் ஒரு சர்வதேச பாடசாலை மாணவரும் APICTA போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளனர்.

- தேசிய பாடசாலை மென்பொருள் போட்டி—கல்வி அமைச்சு மற்றும் இலங்கை கணினிச் சங்கம் ஒன்றிணைந்து ஒழுங்குசெய்தன.

- படைப்பாற்றலுடன் கூடிய ஆசிரியர்களுக்கான போட்டி—ஆசிரியர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரி மாணவர்களது ஆக்கங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

- பாதுகாப்பாக இணையத்தை பயன்படுத்துவது தொடர்பில் பாடசாலை சமூகத்தினரை அறியப்படுத்துதல்.

- அனைத்து பாடசாலைகளிலும் பாடசாலை திடீர் கணினி பதிலளிப்பு குழுமங்களுக்கு (School Level Inter-net Safety Readiness Team) அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளை நிறைவு செய்தல்.

- கல்வி அமைச்சினுள் கணினிப் பாதுகாப்பு மற்றும் நிகழ்வுகளுக்கு பதிலளிக்கும் குழுமம் ஒன்றை (EDUCSIRT) நிறுவுவதற்கான முதல் கட்டப் பணிகளை ஆரம்பித்தல்.

- கல்வி அமைச்சு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரி நிறுவனத்துடன் சர்வோதய பியூஷன் நிறுவனம் ஒன்றிணைந்து IT நல்வழி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நேர்மறையான, நெறிமுறைகளுடன் கூடிய மற்றும் வினைத்திறன் மிக்க இணைய மற்றும் சமூக வலைதள பாவனை தொடர்பில் பாடசாலை அதிபர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

- க.பொ.த (உயர் தர) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பாடம் ஒன்றாக கற்பிக்கும் 1000 பாடசாலைகளுக்கு திறன் பலகை வழங்கும் செயற்றிட்டத்திற்குரிய ஆசிரியர் பயிற்சிகளை மேற்கொள்ளல்.

- இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் க.பொ.த (உயர் தர) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக கற்பிக்கும் 1000பாடசாலைகளுக்கு திறன் பலகை வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான அறியப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

- டிஜிட்டல் கருவிகளின் சிறப்பான பாவனை மற்றும் பராமரிப்பு தொடர்பில் பயிற்சிக்கான பயிற்சிக் கையேடு ஒன்றைத் தயாரித்தல் மற்றும் அது தொடர்பில் ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.

- பொதுக் கல்வியை டிஜிட்டல் மயப்படுத்துதல், பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல், திறன் பலகைகளைப் பயன்படுத்தி கலப்புக் கற்றல் செயன்முறைகளைப் பயன்படுத்துதல்.
  - இதற்கான இயலுமை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இயலுமை ஆய்வறிக்கைக்கமைய இலங்கை மற்றும் சீன அரசிற்கிடையே இணக்கப்பாட்டிற்குரிய உதவி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.
  - 500 பாடசாலைகளுக்கு 100 ஒளிபெருக்கி கருவிகளும் பெறும் கருவிகளும் 900 திறன் பலகைகளும் கல்வி அமைச்சிற்கு சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு கலைக்கூடமும் (*Studio)* வலையமைப்பு நெறியாள்கை நிலையம் ஒன்றும் (*Data Centre)* மாநாட்டு மண்டபம் ஒன்றும் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. *(இதற்கான உத்தேச செலவு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்)*
- தகவல் தொழில்நுட்பத் துறைக்குரியதாக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
  - இலங்கையின் பொதுக் கல்வியை டிஜிட்டல் நிலைமாற்றத்திற்குட்படுத்துவதற்கான பயிற்சி செயலமர்வின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர கல்வி வலயம் தெரிவு செய்யப்பட்டதுடன் தகவல் தொழில்நுட்பமல்லாத *100* ஆசிரியர்களுக்கு டிஜிட்டல் கருவிகளின் பாவனை தொடர்பில் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன.
  - தகவல் தொழில்நுட்ப பாடத்தை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் செயற்கை அறிவு தொடர்பான செயன்முறைகளை இணைப்பதற்காக பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்.
  - அதற்காக "Commonwealth Educational Media Center for Asia நிறுவனத்தின் வளவாளர்களது பங்களிப்புடன் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் செயற்கை அறிவு சார்ந்த செயன்முறையினை இணைப்பதற்கான மூன்று நாள் பயிற்சி செயலமர்வொன்றை நடாத்துதல்.

தரவு முகாமைத்துவம் மற்றும் தகவல் முறைமை மேம்பாடு

- தற்போதுள்ள தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் உள்ள ஆசிரியர் மனித வள முகாமைத்துவ முறைமையினைப் பராமரிப்பதற்காக வலயக் கல்வி அலுவலகங்களின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு புதிதாக தரவுகளை உள்ளீடு செய்தல் மற்றும் தரவுகளை இற்றைப்படுத்துதல் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட பயிற்சிகளை *(கோரிக்கையின் பேரில்)* வழங்குதல்

• தற்போதுள்ள தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் உள்ள மனித வள முகாமைத்துவ தகவல் முறைமை (NEMIS Teacher HRM) மூலம் உண்மை நேரத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக API (Application Program Interface) விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் API (Application Program Interface) ஊடாக குறித்த மனித வள முகாமைத்துவ தகவல் முறைமையினை (NEMIS Teacher HRM) தொடர்புபடுத்தி தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற தகவல் முறைமையானது முழுமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நிகழ்நிலை மூலம் ஆசிரியர் இடமாற்றத்திற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் பாடசாலை அதிபர்களுக்கு பிரவேச வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

• தேசிய பாடசாலைகள் ஆசிரியர் இடமாற்ற தகவல் முறைமையினை தானியங்கி முறையாக விருத்தி செய்து பரிசோதிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் ஆசிரியர் இடமாற்றக் கிளையின் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கமைய தயாரிக்கப்பட்ட நிகழ்நிலை தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டுச் செயன்முறைக்காக தகவல் முறைமையினை விருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது வரையில் காணப்பட்ட தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற (NSTT) முறையை மேம்படுத்தி இந்த மேன்முறையீட்டுச் செயன்முறைக்கான தகவல் முறைமையின் விருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கமைய குறித்த ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டுச் செயன்முறைக்கான தகவல் முறைமையானது 2024.12.31 ஆம் திகதியன்று முழுமையாக விருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

- தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் கீழ் உள்ள மனித வள முகாமைத்துவ தகவல் முறைமையினை (NEMIS Teacher HRM) இற்றைப்படுத்துவதற்குரியதாக கம்பளை வலயக் கல்வி அலுவலகத்தின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு நிகழ்நிலை மூலமாக பயனர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது. (அவ் வலயக் கல்வி அலுவலகத்தின் கோரிக்கையின் பேரில்) அதற்கு மேலதிகமாக குறித்த தகவல் முறைமைக்குரிய தரவுகளை இற்றைப்படுத்துவது தொடர்பிலான முன்னேற்ற மீளாய்வுக்காக மேல், தென், மத்திய வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களின் அனைத்து வலயங்களும் உள்ளடங்கும் விதமாக, நிகழ்நிலைக் கூட்டமாக நடாத்தப்பட்டது. மேலும், மேல், வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் அனைத்து வலயங்களும் உள்ளடங்கும் வகையில் விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்காக தேசிய கல்வித் தகவல் முறைமைக்குரிய பயனர் பயிற்சி(User training) வழங்கப்பட்டுள்ளது.

♦ தரவு உத்தியோகத்தர்களது கற்றல் முகாமைத்துவ முறைமை மற்றும் (LMS) தரவு உத்தியோகத்தர்களது கண்காணிப்புச் சட்டகத்தை (Monitoring framework) மேம்படுத்தி பயிற்சி மொடியுல்களை தயாரித்தல்.

- பாடசாலை, கோட்டம், வலயம் மற்றும் பாடசாலை மட்டத்தில் தரவு உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கான கற்றல் முகாமைத்துவ முறைமையின் (LMS) பயிற்சி மொடியின் கட்டமைப்பு மற்றும் தரவு உத்தியோகத்தர்களுக்காக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வரைவாக்கத்தை தயாரிக்கும் பணிகள் 2024.06.30 ம் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டன.

- dot.moe.gov.lk எனும் முகவரியின் கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தரவு உத்தியோகத்தர்களுக்கான இணையத் தளத்தில் தரவு உத்தியோகத்தர்களைப் பதிவு செய்வதற்கான படிவம், (Data Officer self-registration form), பயனர் பிரவேசம் (User login) போன்றனவற்றை மேம்படுத்தி நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அறிக்கைகளை பார்வையிடுவதற்காக பயனர் இடைமுகம் மற்றும் விசாரணைகளை பதிவு செய்வதற்கான "எம்முடன் தொடர்பு கொள்ளவும்" படிவம் ("Contact us" form). உள்ளடக்கப்பட்டது.

- பாடசாலை, கோட்டம், வலயம் மற்றும் மாகாண மட்டத்தில் தரவு உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கு அவசியமான கற்றல் முகாமைத்துவ முறைமைக்கான மேம்படுத்தப்பட்ட சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான பயிற்சி மொடியுல்களைத் தயாரித்தல் மற்றும் பதிப்பாக்கம் செய்தல் தொடர்பில் அட்டுளுகம ஒளி, ஒலிக் கூடத்தில், சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஒலி, ஒளி அலகிலும், தென் மாகாண தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக் கல்வி மையங்களிலும் (ITDLH) கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள், மாகாணக் கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களது வளப் பங்களிப்புடன் தரவு உத்தியோகத்தர்களதும் பங்குபற்றுகையுடன் செயலமர்வு நடைபெற்றது.

- "Establishment of Sri Lanka Education Information Management System and capacity building for data officers 2026 - 2030" எனும் தலைப்பின் கீழ் உத்தியோகபூர்வ அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மேற்பார்வை மற்றும் இயலுமை ஆய்வுக் கற்கைக்குரியதாக முன்கூட்டிய அவதானிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதனுடன் இணைந்ததாக ஊவா மாகாணத்திற்குரிய பாடசாலைகள், கோட்டங்கள், வலயங்கள் மற்றும் மாகாண மட்ட தரவு உத்தியோகத்தர்களை செயன்முறை ரீதியில் அறியப்படுத்துவதற்கான செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. 2024.11.26 மற்றும் 2024.11.27 ஆகிய திகதிகளில் ஊவா மாகாணக் கல்வித் திணைக்களம், பிங்கராவ தமிழ் வித்தியாலயம், பல்லேகெடுவ சுகத மகா வித்தியாலயம், உடுவெல்விடிதலாவ மகா வித்தியாலயம், பண்டாரவளை வலயக் கல்வி அலுவலகம், தனமல்வில கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியனவற்றை உள்ளடக்கி இச் செயலமர்வு நடாத்தப்பட்டது.

- தர வு உத்தியோகத்தர்களை நியமிப்பது தொடர்பில் மேற்பார்வைப் பணிகள் மற்றும் "Establishment of Sri Lanka Education Information Management System and capacity building for data officers 2026 - 2030" எனும் உத்தியோகபூர்வ அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பில் KOICA மற்றும் KEDI நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்றினால் 2024.12.03 முதல் 2024.12.13ம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருந்து அதற்குரிய அடிப்படை மேற்பார்வைகள் மற்றும் இயலுமை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

தொலைக் கல்வி மேம்பாடு

- தேசிய மட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களுக்குரிய (*ICT Hub)* ஆலோசனை சேவை நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக பெறுகைக்கு அவசியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ரூ. *260* மில்லியன் செலவில் *3000* பாடசாலைகளுக்கு *e-* தக்சலாவ கற்றல் உள்ளடக்க முகாமைத்துவ முறைமையில் சேவை வசதிகளை வழங்குவதற்காக சேர்வர்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் கற்றல் முகாமைத்துவ முறைமையில் மேடை வசதிகளை உறுதிப்படுத்துதல்.
- *e* தக்சலாவ மற்றும் நெனச உள்ளடக்க அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பக் குழுக்கள் மற்றும் இலத்திரனியல் உள்ளடக்க விருத்திக்கான கலைத்திட்டத்திற்காக இயலளவினை விருத்தி செய்தல்.
  - 2022 க.பொ.த உயர் தரம் மற்றும் 2023 க.பொ.த சாதாரண தர வினாப் பத்திரத்தை நிகழ்நிலை வினாப் பத்திரம் ஒன்றாக தயாரித்து 164 ஐ உள்ளீடு செய்தல். 98 *Java Script* உள்ளடக்கங்களைத் தயாரித்தல்.
- பாடசாலை முறைமையினுள் தொலைக் கல்வி மற்றும் டிஜிட்டல் கல்விக்குரிய திறமைகளைக் கொண்டுள்ள ஆசிரியர்களை உள்ளடக்கி வளவாளர் குழாம் ஒன்றை உருவாக்குதல்.
  - இதன் கீழ் *108* ஆசிரியர்கள் பயிற்றப்பட்டுள்ளனர்.
- ஆசிரியர் டிஜிட்டல் தேர்ச்சிகலைத்திட்டத்தின் 500 பிரதான பயிற்றுவிப்பாளர்கள் மூன்று மட்டங்களையும் நிறைவு செய்தல்
  - இதன் கீழ் *400* ஆசிரியர்கள் மூன்று பயிற்சி மட்டங்களையும் நிறைவு செய்துள்ளனர்.

டிஜிட்டல் கல்வி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

- மாகாணப் பாடசாலைகளில் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தேசிய பாடசாலைகளில் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பைபர் இணைய இணைப்புக்களுக்குரிய கட்டணப் பட்டியல்களை மீளச் செலுத்துதல்.
- Establish Network Monitoring System நடாத்துதல்

மாற்றமடையும் உலகத்திற்குப் பொருத்தமான பிரஜைகளை உருவாக்குவதாற்காக கல்வி மறுசீரமைப்பு

கல்வி மறுசீரமைப்பு

- 2024 ஆண்டின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மூலம் கோரப்பட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்பட வில்லை என்பதுடன், வருடத்தில் முதல் காலாண்டினுள், நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தாமல், கல்வி மறுசீரமைப்புக்குரிய சில செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன், இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டம் (*SESIP*) மூலம் ரூ. 9 பெறுமதியான நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டம் 2024.07.05 ஆம் திகதியன்று திருத்தம் செய்யப்பட்டது. குறித்த திட்டத்திற்கு 2024.07.07 ஆம் திகதியன்று அனுமதி கிடைக்கப் பெற்றது.

- ஆகையால், 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை உரிய காலப் பகுதியினுள், உரிய நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதுடன், இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு வேலைத்திட்டம் (*SESIP*) மூலமாக கிடைக்கப்பெற்ற ரூ. *9* மில்லியன் பெறுமதியான நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட சில செயற்பாடுகளை மாத்திரமே மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.
- கல்வி மறுசீரமைப்புக் கிளை மூலம், 2024.10.21 ஆம் திகதியுடையதாக *SESIP* நிகழ்ச்சித்திட்டப் பிரதானியின் கோரிக்கையின் பிரகாரம், அவரால் 2024.11.28 ம் திகதியன்று கிளைக்கு உரித்தான ஒதுக்கீட்டிலிருந்து ரூ. *3.72* மில்லியன் ஒதுக்கீடு மீளப் பெறப்பட்டதுடன், அதற்கமைய வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டம் 2024.12.26 ம் திகதியன்று இரண்டாவது தடவையாக திருத்தம் செய்யப்பட்டது.
- நிதி ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமல் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

  - தேசிய கல்விக் கொள்கைச் சட்டகம் (*NEPF*) மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் *2024*ம் ஆண்டில் க.பொ.த *(சா.த)* மற்றும் க.பொ.த *(உ.த)* பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சான்றிதழின் மாதிரிக்கான முதல் கட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதுடன் அவற்றை அச்சிடுவது தொடர்பிலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் மேலதிக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

- பாடசாலை முன்னோடிச் செயற்றிட்டத்திற்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி அமர்வுகள் தேசிய கல்வி நிறுவகத்துடனான ஒருங்கிணைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டன.

  ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்- முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய இடைநிலை பாடசாலை ஆசிரியர்களுக்கான *1*ம் கட்டம்

  ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்- முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய இடைநிலை பாடசாலை ஆசிரியர்களுக்கான *2*ம் கட்டம்

ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்—இடை நிலை பாடசாலை ஆசிரியர்களுக்கான *3*ம் கட்டம்

கல்விசார் கற்றல் செயன்முறை மற்றும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்பார்வை நடைமுறைகள் தொடர்பில் முன்னோடிப் பாடசாலை அதிபர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

- பொதுக் கல்வியை தொழிற் கல்வியுடன் இணைப்பதற்காக திறன் அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகத்துடன் இரண்டு கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- உயர் தர கலைத்திட்டத்தை உயர் கல்வியுடன் தொடர்புபடுத்துவதற்காக பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி நிறுவகத்துடன் கலந்துரையாடல்.
- பிரிவெனாக் கல்விக்கு கல்வி மறுசீரமைப்புக்களை அறிமுகம் செய்வது தொடர்பில் பிரிவெனாப் பிரிவுடன் கலந்துரையாடல்.
- கல்வி நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றையும் அமைச்சரவைக் குறிப்புக்கள் இரண்டையும் அமைச்சரவையில் முன்னிலைப்படுத்துதல்.
- செயலாளரின் (கல்வி அமைச்சு) விசேட அனுமதியுடன் ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்ட,
- கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்களின் நிறைவேற்று பதவி உத்தியோகத்தர்களுக்கு கல்வி மறுசீரமைப்பு மற்றும் தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்தை (*NEPF*) அறிமுகம் செய்வதற்கான அறியப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- கல்வி அமைச்சின் திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாண திட்டமிடல் உத்தியோகத்தர்களுடன் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்.

***SESIP* இலிருந்து ரூ. 9 மில்லியன் பெறுமதியான ஒதுக்கீட்டைப் பெற்றதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- கலைத்திட்ட மறுசீரமைப்பு தொடர்பில் மாகாண உத்தியோகத்தர்களை அறியப்படுத்தும் வதிவிட செயலமர்வினை நடாத்துதல்.
- ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களை உத்தேச கலைத்திட்ட மறுசீரமைப்பு தொடர்பில் அறியப்படுத்தும் செயலமர்வொன்றை நடாத்துதல்.
- புதிய கல்வி மறுசீரமைப்புச் செயன்முறை தொடர்பில் கல்வித் துறை உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல் (கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இலங்கை பரீட்சைத் திணைக்களம்)
- பாடசாலை சபைகளை மீண்டும் வரைபடமாக்குவது தொடர்பில் செயலமர்வொன்றை மாகாண உத்தியோகத்தர்களுடன் இணைந்து நடாத்துதல்.
- புதிய தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பயணப் பாதை மற்றும் நடைமுறைப்படுத்தல் திட்டத்தை வகுப்பதற்கான மூன்று நாள் வதிவிட செயலமர்வொன்றை நடாத்துதல்.
- சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய தனியார் பாடசாலைகளுக்கு தரநிலைச் சான்றுப்படுத்தல் சட்டகம் ஒன்றை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்துதல்.
- தற்போதுள்ள கல்வி முறையினை நிலைமாற்றத்திற்குட்படுத்துவதற்கான செயலுபாயங்களை வகுப்பதற்கான செயலமர்வொன்றை நடாத்துதல்.

இணைப் பாடவிதானம், வழிகாட்டல், ஆலோசனை மற்றும் ஆரம்பக் கல்வி அபிவிருத்தி

விளையாட்டு மற்றும் உடற் கல்வி மேம்பாடு

- பாடசாலை உடற்பயிற்சி செயற்பாடுகளை இற்றைப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தும் செயலமர்வு, நடாத்தப்பட்ட செயலமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்
- எல்லே விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் நடுவர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்
- விளையாட்டுப் பாடசாலை அதிபர்கள் மற்றும் விளையாட்டு ஆசிரியர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம், உடற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், பலு தூக்கும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- பெட்மிண்டன் நடுவர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்
- 2024 ஆம் ஆண்டில் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியில் முதல் கட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு அவசியமான செலவுகளை மாகாணங்களுக்கு ஒதுக்குதல்.
- மாகாண விளையாட்டுப் பணிப்பாளர்களுடன் நடாத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலை விளையாட்டு சுற்றுநிருபத்தை இற்றைப்படுத்துவதற்கான செயலமர்வு
- 2024 ம் ஆண்டிற்கான அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியின் முன்னேற்பாடுகளுக்கான எரிபொருள் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டது.
- 2023 அகில இலங்கை பாடசாலை விளையாட்டு எல்லே போட்டி நடுவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வசதிகளை ஒழுங்கு செய்து தந்த எம்பிலிப்பிட்டி தலைமைத்துவ விருத்தி நிலையத்திற்கு நிதி செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டது.
- அகில இலங்கை அணிப் போட்டிகளுக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அறியப்படுத்துவதற்கான கூட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- அகில இலங்கை பாடசாலை விளையாட்டு 2024 தொடர்பில் நடாத்தப்பட்ட கூட்டத்திற்கான ஒதுக்கீடு வழங்கப்பட்டது

இணைப் பாடவிதான செயற்பாடுகள், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை

- இலங்கை சாரணர் சங்கத்திற்கு ஆசிரியர் மற்றும் மாணவர் பயிற்சிக்காக ஒதுக்கீடுகளை வழங்குதல்.
  - நாட்டின் 9 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- இலங்கை சுகாதார தானம் அமைப்பிற்கு ஆசிரியர் மற்றும் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கீடுகளை வழங்குதல்.
  - நாட்டின் 9 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன

- தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர் தலைவர்களுக்கான மென் திறன்களை விருத்தி செய்வதற்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

  • பாடசாலைகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமைய 450 மாணவர் தலைவர்களுக்காக நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- தேசிய மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டம்—2023 ஐ நடாத்துதல் மற்றும் தேசிய மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சியொன்றை நடைமுறைப்படுத்துதல்.

  • 2023 ஆம் ஆண்டில் தேசிய மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையுடன் ஒன்றிணைந்து பாடசாலை வீதிப் பாதுகாவலர் பதக்க நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்தல் மற்றும் பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கழகங்களை நிறுவுதல் தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களை அறியப்படுத்துதல்.

  • 3 அறியப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- பாடசாலை மாணவர் தலைவர்களை நியமிப்பதற்கான செயன்முறை தொடர்பில் சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேடு ஒன்றைத் தயாரித்தல்.

  • 2025 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு பாடசாலைகளுக்கு வெளியிடப்பட்டுள்ளன. அச்சிடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- பாடசாலை இணைப் பாடவிதான செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்காக சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் கையேடு ஒன்றைத் தயாரித்தல்.

  • சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கையேடு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

- அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் மாகாண, வலய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 09 மாகாணங்களுக்கும் நிதி ஒதுக்கீடு வழங்குதல்.

  • நாட்டின் 9 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் உத்தியோகத்தர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- தொழில் வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் உதவிச் சேவைகளை அறிமுகம் செய்யும் குறிக்கோளுடன் உரிய அனைத்து நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரை இலக்காக கொண்டு தொழில் வழிகாட்டல் கண்காட்சி ஒன்றை நடாத்துதல்.

  • ஒரு தொழில் வழிகாட்டல் கண்காட்சி நடாத்தப்பட்டது.

- பாடசாலை முறைமையினுள் பயன்படுத்துவதற்காக தேசிய கல்வி நிறுவகத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தொழில் பரிசோதனைகள் தொடர்பில் அனைத்து மாகாணங்களதும் தொழில் வழிகாட்டல் ஆசிரியர்களை அறியப்படுத்துதல்.

• கீழ்வரும் தொழில் பரிசோதனை தொடர்பில் வடக்கு மாகாணம் தவிர்த்து ஏனைய அனைத்து மாகாண ஆசிரியர்களையும் அறியப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. (தொழில் விருப்பு பரிசோதனை, பல வித அறிவுப் பரிசோதனை, விருப்பு மற்றும் திறமைப் பரிசோதனை, விருப்பு, திறமை மற்றும் ஆளுமைக் கணிப்பீட்டுப் பரிசோதனை, 16 தொழிற் துறைகளை அடையாளம் காணல்)

- க.பொ.த. சாதாரண தரம் நிறைவு செய்த அனைத்து மாணவர்களுக்கும் உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பில் அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் வழிகாட்டல்களை தயாரித்தல் (Bright Future - ஒளி மயமான எதிர்காலம்")

• Bright Future - ஒளிமயமான எதிர்காலம் வழிகாட்டல் கையேடு சகல மாகாண உத்தியோகத்தர் களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அறியப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 2025 ஆம் ஆண்டினுள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- மாணவர் ஆலோசனை தொடர்பில் மாகாண/ வலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

• ஊவா, மேல், வட மேல் மாகாணங்களைச் சேர்ந்த 60 உத்தியோகத்தர்களுக்கு நடாத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- மாணவர் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டல் அலகுகளின் முகாமைத்துவம் தொடர்பில் கைந்நூல் மற்றும் மாணவர் ஆலோசனை தொடர்பில் ஆசிரியர் கைந்நூல் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு

•கிழக்கு, மேல், தெற்கு, மத்திய மற்றும் சபரகமுவ மாகாணங்களின் மாகாண/ வலய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள், மாகாண சமூக உளவியல் நிலைய உதவி முகாமையாளர்கள் அறியப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதுடம், முன்னோடி செயற்றிட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலை அதிபர்கள் மற்றும் 100 ஆசிரியர்கள் பயிற்றப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- சமூக உளவியல் ஆசிரியர் வழிகாட்டல் கையேடு தொடர்பில் 9 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

சுகாதாரம் மற்றும் போஷாக்கு

- பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம், சுரக்ஷா மாணவர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம், இனப்பெருக்க சுகாதார நிகழ்ச்சித் திட்டம் (UNFPA), சுகாதார மேம்பாட்டு (GEMP) நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார அனை யாடை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆரம்பக் கல்வி மேம்பாடு

- வீட்டுத் தோட்டமும் போஷாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டல்களைத் தயாரித்து அதனை தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் முன்னோடி செயற்றிட்டமொன்றாக நடைமுறைப்படுத்துதல்.
- சிறுவர் நேய பாடசாலைக் கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 400 பாடசாலை அதிபர்களின் அதிபர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- தேசிய பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகளுக்கு பண்புத் தர உள்ளீடுகளை வழங்குதல்.
- தெரிவு செய்யப்பட்ட தேசிய பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுகளுக்கு வகை 1 மற்றும் வகை 2 இற்குரிய மாணவர் மேசை/ கதிரை மற்றும் ஆசிரியர் கதிரைகளை வழங்குதல்.
- ஆரம்பக் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்களது இயலளவினை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- ஆரம்ப பிரிவுகளின் உட்படுத்தல் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆரம்பக் கல்விக்கான பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களது இயலளவினை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- ஆரம்பக் கல்வியை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தேசிய பாடசாலை அதிபர்கள், பிரதி/ உதவி அதிபர்கள்/ பிரிவுத் தலைவர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- "2023 ம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் வினாப் பகுப்பாய்வு தொடர்பில் மாகாண ஆரம்பக் கல்வி பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களை அறியப்படுத்துதல்.
- மாகாண ஆரம்பக் கல்வி பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.
- தேசிய பாடசாலைகளின் ஆரம்ப பிரிவுக் கட்டட திருத்த வேலைகள் மற்றும் புதிய கட்டடங்களை நிர்மானித்தல்.
- தெரிவு செய்யப்பட்ட ஆரம்ப பாடசாலைகளில் வசதிகளை மேம்படுத்துதல்.
  ஆரம்ப பாடசாலைகளின் கட்டடங்களை திருத்தியமைத்தல்.
- ஆரம்ப பாடசாலைகளில் கட்டடங்களை நிர்மாணித்தல்.
- ஆரம்பக் கல்வி மாணவர்களது அடிப்படை மொழி மற்றும் கணிதத் திறன்களை அடிப்படையாக கொண்ட பரிகார கற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் –2024
- மாகாணங்களின் வளவாளர் குழுக்களுக்கு பல் நிலை கற்றல் செயன்முறை தொடர்பில் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

கொள்கை, திட்டமிடல் மற்றும் செயல்திறன் மீளாய்வு

அனைவருக்கும் கல்வி

- நிலைபேறுடன் கூடிய அபிவிருத்திக் குறிகாட்டி இலக்கம் 4.1.1 ஐ அடைவதில் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக உலகளாவிய தேர்ச்சி சட்டகத்திற்கமைய தயாரிக்கப்பட்ட தரம் 3 இல் கற்கும் மாணவர்களது எழுத்தறிவு மற்றும் கணிதத் திறமைகளின் மதிப்பீட்டினை தேசிய மட்டத்தில் நடாத்துதல்.

  • தரம் மூன்று எழுத்தறிவு மற்றும் கணிதத் திறமைகளின் மதிப்பீட்டினை அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துதல், தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

- இலங்கைக்கு விசேடமான நிலைபேறுடன் கூடிய அபிவிருத்திக் குறிகாட்டி இலக்கம் 13 இற்கமைய உரிய பெறுமானங்களைத் தீர்மானித்தல் மற்றும் தரவுகளை அறிக்கைப்படுத்துதல்.

  • உரிய குறிகாட்டிப் பெறுமானங்கள் நடுப் புள்ளிப் பெறுமானத்தை கணிப்பிட்டு உரிய தரப்பினருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

- 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தரம் மூன்று எழுத்தறிவு மற்றும் கணிதத் திறமைகளின் மதிப்பீட்டு அறிக்கை அச்சிடப்பட்டுள்ளது.

  • சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் 1900 பிரதிகள் அச்சிடப்பட்டு கல்வி அமைச்சின் அனைத்து கிளைகள், மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் அனைத்து வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

- க.பொ.த (உ.தர) தொழிற் பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு பாடசாலை அடிப்படையிலான நிதி வழங்கல் வழங்கப்பட்டுள்ளது.

  • 2024/2025 ஆம் கல்வியாண்டிற்குரியதாக தொழிற் பாடத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட நடைமுறைப்படுத்தல் திட்டங்களை எமக்கு அனுப்பிய 26 பாடசாலைகளுக்கு ரூ. 150000 வீதம் நிதிக் கொடை வழங்கப்பட்டது.

- மாணவர்களுக்கு வரவினை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

  • உயர் தர தொழிற் பயிற்சிப் பாடநெறிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட மாணவர்களது வரவு தொடர்பான தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய Google தரவு படிவத்தை பாடசாலைகளுக்கு அனுப்புதல்.

  • பயிற்சிப் பாடநெறியில் பங்குபற்றுகை தொடர்பில் சரியான தகவல்களை முன்னிலைப்படுத்திய 1713 மாணவர்களுக்கு வரவினை அடிப்படையாக கொண்ட நாளாந்த மாணவர் கொடுப்பனவு வழங்கி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டில் உயர் தர தொழிற் பாடத்துறையில் அனுமதிக்கப்பட்ட 10099 மாணவர்கள் 18 தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

- தொழிற் பயிற்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

  • 13 தொழிற் பயிற்சி நிலையங்களுக்குரிய பாடநெறிக் கட்டணங்கள் செலுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தொழிற் பாடத்துறை மாணவர்களை இணைத்துக் கொள்ளக்கூடிய வகையில் நிறுவனங்களின் எண்ணிக்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

  • தொழிற் பயிற்சி வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் முன்னிலைப்படுத்தப்பட்டு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

  • புதிய நிறுவனங்களை தெரிவு செய்தல் தொடர்பில் 4 கலந்துரையாடல் நடாத்தப்பட்டுள்ளன.

  • அங்கவீனமுற்ற மாணவர்களுக்கு கல்வி அமைச்சின் கீழ் உள்ள வெனிவல்கொல சிஷ்யோதா பயிற்சி நிலையத்தினுள் வசதிகளை அபிவிருத்தி செய்து பாடநெறிக்குரிய வசதிகளை வழங்கி பயிற்சிப் பாடநெறியினை ஆரம்பித்தல்.

- பாடசாலை மற்றும் நிறுவன மேற்பார்வை செய்யப்பட்டன.

  • 28 பாடசாலைகள் மற்றும் 26 நிறுவனங்களில் மேற்பார்வைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மனித வள அபிவிருத்தி

- அமைச்சின் ஏனைய நிறுவனங்கள் மற்றும் தேசிய பாடசாலை உத்தியோகத்தர்களது அறிவை இற்றைப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- உள்நாட்டு மற்றும் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு புலமைப் பரிசிலுடன் கூடிய பட்டப் பின் பட்டம் கற்கும் உத்தியோகத்தர்களுக்கு நிதி வழங்குதல்.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்கு, தரம் III இலிருந்து தரம் II இற்கு மற்றும் தரம் I இலிருந்து விசேட தரத்திற்கும் இலங்கை அதிபர் சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்கும், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்கும் பதவி உயர்வு பெறவுள்ள உத்தியோகத்தர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் திறந்த மற்றும் விசேட தரம் மற்றும் ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் இலங்கை அதிபர் சேவைக்குரிய திசைமுகப் படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- பணிக்குழுவினருக்கான பயிற்சி மற்றும் அறியப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

கொள்கை மற்றும் திட்டமிடல் கிளை

- GEM செயற்றிட்டத்தின் கீழ் 500 பாடசாலைகள் ஆங்கில மொழிக் கற்றல் பேறுகளை விருத்தி செய்யும் இலக்குகளை அடைந்துள்ளன.
- 500 பாடசாலைகளில் கணிதப் பெறுபேறுகள் விருத்தி செய்வதற்குரிய இலக்குகளை அடைந்துள்ளன.
- 10,11 தரம் *10, 11* ஆங்கில மொழி மற்றும் தரம் *2* மற்றும் *3* கணித டிஜிட்டல் கற்றல் சாதனங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- தரம் *3* மற்றும் *5* ஆங்கில மொழி மற்றும் தரம் *4* மற்றும் *5* கணிதப் பாட டிஜிட்டல் கற்றல் சாதனங்கள் விருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- *75%* சதவீதமான கல்வி வலயங்களில் பாடசாலை மைய ஆசிரியர் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் எனும் இலக்கு பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
- 3000 பாடசாலைகளில் உள்ளக மற்றும் வெளிவாரி சமூக அடிப்படையிலான பாடசாலை பண்புத்தர உறுதிப்பாடு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கண்காணிப்பு மற்றும் செயல்திறன் மீளாய்வு

- கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகத்தின் அடையாளம் காணப்பட்ட குறிகாட்டிகளை தயாரித்தல்/ கணிப்பிடுதல் மற்றும் திட்டமிடல் செயன்முறைக்காக அதன் பயன்பாடு தொடர்பில் தொழில்நுட்ப அமர்வொன்றை நடாத்துதல்.
- கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகத்திற்கமைய மத்திய மாகாணத்தின் *09* உத்தியோகத்தர்களுக்கான நிகழ்நிலை அமர்வுகளை நடாத்துதல்.
- NEMIS ஐ அடிப்படையாக கொண்ட கண்காணிப்பு மாதிரியை வைத்து பயனர் வழிகாட்டலில் திருத்தங்களை செய்தல்.
- வருடாந்த செயல்திறன் அறிக்கை மற்றும் வரவு செலவு முன்னேற்றங்கள் தொடர்பில் முன்னேற்ற அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய குழுக் கூட்டங்களை நடாத்துதல்.
- கல்வி அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்படும் பேரளவிலான மற்றும் நடுத்தர அளவிலான செயற்றிட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகள்
- நடுத் தவணைக்கால மற்றும் வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டத்தை கண்காணிப்பதனூடாக எதிர்கால கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

- *செயலுபாயத் திட்டங்களுக்கான அமர்வுகளை நடாத்துதல், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களை நடாத்துதல்.*

  • *மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கல்வி ஆராய்ச்சிகள் தொடர்பில் மாகாண ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயலுபாய ரீதியிலான திட்டங்களை தயாரிப்பதற்கான முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் அறியப்படுத்துதல்.*

- ***ஆராய்ச்சி முன்மொழிவுகள், கட்டுரைகள் மற்றும் கல்வி அறிக்கைகளை கண்காணித்தல், மீளாய்வு மற்றும் மதிப்பீடு***

  • *கல்வி வாண்மையாளர்களுக்கு அவர்களது ஆராய்ச்சிகளை வெளியிடுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை மீளாய்வு செய்தல் மற்றும் கல்விச் சஞ்சிகைக்காக கிடைக்கப் பெற்ற 10 கட்டுரைகளையும் மீளாய்வு செய்தல்.*

- ***பயிற்சி மற்றும் வாண்மைத்துவ விருத்திக்கான வாய்ப்புக்களை வழங்குவதனூடாக கல்வி ஆய்வுகளில் ஈடுபடும் பங்குதாரர்களது இயலளவினை விருத்தி செய்தல்.***

  • *ஆய்வுக் கற்கைகளின் கண்டறிதல்களை பிரபல்யப்படுத்தும் ஊடகம் ஒன்றாக பாடசாலை மாணவர் ஆராய்ச்சிக் குழுக்களின் பொறுப்பாசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான நிகழ்நிலை அமர்வுகளை நடாத்துதல்.*

  • *தேசிய நூலகங்கள் மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையுடன் இணைந்து ஆராய்ச்சியாளர்களுக்கான கல்விசார் கட்டுரைகளை எழுதுதல் தொடர்பில் 3 நாள் சான்றிதழ் பாடநெறி ஒன்றை நடாத்துதல்.*

- ***ஆராய்ச்சி வாரம்/ தின செயற்பாடுகளை நடாத்துதல்.***

  • *சாட்சிகளை அடிப்படையாக கொண்டு தீர்மானம் எடுக்கும் கலாசாரம் ஒன்றை பாடசாலை முறைமையினுள் உருவாக்குவதனூடாக அறிவுடன் கூடிய எதிர்காலத்தை நோக்கி தேசத்தின் பாடசாலை மாணவர்களைக் கொண்டு செல்லும் குறிக்கோளுடன் நடைமுறைப்படுத்தப்படும் "மாணவர் ஆராய்ச்சியாளர்கள்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறுதியாக தெரிவு செய்யப்பட்ட மாணவர் ஆராய்ச்சிக் குழுவை கௌரவித்தல் மற்றும் மாணவர் ஆராய்ச்சி மாநாட்டினை (symposium) நடாத்துதல்.*

  • *"பாடசாலை ஆராய்ச்சி வாரத்துடன்" இணைந்ததாக முதல் தடவையாக 2024 பாடசாலை ஆராய்ச்சி தினம் தேசிய மட்டத்தில் 2024.10.09ம் திகதியன்று கொழும்பு ஆனந்த கல்லூரியில் நடாத்தப்பட்டது.*

  • *மாணவர்களது ஆராய்ச்சி முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கான அமர்வுகளை நடாத்துதல்.*

- ***ஆராய்ச்சித் துறைகளை தீர்மானிப்பதற்காக தேவைகள் தொடர்பில் மதிப்பீடு செய்து ஆராய்ச்சி முன்னுரிமைகளை இனங்காணல்.***

  • *பொதுக் கல்வி முறைமையின் பண்புத்தர விருத்திக்கு அவசியமான காலத்துடன் முக்கியத்துவம் பெறும் ஆராய்ச்சிக் கற்கைத் துறைகளை இனங்காண்பதற்காக மாகாண மற்றும் வலயக் கல்வி உத்தியோகத்தர்களுடன் சிந்தனைக் கிளரல் அமர்வுகள் மற்றும் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.*

• **ஆராய்ச்சிக் கண்டறிதல்களை பிரசுரித்து வெளியிடுதல், விநியோகித்தல், மாநாடுகளை நடாத்துதல் மற்றும் ஆராய்ச்சி அடிப்படையில் கல்விச் சாதனங்களை விருத்தி செய்தல்.**

• மாணவர் ஆராய்ச்சிக் கற்கைகளின் கண்டறிதல்களை வெளியிடுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக மாணவர் ஆராய்ச்சி ஜேர்னல் நூலை 1500 பிரதிகள் கொண்டதாக அச்சிட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

• கல்வி ஆராய்ச்சி சஞ்சிகையின் 10 வது இதழின் 2000 பிரதிகளை அச்சிடுதல்.

♦ **கல்வி ஆராய்ச்சி வழிகாட்டல்களை மும்மொழிகளிலும் தயாரித்தல்.**

• கல்வி ஆராய்ச்சி வழிகாட்டல்களை உள்நாட்டு மீளாய்வாளர்கள் இருவரைக் கொண்டு மீளாய்வு செய்தல்.

♦ **வழிகாட்டல் தொடர்பிலும் பண்புத்தரம் மிக்க ஆராய்ச்சி தொடர்பிலும் தொழில்நுட்ப ரீதியிலான பயிற்சி அமர்வுகளை நடாத்துதல்.**

• கண்காணிப்பு மற்றும் செயல்திறன் மீளாய்வுக் கிளையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப் பட்ட இந் நிகழ்ச்சிதிட்டம் நவம்பர் 20, 21 மற்றும் 22 ஆம் திகதிகள் நடைபெற்றதுடன், அதன் போது தேசிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகம் மற்றும் மாகாண மதிப்பீட்டுச் சட்டகத்தை ஒன்றிணைப்பது தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அது சார்ந்து மாகாண மட்டங்களில் மேற் கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சிக் கற்கைகள் இனங்காணப்பட்டன.

♦ **SESIP நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ச்சிக் கற்கைகளை நடாத்துதல் மற்றும் வெளி நிறுவனங்களுடாக அவற்றை மேற்கொள்ளல்.**

• 3 ஆய்வுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 2 ஐ வெளி நிறுவனங்களுடாக மேற்கொள்வதற்கு கல்விச் செயலாளரின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய பெறுகைச் செயற்பாடுகளுக்குரிய முதல் கட்ட பணிகளை மேற்கொள்வதற்காக உரிய விலைமனுக் கோரல் ஆவணங்களில் உள்ளடக்குவதற்கான சேவை நிபந்தனைகள் அடங்கிய பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் கிளை

♦ வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களது தகவல்களை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.

• 101 பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

♦ கௌரவ கல்வி அமைச்சர் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள ராஜாங்க அமைச்சர்களின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு பயணங்கள் தொடர்பான செயற்பாடுகள்

♦ கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களது உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான செயற்பாடுகள்

• 279 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களில் பங்கேற்றுள்ளனர்.

- இலங்கையின் பொதுக் கல்வி முறைமைக்கு சாதகமான அனுகூலங்களைப் பெற்றுத் தரக்கூடிய இரு தரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பிலான செயற்பாடுகள்
- Commonwealth Learning இற்கான வருடாந்த சந்தா கட்டணம் செலுத்துதல் (USD 30000)
- சர்வதேச நிபுணர்களுக்கு கல்விசார் விடயங்களுக்காக இலங்கைக்கு வருகை தரும் போது இலவசமாக வீசா வழங்கும்படி வெளிநாட்டு விவகார அமைச்சிற்கு பரிந்துரைக் கடிதங்களை அனுப்பிவைத்தல்.
- இலங்கையின் கல்வி நிறுவனங்களுக்கு வெளிநாட்டு பிரஜைகளை ஆட்சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் வெளிநாட்டு விவகார அமைச்சு/ குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு அவதானிப்புக்களை முன்வைத்தல்.
- கல்வி/ பாடசாலை மாணவர்களது பண்புத் தரத்தை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளல். (அனைத்து உதவிகள் மற்றும் செயற்றிட்டங்களையும் குறித்த உதவி வழங்கும் நிறுவனங்கள் நேரடியாக பாடசாலைகளுக்கு வழங்கும் வகையில் ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

கல்விப் பண்புத்தர விருத்தி

கணிதக் கல்வி மேம்பாடு

- கற்றல் சூழலை மேம்படுத்துவது தொடர்பில் கொள்கைகளை தயாரித்தல், திட்டமிடல் மற்றும் மீளாய்வு
- கணிதக் கல்வி தொடர்பில் ஆராய்ச்சிக் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்துதல்.
- 150 ஆசிரியர்களது கணிதம் சார் சிந்தனைத் திறன்களை விருத்தி செய்தல்.
- 142 வளவாளர்களுக்கான கணிதப் பரிகாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- செயற்றிட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட 500 பாடசாலைகளில் தரம் 3-11 வரையான மாணவர்களது அடைவு மட்டத்தை அளவிடல்.
- மேல், சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளின் 540 தரம் 6 மாணவர்களுக்காக STEAM நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- NCOE ஐச் சேர்ந்த 200 ஆசிரியர் மாணவர்களுக்காக "விமர்சன அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்கள்", முன்கூட்டிய கற்றல் வகுப்பறை நிகழ்ச்சித்திட்டங்கள்" மற்றும் "செயற்பாடுகளை அடிப்படையாக கொண்ட கணித நிகழ்ச்சித்திட்டம்" ஆகியன நடாத்தப்பட்டன.

- அபிவிருத்தி அடிப்படையில் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- மாணவர்களது உயர் மட்ட சிந்தனைத் திறன்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- ஆசிரியர்களது உயர் மட்ட சிந்தனைத் திறன்களுக்கான அனுகுமுறைகளை விருத்தி செய்வதற்கு வாய்ப்பளித்தல் (200 ஆசிரியர்களுக்கு)
- "ஆசிரியர் மாணவர் அறிவுச் சுவர் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது"
- 386 கணித ஆசிரியர்களுக்கு உயர் தர கணிதப் (07) பாடங்களின் மேம்பாட்டுக்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- 6 - 11 தரம் 6-11 மாணவர்களுக்காக "புதுமையான கற்றல் கற்பித்தல்" நடைமுறைகளை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தெரிவு செய்யப்பட்ட 750 பாடசாலைகளில் புத்தாக்க ஆய்வுகூட செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- சர்வதேச ஒலிம்பியாட் மற்றும் அகில இலங்கை கணிதப் போட்டிகள் நடாத்தப்பட்டன.
  - தேசிய ஒலிம்பியாட் போட்டிகள் (cat I,II,III) நடாத்தப்பட்டன.

தங்கம் - 9 வெள்ளி - 19 வெண்கலம்- 29 திறமைச் சித்தி - 143

சர்வதேச ஒலிம்பியாட் போட்டிகள்

ii ஆம் வகுதி

1 வெள்ளிப் பதக்கம்

2 வெண்கலப் பதக்கம்

4 திறமை

iii ஆம் வகுதி

2 திறமை வகுதி I

1 வெள்ளிப் பதக்கம்

10 வெண்கலப் பதக்கங்கள்

- அகில இலங்கை கணிதப் போட்டிகளை நடாத்துதல்

விஞ்ஞானக் கல்வி மேம்பாடு

- தெரிவுசெய்யப்பட்ட 190 பாடசாலைகளுக்கு அவசியமான ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல்
- 20 விஞ்ஞான கள ஆய்வு நிலையங்களுக்கும் ரூ. 50,000 வீதம் ஒதுக்கீடு வழங்குதல்.
- "STEAM student camp Star Gate" விஞ்ஞான மேம்பாட்டு புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (ஆசிரியர்களுக்கான முன்னோடி நிகழ்ச்சித்திட்டமாக) 08 மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கும் ரூ. 275000 வீதம் நிதி ஒதுக்கீடு வழங்குதல்.
- 22 கள நிலைய முகாமையாளர்களுக்கும் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தரம் 6-11 விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சி மைய கலப்பு மற்றும் உண்மை அனுபவ கற்றல் தொடர்பில் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- 120 ஆய்வுகூட உதவியாளர்கள்/ ஆய்வுகூட பணியாளர்களுக்கு இயலளவு விருத்திச் செயலமர்வுகளை நடாத்துதல்.
- அனைத்து வலயங்களதும் விஞ்ஞானப் பாடப் பணிப்பாளர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
- முந்தைய வருடத்திற்குரிய வவுச்சர்கள் (2023 இற்குரிய பொறுப்புக்கள்)
- தரம் 6-11 விஞ்ஞானப் பாட ஆசிரியர்களுக்கு புதிய நடைமுறைகள் தொடர்பில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- "அறிவுச் சுவர்" கருத்தரங்குகளுக்காக உயிரியல், இரசாயனவியல், மற்றும் பௌதீகவியல் வினாத் தாள்களை தயாரித்தல் மற்றும் "அறிவுச் சுவர்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் A/L ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச கனிஷ்ட ஒலிம்பியாட் போட்டிகளுக்கான வினாப் பத்திரங்களைத் தயாரித்தல், மாணவர்களைத் தெரிவு செய்தல் மற்றும் சர்வதேச ஒலிம்பியாட் போட்டிகளில் பங்கேற்றல்

ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிக் கல்வி மேம்பாடு

- RESC பணிக்குழுவினருக்கான கலப்புக் கற்றல் முறைகளை (Blended lerning method) விருத்தி செய்வதற்கான இயலளவு விருத்தி செயலமர்வுகளை நடைமுறைப்படுத்துதல்.
- "English Score" ஐப் பயன்படுத்தி ஆங்கில ஆசிரியர்களது ஆங்கில மொழித் தேர்ச்சி மட்டத்தை பரிசோதித்தல் தொடர்பில் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல்.
- வெளிநாட்டு மொழி ஆசிரியர்களை பயிற்றுவித்தல் (பிரெஞ்சு, கொரியா, சீனா, யப்பான், ஜெர்மன், ஹிந்தி, ரஷ்யா)
- க.பொ.த சா.த/ உ.தரத்தை நிறைவு செய்த மாணவர்களுக்கான ஆங்கில மொழி விருத்தி நிக்ழ்ச்சித்திட்டங்கள்

- பிரித்தானிய கவுன்சிலின் பங்குபற்றுகையுடன் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களுக்கான ஆராய்ச்சி மாநாடு ஒன்றை (SELTEC) நடாத்துதல்.
- மாகாண மட்டத்தில் குறைவான அடைவு மட்டங்களை உடைய பாடசாலைகளின் க.பொ.த சா.த மற்றும் உயர் தர மாணவர்களுக்கான (Total Immersion) எனும் 2 நாள் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 9 மாகாணங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்தல்.
- ஆரம்ப பிரிவு ஆங்கில மொழி நடை விருத்திக்காக படங்கள் உள்ளடங்கிய அகராதி ஒன்றைத் தயாரித்தல்.
- தரம் 2 ஆசிரியர்களுக்கு ABOE நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் அறியப்படுத்தும் செயலமர்வுகளை நடாத்துவதற்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் (மேல் மற்றும் வடமேல்)
- EFA இற்குரிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- ஆங்கில மொழி மேம்பாட்டு வேலைத்திட்டம் (ELLE) நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளில் காணப்படும் சிறந்த நடைமுறைகளை இனங்கண்டு அத்தகைய பாடசாலைகளுக்கு நிதிக் கொடை வழங்கல்

தொழில்நுட்பக் கல்வி மேம்பாடு

- உயர் தரத்தில் இப் பாடத்தைக் கற்கும் நாட்டின் அனைத்து மாணவர்களுக்காகவும் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் நிர்மாணத் தொழில்நுட்ப பாடங்களுக்குரிய மாதிரி வினாப் பத்திரங்களை தயாரிக்கும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- மனைப் பொருளியல் மாதிரி வினாப் பத்திரங்களை தயாரிக்கும் பணியில் பங்கேற்கும் 10 ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சி செயலமர்வினை நடாத்துதல்.
- பொறியியல் தொழில்நுட்ப பாடத்தைக் கற்பிக்கும் 24 ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை (செயற்கை அறிவு, ரோபோ தொழில்நுட்பம்) நடாத்துதல்.
- உயர் தரத்தில் இப் பாடத்தை கற்கும் நாட்டின் அனைத்து மாணவர்களுக்காகவும் நிர்மாணத் தொழில்நுட்ப பாட மாதிரி வினாத் தாள்களை தயாரிக்கும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- உயர் தரத்தில் இப் பாடத்தைக் கற்கும் நாட்டின் அனைத்து மாணவர்களுக்காகவும் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மாதிரி வினாப் பத்திரங்களை தயாரிக்கும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- மனைப் பொருளியல் போட்டிக்காக 09 மாகாணங்களிலிருந்தும் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்காகவும் அகில இலங்கைப் போட்டிக்கான வினாப் பத்திரத்தை தயாரித்தல்.

- சாதாரண தரத்தில் இப் பாடங்களைக் கற்கும் நாட்டின் அனைத்து மாணவர்களுக்காகவும் சாதாரண தர மனைப்பொருளியல் பாடத்திற்கான மாதிரி வினாப்பத்திரங்களைத் தயாரிப்பதற்கான செயலமர்வினை நடாத்துதல்.
- சாதாரண தரத்தில் இப் பாடங்களைக் கற்கும் நாட்டின் அனைத்து மாணவர்களுக்காகவும் சாதாரண தர நிர்மாண தொழில்நுட்பவியல் பாடத்திற்கான மாதிரி வினாப்பத்திரங்களைத் தயாரிப்பதற்கான செயலமர்வினை நடாத்துதல்
- புத்தாக்க ஆய்வுகூடங்களுடன் கூடிய 750 பாடசாலைகளின் அனைத்து மாணவர்களுக்கும் Portfolio ஐ அச்சிடல்
- புத்தாக்க ஆய்வுகூடங்களுக்குப் பொறுப்பான 71 ஆசிரியர்களுக்கும் புத்தாக்க ஆய்வுகூடப் பொறுப்பாசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.
- புத்தாக்க ஆய்வுகூடங்களுக்குரிய பொறுப்பாசிரியர்கள் 82 பேருக்கு புத்தாக்க ஆய்வுகூட பொறுப்பாசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை (வட மேல் மாகாணம்) நடாத்துதல்.
- உயர் தரத்தில் இப் பாடத்தைக் கற்கும் நாட்டின் அனைத்து மாணவர்களுக்காகவும் கல்வி மறுசீரமைப்பின் கீழ் வெளியிடப்படவுள்ள மொடியுல் பரிசோதனை மற்றும் நிர்மாண தொழில்நுட்பவியல் பாடத்திற்கான மாதிரி வினாப் பத்திரங்களை தயாரித்தல்.
- அகில இலங்கைப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்படும் 09 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 270 மாணவர்களுக்கிடையே அகில இலங்கை பாடசாலை ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப் போட்டிகளை நடாத்துதல்.

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கல்விக் கிளை

- அகில இலங்கை சிங்கள/ தமிழ் மொழிப் போட்டிகளை (எழுத்து மூல/ வாய் மொழி மூல) நடாத்துதல்
- சிங்கள, தமிழ் கற்றல் கற்பித்தல் சாதனங்களைத் தயாரித்தல்
- "ஆசிரியர் மாணவர் அறிவுச் சுவர்" கருத்தரங்குகளை நடாத்துதல்.
- அகில இலங்கை சமூக விஞ்ஞானப் போட்டிகளை (எழுத்து மூல/ வாய் மொழி மூல) நடாத்துதல்.

இரு மொழிக் கல்வி மேம்பாடு

- 50 இரு மொழி ஆசிரியர்களுக்கு பட்டப் பின் டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்காக புலமைப் பரிசில் வழங்குதல்.
- இரு மொழி ஆசிரியர்களுக்கு CLIL தொடர்பில் குறுகிய கால பாடநெறியைத் தொடர்வதற்கு புலமைப் பரிசில் வழங்குதல்
- மாகாண மட்டத்தில் ஆங்கில மொழி மூல ஆசிரியர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்
- இரு மொழிக் கல்விக்குரிய வளவாளர் குழாம் ஒன்றை நிறுவுதல்.
- மாகாண மற்றும் வலய இரு மொழி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

- ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களை வலுவூட்டுதலின் கீழ் (சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம்) பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வுகள்
- மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் அமர்வுகளுக்காக நிதி ஒதுக்கீடு மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்.
- இரு மொழிக் கல்வி தொடர்பில் செயல் ரீதியான ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான நிதி அனுசரனைகளை வழங்குதல்.
- இரு மொழிக் கல்வி தொடர்பில் சர்வதேச மாநாடு ஒன்றை ஒழுங்கு செய்தல் (வெளிநாட்டு நிபுணர்களது வளப் பங்களிப்பைப் பெற்று)
- இரு மொழி மாணவர்களது முன்வைப்பு திறனை மேம்படுத்தும் குறிக்கோளுடன் மாகாண மட்டத்தில் இரு மொழிப் போட்டிகளை நடாத்துதல்.
- தேசிய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் கருத்தரங்குகள்/ சான்றிதழ் வழங்கும் வைபவங்களை ஒழுங்கு செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்தல்.
- க.பொ.த (உ.த) மற்றும் க.பொ.த (சா.த) மாதிரி வினாப்பத்திரங்களை தயாரித்தல் (மாகாண மட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல்.)
- க.பொ.த (உயர் தரத்திற்கு) இணையவழி கருத்தரங்குகளை (webinars) நடாத்துதல். (மாகாண மட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல்.)
- தரம் 5 மாணவர்களை இரு மொழிக் கல்வி தொடர்பில் ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக வளவாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்.
- தரம் 5 மாணவர்களை இரு மொழிக் கல்வி தொடர்பில் ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்குரியதாக ஆரம்பக் கல்வி மற்றும் ஆங்கிலப் பாட ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் (மாகாண மட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல்.) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை இரு மொழிக் கல்வி தொடர்பில் ஊக்குவிப்பதற்கான முகாம்களை நடாத்துதல் (மாகாண மட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல்..)
- இரு மொழிக் கல்விப் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மாகாண உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்களை அறியப்படுத்தும் அமர்வுகளை நடாத்துதல். (மாகாண மட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல்.)
- அனைத்து பாடசாலைகளிலும் தரம் 6 இல் ஆங்கில மொழி மூலத்தில் ICT ஐ அறிமுகம் செய்தல்.
- பாடம் சார் வசனங்களை உள்ளடக்கிய கைந்நூலை அச்சிடல்
- Toast Masters இளம் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் (NCOEs இல்) மற்றும் புதிதாக ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 50 பாடசாலைகளில் Gavel Clubs களை நிறுவுதல்

- Pre- service and சேவை நிலைய ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்—புதிதாக ஆட்சேர்க்கப் பட்ட 1100 ஆசிரியர்களுக்காக பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை British Council உடன் இணைந்து நடாத்துதல்.
- இரு மொழிப் பாடசாலை வகுப்பறை மேற்பார்வை
- முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் மாகாண இரு மொழி ஒருங்கிணைப்பாளர்களுடன் மேற்பார்வைக் கருவிகளைத் தயாரிக்கும் செயலமர்வு
- இரு மொழிப் பட்டப் பின் டிப்ளோமாவைத் தொடருக் ஆசிரியர்களுடன் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் அவர்களது செயன்முறை ரீதியிலான ஆராய்ச்சிகளை (Action Researches) தயாரிப்பதற்கான செயலமர்வு
- இரு மொழிக் கல்வி சுற்றுநிருபத்தை அறிமுகம் செய்வதற்கான அறியப்படுத்தல் செயலமர்வு களை நடாத்துதல்.
- தேசிய கல்வியியல் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள், பயிலுனர் ஆசிரியர்கள், ஆசிரியர் நிலைய முகாமையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு CLIL அணுகுமுறையை அறிமுகம் செய்வதற்கான அறியப்படுத்தல் செயலமர்வுகளை நடாத்துதல்.
- பாடசாலை மேற்பார்வைக் கருவியொன்றைத் தயரிப்பதற்கான பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்.
- இரு மொழி மாணவர்களுக்கான பாடம் சார் வசனங்கள் உள்ளடங்கிய கைந்நூல் ஒன்றைத் தயாரித்தல்.

சமயம் மற்றும் விழுமியக் கல்வி

- O/L இற்குரிய சமயப் பாடங்களுக்கு 64 பின்னூட்டல் வினாப்பத்திரங்களை தயாரித்தல்.
- 40 புள்ளிகளுக்கு குறைவான சாதாரண தர மாணவர்களுக்கான நிகழ்நிலை பின்னூட்டல் கருத்தரங்குகளை நடாத்துதல்.
- அனைத்து சமயப் பாடங்களுக்கும் க.பொ.த (சா.த) மாணவர்களுக்கான மாதிரி Google மாதிரிப் படிவங்களைத் தயாரித்தல்.
- மாணவர்களுக்கான உள விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- சமயப் பாடங்கள் தொடர்பில் உத்தியோகத்தர்கள், ஆசிரியர் ஆலோசகர்களை அறியப்படுத்துதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு செயலமர்வுகளை நடாத்துதல்.
- வெசாக் வைபவம், நத்தார், நவராத்திரி வைபவம், மீலாதுன் நபி அனுஷ்டிப்புக்கான நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.
- பாடசாலை மாணவர்களுக்கு கங்காரம விகாரையின் பங்களிப்புடன் வெசாக் கூடுகளை செய்யும் நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்
- சமய ஆலோசனை சபைக் கூட்டங்களை நடாத்துதல்.

- மாணவர்களுக்கு சமயப் பாடங்கள் தொடர்பில் உயர் தர வினாக்களை பகுப்பாய்வு செய்து பயன்படுத்தி உயர் தரத்திற்கான கருத்தரங்குகளை நடாத்துதல்
- அனைத்து சமயப் பாடங்களுக்காகவும் க.பொ.த உயர் தர மாணவர்களுக்கான கூகுள் மாதிரி வினாத்தாள்களை வழங்குதல்.
- உயர் தர சமயப் பாடங்கள் தொடர்பில் ஆசிரியர்களது பாடம் சார் அறிவை மேம்படுத்துவதற்கான கருத்தரங்குகளை நடாத்துதல்.
- கலப்புக் கற்றலுக்காக உயர் தர ஆசிரியர்களது இயலளவு விருத்தி கருத்தரங்குகளை நடாத்துதல்.
- அதிபர்களுக்கு உள விழிப்புணர்வு தொடர்பில் பயிற்சியளிப்பதற்கான பயிற்றுவிப்புக்கள்
- உள விழிப்புணர்வு பாடசாலை நிதியத்துடன் இணைந்து உலகளாவிய உள விழிப்புணர்வு மாநாடு 2024 ஐ நடாத்துதல்.

விவசாயம் மற்றும் சுற்றாடல் கல்வி மேம்பாடு

- ***விவசாயக் கல்வி தொடர்பில் கற்றல் கற்பித்தல் செயன்முறையினை விருத்தி செய்வதற்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.***

- விவசாயம் மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்/ ஆசிரியர் ஆலோசகர்கள்/ ஆசிரியர்கள்/ ஆய்வுகூட உதவியாளர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

- திறன் விவசாயம். நவீன விவசாய தொழில்நுட்பம் மற்றும் கற்றல் பூமியிலிருந்து ஒரு கமநிலம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், விவசாயம் மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்/ ஆசிரியர் ஆலோசகர்கள்/ ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

- விவசாய விஞ்ஞானம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் மற்றும் சுற்றாடல் கல்வி தொடர்பில் ஆலோசனைக் கைந்நூலை தயாரித்தல் மற்றும் பரிகார நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்.

- ''ஆசிரியர் மாணவர் அறிவுச் சுவர்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயம் மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை நடாத்துதல்.

- ***விவசாயம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் மற்றும் சுற்றாடல் பாடம் தொடர்பில் மாகாண, வலய உத்தியோகத்தர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.***

- விவசாயம் மற்றும் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்/ ஆசிரியர் ஆலோசகர்கள்/ ஆசிரியர்களுக்கு சுற்றாடல் கல்வி, GLOBE, பசுமை பாடசாலை வேலைத்திட்டம்/ சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

- அகில இலங்கை விவசாய விஞ்ஞான பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல்.

- மாகாண மட்டத்தில் மாணவர்களுக்காக உயிர் முறைமைகள் தொழில்நுட்ப செயன்முறைப் பரிசோதனை முகாம்களை நடாத்துதல்.

- உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பாடம் தொடர்பில் ஆராய்ச்சி அறிக்கை ஒன்றைத் தயாரித்தல்.

- உயிர் முறைமைகள் தொழில்நுட்ப செயன்முறைப் பரிசோதனைகளுக்காக நிதி வழங்கல்

வணிகக் கல்வி மற்றும் வியாபாரக் கல்வி மேம்பாடு

- க.பொ.த (உயர் தர) வணிகப் பாடத்துறைக்குரிய கணக்கீடு, வணிகக் கல்வி, பொருளியல், வணிக புள்ளி விபரவியல் பாடங்களுக்கான ஆசிரியர் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (சிங்கள மொழி மூலம் 9 மற்றும் தமிழ் மொழி மூலம் 3)
- க.பொ.த (உ.த) வணிகப் பாட மேம்பாட்டுக்காக கணக்கீடு மற்றும் வணிகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் உதவிச் சாதனங்களை விருத்தி செய்தல்.
- வணிப் பாடத் துறையில் கற்கும் மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வலய மட்டத்தில் வணிக மாணவர் முகாம்களை நடாத்துதல், மாணவர்களது முயற்சியாண்மைத் திறன்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- மாகாண மற்றும் வலய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களது இயலளவு விருத்தி
- பாடசாலை வணிக தினப் போட்டிகளை நடாத்துதல்.
- மூலதனச் சந்தைச் சங்கங்களுக்கான விமர்சன ரீதியான வினா விடைப் போட்டியை நடாத்துதல்.
- சிறந்த வருடாந்த நிதி அறிக்கையை தெரிவு செய்யும் போட்டியை நடாத்துதல்.

அழகியல் கல்வி மேம்பாடு

- வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் நடனப் போட்டிகள் மத்தியஸ்தம் செய்யப்பட்டன
- அகில இலங்கை சித்திரத் தாள்கள் அச்சிடப்பட்டன

- அகில இலங்கை பாடசாலை நடனப் போட்டிகள் 2024, அகில இலங்கை பாடசாலை சித்திரப் போட்டிகள் - 2024 ,அகில இலங்கை மேலைத்தேய சங்கீதம் மற்றும் நடனப் போட்டிகள் - 2024, அகில இலங்கை சங்கீதப் போட்டிகள், 2024 மற்றும் அகில இலங்கை பாடசாலை பரத நாட்டியம் மற்றும் கர்நாடக சங்கீதப் போட்டிகள் - 2024 ஆகியவற்றிற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன
- அகில இலங்கை நடனப் போட்டிகளின் இறுதிச் சுற்று - 1 ம் கட்டம் .
- அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கியல் விழா—2024 (கிழக்கு மாகாணச் சுற்று) நடாத்தப்பட்டது.
- அகில இலங்கை அழகியல் சான்றிதழ்களுக்காக தரவுகளைத் தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- தேசிய நடன—சங்கீதப் பரீட்சைக்கான பாடத் திட்டத்தை இற்றைப்படுத்தி தேசிய அழகியல் சான்றிதழ் பரீட்சை நடாத்தப்பட்டது.
- தேசிய இளம் வாத்தியக் குழுவினைப் பயிற்றுவித்தல்.
- கிழக்கு மாகாண நடன ஆசிரியர்களுக்காக விசேட ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- அழகியல் பாடங்களுக்கான மாதிரி வினாத் தாள்களை தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் - 1 ம் கட்டம் மேல் மாகாணம்
- மேலைத்தேய சங்கீத ஆசிரியர் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டம், மகரகம மேலைத்தேய சங்கீத வள நிலையம்
- அழகியல் பாடங்களுக்கான மாதிரி வினாப் பத்திரங்களை தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2—வட மேல் மாகாணத்தில் நடாத்தப்பட்டது.
- க.பொ.த (உ.த) பரீட்சைக்காக மேலைத்தேய சங்கீதப் பாடத்தைக் கற்கும் மாணவர்களை இலக்காக கொண்டு நடாத்தப்படும் கருத்தரங்கு—மகரகம மேலைத்தேய சங்கீத வள நிலையம்
- கணிணி சங்கீத ஆக்கம் தொடர்பான செயலமர்வு—மீப்பே 1, 2ம் பகுதிகள் நடாத்தப்பட்டன.

கல்வி அபிவிருத்தி

- 154 பாடசாலைகளைச் சேர்ந்த சா.த மற்றும் உயர் தர மாணவர்களுக்காக sesip நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாட அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு வழங்குதல்.

கீழைத்தேய மொழிக் கல்வி மேம்பாடு

- நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலை 2024 பெப்புரவரி 09 ஆந் திகதியன்று நடாத்துதல்.
- 2024ம் ஆம் ஆண்டில் 2 நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- 2022 (2023) ஆம் வருடத்திற்கான கீழைத்தேய மொழிப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு 2024.08.13 ஆந் திகதியன்று புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் நடாத்தப்பட்டது

- பாடத்திட்டத்தை இற்றைப்படுத்துதல் மற்றும் கீழைத்தேய கல்விக்குரிய பணிகளை மேற்கொள்வதற்காக 06 கல்விச் சபைக் கூட்டங்களை நடாத்துதல்.
- 2023 (2024) வருடத்திற்கான கீழைத்தேய ஆரம்ப, மத்திய மற்றும் இறுதிப் பரீட்சைகள் நடைபெற்ற அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்ளல்.
- உயர் அடைவு மட்டங்களை வெளிக்காட்டிய 73 பிரிவெனாக்களுக்கு பாடத் திட்டத்திற்கமைய ரூ. 10 இலட்சம் பெறுமதியாக நூல்களை பகிர்ந்தளித்தல்.

முகாமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாடு

- தெரிவு செய்யப்பட்ட GEMP பாடசாலைகளின் முன்னேற்றத்தை கண்காணித்தல்.
- கோட்டக் கல்வி அலுவலகங்களின் மேற்பார்வை கருவிகளை தயாரித்து நிறைவு செய்தல் மற்றும் அறியப்படுத்தல் செயலமர்வுகளை நடாத்துதல்.
- வலயக் கல்வி அலுவலகங்களை மேற்பார்வை செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கருவிகள் தொடர்பில் அறியப்படுத்தும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- மாகாண மற்றும் வலய QA ஒருங்கிணைப்பாளர்களை அறியப்படுத்துதல்
- 2024/2025 வருடத்திற்காக தெரிவு செய்யப்பட்ட GEMP பாடசாலைகளின் அதிபர்களை அறியப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- மாகாண மற்றும் வலய உத்தியோகத்தர்களுடன் மாகாண QA செயன்முறை தொடர்பில் ஆராய்ச்சிக் கண்டறிதல்களை பிரபல்யப்படுத்துவதற்கான செயலமர்வுகளை நடாத்துதல்.
- பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் ஆவணங்களுக்கு முறையான குறியீட்டு முறை ஒன்றை அறிமுகம் செய்தல்.
- பாடசாலைகளின் பண்புத்தரம் தொடர்பில் வருடாந்த அறிக்கையை தயாரித்தல் மற்றும் அச்சிடுதல்.
- வலயக் கல்வி அலுவலகங்களின் மேற்பார்வைச் செயன்முறை தொடர்பிலான கருவியினை மீளாய்வு செய்து மீளத் தயாரித்தல்.
- தர நிலைச் சான்றிதழுக்காக (AOESQA) ஒன்றிணைந்த நிகழ்நிலை மதிப்பீட்டு முறைமை ஒன்றைத் தயாரித்தல்.
- QA செயன்முறை தொடர்பில் ஆராய்சிக்கான வெளியீடுகளை அச்சிடல் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல்.
- பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்காக ஆசிரியர் மற்றும் அதிபர்களை தேசிய மட்டத்தில் கௌரவித்தல் (குரு பிரதிபா)

பாடசாலை செயற்பாடுகள்

தேசிய பாடசாலைகளுக்கு வசதிகளை வழங்குதல்.

- *இடைநிலைப் பிரிவுக்கான பண்புத்தர உள்ளீடுகளை கொள்வனவு செய்தல்.*
  - *ரூ.* **.25.0***மில்லியன்* **/ (***தேசிய பாடசாலைகள் கிளை***)** *கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறையின் போது பயன்படுத்தப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு பாடசாலைக்கு ரூ. 0.1 மில்லியன் வீதம் 250 தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.*
  - *ரூ. 5.0 (செலுத்துதல்—நிதிக் கிளையின் தலைமையில் மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.)*
- *இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் வளாகத்தில் திருத்த வேலைகள்*
  - *.தேசிய பாடசாலைகளில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்த வேலைகளுக்காக ரூ. 0.1 மில்லியன் வீதம் 110 தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டது.*
  - *நிகழ்நிலைக் கூட்டங்கள் மூலம்* (Zoom) *அதிபர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்* (2024.05.29)
  - *அனைத்து தேசிய பாடசாலை அதிபர்களையும்* (396) *அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்* - 2024.09.28)
  - *மேல் மாகாண தேசிய பாடசாலை அதிபர்கள்* (79) (2024.11.07)
  - *தென்/ சப்பிரகமுவ/ வடமத்திய ஆகிய மூன்று மாகாணங்களதும் தேசிய பாடசாலைகளின் பிரதி அதிபர்கள் / பொறுளாளர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்* (2024.12.10)
- *மூலதனச் சொத்துக்களின் மேம்பாடு (தேசிய பாடசாலைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்- மலசலகூடங்களை திருத்தியமைத்தல்)*
  - *266 தேசிய பாடசாலைகளுக்கு ரூ. 133 மில்லியன் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் வழங்கப்படும் 50% சதவீதமான நிதி 266 பாடசாலைகளுக்கும் (ரூ. 66.5) மில்லியன் வழங்கப்பட்டுள்ளதுடன், அதிபர்கள் மாகாண பொறியியலாளர் அலுவலக உத்தியோகத்தர்களிடமிருந்து மதிப்பீடுகளுக்கான அனுமதியைப் பெற்று குறித்த அனுமதிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கமைய நிதி கிடைக்கப்பெற்ற தேசிய பாடசாலைகளில் மலசலகூடங்களை திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*
  - *மொத்த நிதிக் கொடையின் மீதி 50% சதவீதமான ரூ. 66.5 மில்லியன் தொகை* 2024.12.31*ம் திகதியன்று பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதுடன் பாடசாலை வளாகங்களில் தற்போது அதற்குரிய திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*
- *உடைத்து அகற்றுதல்/ கட்டுமாணத்திற்குரிய கட்டடத் தேவைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய இடத்திற்கு சென்று பரிசோதித்து பரிந்துரைகளை வழங்குதல். தெரிவு செய்யப்பட்ட* 192 *தேசிய பாடசாலைகளில் திருத்த வேலைகள் தொடர்பில் பணிப்பாளரால் (பொறியியல்) நிர்மாணம் தொடர்பில் உத்தரவு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பாடசாலைகளின் பௌதீக முன்னேற்றம் பொறியியல் கிளைக்கு அறிக்கையிடப்படும் என்பதாக அறியத் தரப்பட்டுள்ளது. ஒதுக்கீடுகள் பாடசாலைக் கட்டடங்கள் (பொறியியல்) கிளைக்கே வழங்கப்படுவதால் ஒருங்கிணைப்பு, பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்பு பணிகள் தேசிய பாடசாலையூடாக மேற்கொள்ளப்படுகின்றன.)*

முறைசாரா மற்றும் விசேட கல்வி

- *புதிய முறைசாரா கல்வி உத்தியோகத்தர்களுக்கு மூத்தவர்களுக்கான கல்வி, வாழ் நாள் முழுவதும் கல்வி தொடர்பில் அறியப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.*

- *"சிஷ்யோதா" விசேட மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பிலான தேசிய நிறுவனத்திற்கு அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் பௌதீக வசதிகளைப் பராமரித்தல்.*

- *மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.*

- *பாடசாலை மாணவர்களுக்கு கேட்டல் உதவி உபகரணங்கள் மற்றும் மூக்குக் கண்ணாடிகளை வழங்குவதற்காக 06 மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.*

- *கேட்டல் குறைபாடுகளுடன் கூடிய பிள்ளைகள் கேட்டல் வரைபுகளை வாசித்தல் மற்றும் பார்வைக் குறைபாட்டுடன் கூடிய சிறுவர்களது பார்வை பரிசோதனை அறிக்கைகள் தொடர்பில் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.*

- *சமூக கல்வி தொடர்பில் முறைசாரா மற்றும் விசேட கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.*

- *விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை அடையாளம் காண்பதற்காக வலய மடதிப்பீட்டுக் குழுக்களுக்கு மதிப்பீட்டுக் கருவிகளை வழங்குதல்.*

- *வருமானம் ஈட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான உபகரணங்களை வழங்குதல் (2025ம் ஆண்டிற்கான பிணைப்புக்களுக்கான கொடுப்பனவுகள்)*

- *"பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சூழலியல் கட்டமைப்பு" சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டல் மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பிலான "கல்விக்கு நியாயமான வாய்ப்பு" வழிகாட்டலை அச்சிடல்.*

- *விசேட கல்வி ஆசிரியர்களுக்கான "உட்படுத்தல் உள்ளடங்கிய கல்வியை நோக்கி.....' ஆசிரியர் வழிகாட்டல் நூலை (I ம் பகுதி) அச்சிடல்*

- *வகைப்படுத்தல் மூலம் விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை அடையாளம் காண்பதற்கான மொடியுல்களை தயாரித்தல், அச்சிடல் மற்றும் பயிற்றுவித்தல்.*

- *உட்படுத்தல் கல்வி தொடர்பிலான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (விசேட கல்வி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் வழிகாட்டல் நூல் பகுதி I மற்றும் பகுதி II தொடர்பில் பயிற்றுவித்தல்)*

- *கல்வி வலயங்களின் விசேட கல்வி வாண்மையாளர்களுக்கு உட்படுத்தல் கல்வி தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்.*

- *உட்படுத்தல் கல்வி தொடர்பில் ஒருங்கிணைப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்*

- *பாடசாலைகளில் புதிய விசேட கல்வி அலகுகளைத் தாபித்தல் (பிரவேச வசதிகளை விருத்தி செய்தல்)*

- விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்காக "சிஷ்யோதா" விசேட மற்றும் உட்படுத்தல் கல்விக்கான தேசிய நிறுவனத்தை திருத்தியமைத்தல் மற்றும் தொழில்நுட்பக் கல்விக் கட்டடத்தை நிர்மாணித்தல்.
- கட்டாயக் கல்விப் பாடசாலைக் குழுவின் உறுப்பினர்களை (மாகாண மட்டம்) அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- விசேட கல்வி தொடர்பில் ஆலோசனைக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்.
- பிரேல் மற்றும் சைகை மொழி தொடர்பில் விசேட கல்வி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- விசேட தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கு பரீட்சைக்கான வசதிகளை வழங்கும் மொடியுலை தயாரித்தல்.
- உதவி பெறும் விசேட பாடசாலை மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள்
- சர்வதேச வலது குறைந்தோர் தின நிகழ்வுகள் மற்றும் சர்வதேச எழுத்தறி தின நிகழ்வுகளை நடாத்துதல்.
- சமூக கற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள், வாழ்நாள் முழுவதும் கற்றல் நிகழ்ச்சித்திட்டங்க. மூத்தவர்களுக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை (மாகாண மட்டம்) நடாத்துதல்.
- விசேட கல்வி தொழில் வாண்மையாளர்களது இயலளவு விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை (மாகாண மட்டம்) நடாத்துதல்.

தமிழ் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை

- குறைந்த அடைவு மட்டங்களுடன் கூடிய 10 தேசிய பாடசாலைகளை மேம்படுத்துதல்.
- அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்காக O/L மற்றும் A/L மாணவர்களது செயல்திறனை மேம்படுத்துவது தொடர்பில் செயலமர்வொன்றை நடாத்துதல்.

முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை

- அதிபர், பிரதி அதிபர்களுக்கான அபிவிருத்தி செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- மௌலவி ஆசிரியர்களது அரபு மொழி மற்றும் அரபு இலக்கியம் கற்பிக்கும் திறனை மேம்படுத்துவதுவதற்காக மௌலவி ஆசிரியர் இயலளவு விருத்தி செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- அகில இலங்கை பாடசாலை முஸ்லிம் கலாசாரப் போட்டிகள் 2024 நடாத்தப்பட்டது.
- மத்ரஸா கல்வி நிபுணர் குழு உறுப்பினர்கள் மற்றும் உரிய தரப்பினருடனான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

சமாதானம் மற்றும் நல்லிணக்கக் கல்வி அலகு

- *3000 கல்வியியல் கல்லூரி பயிலுனர் ஆசிரியர்களுக்காக 11 சங்க்ஹித பாமுல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.*

பெருந்தோட்டப் பாடசாலைகள் கிளை

- *தளபாடங்களை வழங்குவதற்காக பெறுகைத் திட்டத்தை தயாரித்தல்.*
- *இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (பணிக்குழுவினருக்கான பயிற்சி) நடாத்தப்பட்டன.*
- *பாடசாலைகளில் புதிய கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் பாடசாலைக் கட்டடங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *இந்திய உதவித் திட்டத்தின் கீழ் 9 பெருந்தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்.*
- *புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.*
- *தரவு முறைமையினைத் தயாரித்தல், பெருந்தோட்டப் பாடசாலை அதிபர்களுடன் நிகழ்நிலை முறையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.*
- *பெருந்தோட்டப் பாடசாலைகளின் மேற்பார்வை*
- *பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான காணிகளை சுவீகரித்தல்.*
- STEM *நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.*

தனியார் பாடசாலைகள் கிளை

- *அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர் தாபனம் சார் செயற்பாடுகளை மேற்கொள்ளல்*
- *.அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் ஏனைய வெளி நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.*
- *அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு ஒழுங்குவிதிகளை வலுவூட்டுதல்*
  - *அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை (இதன் போது கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களங்கள் மற்றும் வலய, கோட்டக் கல்வி அலுவலகங்களின் ஆசிரியர் ஆலோசகர்களைக் கொண்ட குழுவொன்று கற்றல் கற்பித்தல் செயன்முறை, பாடசாலையின் மனித வளம் மற்றும் பௌதீக வளம், வளாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும்,)*
  - *பாடசாலை உள்ளக மதிப்பீடு/ மேற்பார்வை வேலைத்திட்டங்களை விருத்தி செய்வதற்கு வசதியளித்தல்.*
- *ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் (சர்வதேச பாடசாலைகள், ஏனைய தனியார் பாடசாலைகள்) தொடர்புடைய செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.*

பாடசாலை நூலக அபிவிருத்தி

- பாடசாலை நூலக உதவியாளர்களுக்கான பயிற்சி மொடியுலை தயாரித்தல்.
- பாடசாலை நூலக விடயத்தை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாக வலய மட்டத்தில் செயற்படும் ஆசிரியர் ஆலோசகர்கள்/ வளவாளர்களைப் பயிற்றுவிக்கும் இரண்டு நாள் வதிவிட செயலமர்வுகளை நடாத்துததல்.
- வாசிப்பு முகாம்களை நடாத்துவதற்காக பயிற்றுவிக்கும் இரண்டு நாள் வதிவிட செயலமர்வு
- நூலக பயிற்சிக் கையேட்டினைத் தயாரித்தல்.
- பாடசாலை நூலக ஆலோசனைக் கையேட்டிற்கமைய பாடசாலை நூலகங்களை நடாத்துதல்.
- வாசிப்பு முகாம்களை நடாத்துதல் (மேல் மாகாணம்)

பாடசாலை செயற்பாடுகள் கிளை

- தரம் 5 புலமைப் பரிசில் வழங்குதல்
- சுபக புலமைப் பரிசில் வழங்குதல்
- சுஜாத தியணி புலமைப் பரிசில் வழங்குதல்
- EPSI/SBPTD நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

- இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்—நூல் ஆய்வாளர்களுக்கான பயிற்சி செயலமர்வொன்றை நடாத்துதல்.
- பாடசாலை நூலகங்களுக்குப் பொருத்தமான பண்புத்தரத்துடன் கூடிய நூல்களைத் தெரிவு செய்து அந் நூல்களுக்கு பாடசாலை நூலக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்—கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபைக் கூட்டங்களை நடாத்துதல்.
- வாசிப்பு முகாம்களை நடாத்துதல்.
- பாடசாலை நூலகங்களுக்குரிய நூல்களின் பெயர் பட்டியலை அச்சிடல்.

உள்ளக கணக்காய்வாளர்

- ஆரம்ப அறிக்கை
- கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்
- அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்தல்.

ஆசிரியர் தாபனம்

ஆசிரியர் தாபனக் கிளை

- 163 பட்டதாரிகள் வெளிநாட்டு மொழிகளைக் கற்பிப்பதற்காக 2024.02.05ம் திகதி முதல் செயற்படும் வகையில் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டனர்.
- 320 தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களுக்கு தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு 2023.06.19ம் திகதி முதல் செயற்படும் வகையில் நியமனம் வழங்கப்பட்டது.
- க.பொ.த (உ.த) விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் பாடங்கள் உட்படலாக 46 பாடங்களுக்கு 1706 (தேசிய பாடசாலைகளுக்கு) பட்டதாரிகள் 2024.07.08 ம் திகதி முதல் செயற்படும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3 - I (அ) ஆட்சேர்க்கப்பட்டனர்.
- தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவிய ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-1(இ) இற்கு 427 டிப்ளோமாதாரிகள் 2024.07.08 ம் திகதி முதல் செயற்படும் வகையில் ஆட்சேர்க்கப்பட்டனர். மேலும் விசேட கல்விப் பாடங்களுக்காக இரண்டு கல்விமானி பட்டதாரிகள் தேசிய பாடசாலைகளுக்கு 2024.08.01 ம் திகதி முதல் செயற்படும் வகையில் நியமிக்கப்பட்டனர்.
- அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற 07 பிக்குமார்களுக்கு 2024ம் ஆண்டில் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3-1(அ) இற்கு நியமனம் வழங்கப்பட்டன.
- ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆசிரியர் ஆலோசகர்களை ஆட்சேர்ப்பதற்காக முந்தைய சேவைப் பிரமாணக் குறிப்பில் திருத்தம் செய்வதற்காக உரிய பரிந்துரைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.
- இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பினை நடைமுறைப்படுத்துவ்தற்குரியதாக முன்னிலைப்படுத்தப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டல் மற்றும் தொழில் மீளாய்வு தொடர்பான பிரச்சனைகள் உட்படலாக ஏனைய பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய பாடசாலை ஆசிரியர்களது தாபனம் சார் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஆசிரியர் சேவைக்குரிய பொதுமக்கள் மனுக் குழு, நிர்வாக செயற்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கோரப்பட்ட அறிக்கைகளை அனுப்பி, தேசிய பாடசாலை ஆசிரியர்களை வேறு பதவிகள்/ சேவைகளுக்காக தற்காலிகமாக/ நிரந்தரமாக விடுவிப்பதற்கான அனுமதி வழங்குதல் மற்றும் அவை சார்ந்த பிரச்சனைகள் தொடர்பில் தாபனச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ஆசிரியர்களது விடுமுறை தொடர்பிலான விதிமுறைகள் உள்ளடங்கிய கைந்நூல் ஒன்றை வெளியிடுவதற்காக அதன் வரைவாக்கம் தயாரிக்கப்பட்டு அனைத்து கல்விப் பணிப்பாளர்களதும் கருத்துக்களைப் பெற்று அவ் வரைவாக்கம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

கல்வியியல் கல்லூரிக் கிளை

- *திறன் வகுப்பறைகளின் செயன்முறை ரீதியான பாவனை தொடர்பிலும் சித்திரம், நடனம், சங்கீதம் மற்றும் நாடகம் தொடர்பில் தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பணிக்குழுவினரைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு நடாத்தப்பட்டது.*
- *தொடர் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்*
- *தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பணிக்குழுவினருக்கான வருடாந்த நடைமுறைப்படுத்தல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் செலவு மதிப்பீடுகளை தயாரித்தல் தொடர்பான செயலமர்வு*
- *தேசிய கல்வியியல் கல்லூரிகளின் விரிவுரையாளர்களுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானப் பாடம் தொடர்பில் செயன்முறை ரீதியாக பயிற்சி வழங்கும் செயலமர்வு*
- *தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களுக்கான தலைமைத்துவ விருத்தி பயிற்சி செயலமர்வு, டிஜிட்டல் பயிற்சி செயலமர்வு, சிங்களம். தமிழ்,கணிதம் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகள் மற்றும் கல்வி மறுசீரமைப்பு தொடர்பான பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.*
- *தேசிய கல்வியியல் கல்லூரிகள் மேற்பார்வை செய்யப்பட்டன.*
- *தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு பயிலுனர்களை ஆட்சேர்த்தல்.*

ஆசிரியர் கல்வி நிர்வாக கிளை

- *ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிலையங்களை வலுவூட்டுதல்—உலக வங்கி நிதி உதவி* (GEMP)
  - *ஆசிரியர் கல்வியியலாளர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்*
  - *ஆசிரியர் நிலையங்களை கண்காணிப்பதற்கான கருவிகளை தயாரித்தல்*
  - *ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிலையங்களுக்கான ஆசிரியர் கையேடுகளை தயாரித்தல்.*
  - *பாடசாலை மைய ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு கருவிகளை தயாரித்தல்.*
  - *ஆசிரியர் வினைத்திறன்காண் தடை தாண்டலுக்காக டிஜிட்டல் தொழில்நுட்பக் கல்வி மொடியுல், கற்றல் உதவிச் சாதனமாக காணொளிகளை தயாரித்தல்.*
  - *ஆசிரியர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான இதவடிவங்களை தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தல்.*
  - *மாகாண முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் நிலையங்கள் மேற்பார்வை செய்யப்பட்டன.*
  - *ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவ விருத்தி நிலையங்களது பௌதீக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்டன,*
- *ஆசிரியர் நிலையங்களைச் சேர்ந்த இலங்கை ஆசிரியர் சேவைக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை நடாத்துதல்.*

- SESIP செயற்றிட்டத்தின் கீழ் தரம் 10-12 இல் கற்கும் ஆசிரியர்களது கற்பித்தல் திறன்களை விருத்தி செய்யும் குறிக்கோளுடன், பிரதான பிரயோக வள நிலையமாக தேசிய கல்வி நிலையம் அமையும் வகையில் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட 25 ஆசிரியர் நிலையங்கள் மற்றும் 175 பாடசாலைகளில் பிரயோக வள நிலையங்களை நிறுவுதல் (ஆசிரியர் பயிற்சிக்காக)
- கல்விசார் மற்றும் கல்விசாரா பணிக்குழுவினருக்கு அமைச்சின் அடையாள அட்டைகளை வழங்குதல்.
- தேர்ச்சிகளுடன் கூடிய ஆசிரியர் சந்ததியொன்றை உருவாக்குதல்—சேவையில் ஆசிரியர் பயிற்சி

  • பயிற்றப்படாத ஆசிரியர்களது வாண்மைத்துவ விருத்திக்காக ஆசிரியர் கல்லூரிகளில் இரண்டு வருட ஆசிரியர் பயிற்சியினை நடைமுறைப்படுத்தல்.
- ஆசிரியர்களடது வாண்மைத்துவ விருத்திக்காக முன்சேவை ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

  • தேசிய பாடசாலை ஆசிரியர்களாக ஆட்சேர்க்கப்பட்ட புதிய ஆசிரியர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சிநெறி நடாத்தப்பட்டது.

கல்விச் சேவைகள் தாபனம்

கல்விச் சேவைகள் தாபனம்

- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் 2020/2021(2022)

  • எழுத்து மூலப் பரீட்சையிலும் சேவை அனுபவம் மற்றும் திறமை ஆகிய இரு பிரிவுகளிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் இறங்கு வரிசைக்கமைய தெரிவு செய்யப்பட்ட 62 உத்தியோகத்தர்களுக்கு 2024.05.18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 2024.07.03 ஆம் திகதியன்று 60 உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

  • 02 உத்தியோகத்தர்களுக்கான நியமனம் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்த்தல் 2020/2021(2023)

  • 2023.09.23 ஆம் திகதியன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த 735 பேருக்கு 2024.08.21 ஆம் திகதி முதல் 2024.09.07 ஆம் திகதி வரையில் 10 நாட்களுக்கு பொது மற்றும் வாய்மொழி மூல நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டன.

- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் 2020/2021

  - இலக்கம் 2237 மற்றும் 2021.07.16 திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவித்தலுக்கமைய இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2023.07.29 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையின் எழுத்து மூலப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பொது ஆளணி வகுதிக்குரித்தான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட பொது நேர்முகப் பரீட்சை மற்றும் வாய் மொழி மூல நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற 147 விண்ணப்பதாரர்களது பெயர்கள் உள்ளடங்கிய பெயர் பட்டியல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், 2024.10.23 மற்றும் 24 ஆம் திகதிகளில் பொது மற்றும் வாய்மொழி மூலமான நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

- கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகளுக்கு நியமித்தல்.

  - கல்வி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் வெற்றிடமாக உள்ள பத்தொன்பது (19) கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை 2024 ஏப்ரல் மாதத்தில் கல்வி அமைச்சில் நடாத்தப்பட்டது. அந் நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய 16 கல்விப் பணிப்பாளர்/ ஆணையாளர் பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ,

  - தரம் I இற்கு பதவி உயர்வு - 65
  - தரம் II இற்கு பதவி உயர்வு - 300
  - இடமாற்றங்கள் மற்றும் தற்காலிக இணைப்புக்கள் - 192
  - ஓய்வு பெறச் செய்தல் - 85
  - வாகன அனுமதிப்பத்திரம் - 150

அதிபர் கிளை

2023 ஆம் ஆண்டில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட *164* உத்தியோகத்தர்களுக்கு 2024.04.02 ம் திகதியன்று அதிபர் சேவை நியமனம் வழங்கப்பட்டது.

வரவு செலவு பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் BD/HRD/126/19/2024 மற்றும் 2024.01.03 திகதியுடைய கடிதத்திற்கமைய நிறுவனப் பரீட்சைகளை நடாத்துவதற்காக ரூ. *920* மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கமைய *202*ம் ஆண்டிற்குரிய இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான II வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2024 (11), இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான I வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2024 (1) ஆகியவற்றை நடாத்துவது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்குரிய பரீட்சை *2025*ம் ஆண்டில் நடாத்தப்படவுள்ளது.

கல்விசாரா மற்றும் இணைந்த சேவைகள்

இணைந்த சேவைகள்

- பரீட்சைக் கட்டணத்திற்கான கட்டணம் செலுத்தப்பட்டது (சட்ட உத்தியோகத்தர் ||| முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்காக)
- தடைதாண்டல் பரீட்சைகள் நடாத்தப்பட்டன (இணைந்த சேவை சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர் சேவை)
- இடமாற்ற சபைக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.
- நகல் பிரதி இயந்திர இயக்குனர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டன.
- இணைந்த சேவை சீருடைக் கொடுப்பனவு (இணைந்த சேவை சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர் சேவை) செலுத்தப்பட்டன.
- கல்விசாரா மற்றும் இணைந்த சேவை கணிணித் தரவு இயக்குனர்களுக்கான பயிற்சிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

இணைந்த சேவைகள் அல்லாத

- வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்துதல்.
- புதிய ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.
- வருடாந்த இடமாற்ற சபையினருக்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டது
- பல்செயற்பாட்டு அபிவிருத்தி உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது

பெறுகை

2024 வருடாந்த பெறுகைத் திட்டத்தின் சாராம்சம்

துறை	மொத்த செயற்றிட்டங்கள்	நிறைவு செய்யப்பட்ட (100%)	பூரணப்படுத்தப்பட்ட அண்மித்த (75-99%)	நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் (<75%)	இரத்துச் செய்யப்பட்ட	வரவு செலவு எல்லை (Budget Range) ரூ. மில்லியன்
பொருட்கள் (G)	45	26	9	3	7	0.5 - 6,000
சேவைகள் (S)	20	10	4	0	6	0.1 - 872.3
GEMP	4	2	1	0	1	0.6 - 34.5
விசேட செயற்றிட்டங்கள் (SP)	6	1	2	2	1	2.71 - 25

பிரதான செயற்றிட்டங்கள் துறைகளுக்கமைய

- **பிரதானமான நிறைவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (ரூ. 100 மில்லியனுக்கு மேல்)**

  பாடசாலைகளுக்கு சீருடைத் துணிகள் சீன மக்கள் குடியரசின் நன்கொடையாக வழங்கப்பட்டது.

  1000 பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் (ரூ. 1,600 மில்லியன்) - 80%

  பாடசாலை காலணி வவுச்சர் (ரூ. 1,500 மில்லியன்) - இரத்துச் செய்யப்பட்டது★

  பாடசாலை மாணவிகளுக்கான சுகாதார அணையாடை (ரூ. 960 மில்லியன்) - 100% நிறைவடைந்துள்ளது.

  ஆரம்பப் பிரிவுகளுக்கான மாணவர் மேசைகள் மற்றும் கதிரைகள் (ரூ. 134.8 மில்லியன்) - 95%

- **பிரதானமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உட்கட்டமைப்பு வசதிச் செயற்றிட்டங்கள் (Key Ongoing Infrastructure Projects)**

  இ.தக்சலாவ விற்கு Server வசதிகள் (ரூ. 260 மில்லியன்) - நிறைவடைந்துள்ளது.

  PABX தொலைபேசி முறைமை (ரூ. 34 மில்லியன்) - 30% நிறைவடைந்துள்ளது.

  CCTV கமெரா தொகுதி (ரூ. 4 மில்லியன்) - 10% நிறைவடைந்துள்ளது.

  சூரிய வலுத் தகடுத் தொகுதி (பல்வேறு இடங்களில்) - பல்வேறு கட்டங்களில் உள்ளன.

- **பிராதான கல்விசார் தொடக்கங்கள் (Major Educational Initiatives)**

  தொழில்நுட்ப நவீனமய ஆய்வுகூட உபகரணங்கள் (ரூ. 83.06 மில்லியன்) - 95% நிறைவடைந்துள்ளது.

  உயிர் முறைமைகள் தொழில்நுட்ப உபகரணங்கள் (ரூ. 60 மில்லியன்) - 95% நிறைவடைந்துள்ளது.

  பிரிவெனாக்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் உபகரணங்கள் (ரூ. 400 மில்லியன்) - 95% நிறைவடைந்துள்ளது.

  ஆசிரியர் பயிற்சி முறைமைகளுக்கான தளபாடங்கள் (KOICA) (ரூ. 19.28 மில்லியன்) - 95% நிறைவடைந்துள்ளது.

- ***கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சேவைகள்* (Notable Services)**

மாணவர் காப்புறுதி சுரக்ஷா) (ரூ. 7112.3 *மில்லியன்*) - *நிறைவடைந்துள்ளது.*

(3 வருடங்களுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு சேவைகள் (ரூ. 50 *மில்லியன்*) - *நிறைவடைந்துள்ளது.*

சுகாதார பாதுகாப்பு சேவைகள் (ரூ. 40 *மில்லியன்*) - *நிறைவடைந்துள்ளது.*

கட்டடங்களின் பராமரிப்பு (ரூ. 30 *மில்லியன்*) - 65% *நிறைவடைந்துள்ளது.*

நிதி மூலங்கள்

CF (*ஒன்றிணைந்த நிதியம்*) , KOICA,GEMP(*பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்*) , TRC,SESIP (*இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு செயற்றிட்டம்*), UNESCO

பொறியியல் பிரிவு — பொறியியல் கிளை

- *மூலதனச் சொத்துக்களின் புனர்நிர்மாணம் மற்றும் மேம்பாடு (இசுருபாய கட்டட திருத்த வேலைகள்)*
- *கொழும்பு தேசிய நூலகத்தை நிறுவுதல் (திருத்த வேலைகள்)*
- *தேசிய பாடசாலைகளில் இடைநிலைப் பிரிவுகளில் புதிய நிர்மாணச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் (தேசிய பாடசாலைகளில் இடைநிலை பிரிவுகளின் வகுப்பறைக் கட்டடங்கள், சிற்றுண்டிச்சாலை, விளையாட்டு மைதானங்கள், மலசலகூடங்கள், கூரைகள் போன்ற புதிய கட்டுமானங்கள்)*
- *உயர் தர தொழிற் பாடத்துறை மாணவர்களது கல்விசார் மற்றும் பயிற்சிக்கான வசதியளிக்கும் செயற்பாடுகள் (திருத்த வேலைகள் மற்றும் புதிய கட்டுமானங்கள்) (வகுப்பறைகளை திறன் வகுப்பறைகளாக்குதல்)*
- *விசேட கல்வி அலகுகளின் திருத்த வேலைகள் (விசேட கல்வி அலகுகளில் உள்ள வகுப்பறைக் கட்டடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், விளையாட்டு மைதானங்கள், மலசலகூடங்கள், கூரைகள், கட்டமைப்பு ரீதியான திருத்த வேலைகள் போன்றன)*
- *ஆசிரியர் கல்லூரிகளில் திருத்த வேலைகள் (ஆசிரியர் கல்லூரிகளின் கட்டடங்கள், கூரைகள், கட்டமைப்பு ரீதியான திருத்த வேலைகள்)*
- *தேசிய கல்வியியல் கல்லூரிகளில் திருத்த வேலைகள் (தேசிய கல்வியியல் கல்லூரிகளின் கட்டடங்கள், கூரைகள், மலசலகூடங்கள் போன்ற புதிய கட்டுமானங்கள்)*
- *பெருந்தோட்டப் பாடசாலைகளை இடைநிலை மட்டம் வரை தரமுயர்த்துதல் (திருத்த வேலைகள்/ புதிய கட்டுமானங்கள்) பெருந்தோட்டப் பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், விளையாட்டு மைதானங்கள், கூரைகள் போன்ற புதிய கட்டுமானப் பணிகள்)*
- *பாடசாலைகளின் பற்சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் (புதிய கட்டுமானங்கள் மற்றும் பற் சிகிச்சை அலகுகளை நிர்மாணித்தல்)*
- *அனைத்து பாடசாலைகளுக்கும் சுகாதார மற்றும் நீர் வசதிகளை வழங்குதல். (புதிய கட்டுமானம்)*
- *3577 ஆரம்ப பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துதல் (புதிய கட்டுமானம் மற்றும் திருத்த வேலைகள்)*
- *கிராமப்புர மற்றும் பிராந்திய பாடசாலைகளுக்கு ஆசிரியர் விடுகள் மற்றும் ஓய்வறைகளுக்கான வசதிகளை வழங்குதல்.*
- *பொலனறுவை மும்மொழிப் பாடசாலையை நிர்மாணித்தல்.*

வெளிநாட்டு நிதி உதவிச் செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்கள்— பேரளவு/ வெளிநாட்டு நிதி உதவிச் செயற்றிட்டங்களின் சாராம்சம் (2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு)

	செயற்றிட்டம்	நிதி மூலம்	நிதி ஒதுக்கீடு (2024)	கால வரையறை	பௌதீக முன்னேற்றம் (2024)
1	தொழில்நுட்ப பாடத்துறைக்கான தேசிய கல்வியியல் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சி முறைமை ஒன்றை தாபித்தல்.	KOICA/GOSL	ரூ. 2620.00 மில்லியன்	2017-2025	100 %
2	விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கான தேசிய மற்றும் மாகாண நிலையம்	CF	ரூ. 73.00 மில்லியன்	2015-2024	95%
3	விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளுக்கான தேசிய மற்றும் மாகாண வள நிலையம்	JICA	ரூ. 20.00 மில்லியன்	2019-2024	100 %
4	இடைநிலைக் கல்விக்கான தக்வல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம் ஒன்றை தாபித்தல். (ICT Hub)	EDCF/GOSL	ரூ. 1100.00 மில்லியன்	2019-2026	0.5%
5	பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் (GEMP)	உலக வங்கி	ரூ. 2000.00 மில்லியன்	2018-2024	88%
6	தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம்	OFID/GOSL		2018-2024	80%
7	இரண்டாம் நிலைக் கல்வித் துறைசார் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (SESIP)	ADB	ரூ. 1410.00 மில்லியன்	2020-2025	87%
8	பல்லின மற்றும் மும்மொழிக் கல்வியுடன் கூடிய தேசிய பாடசாலை ஒன்றை பொலனறுவையில் நிர்மாணித்தல்.	இந்திய நிதி உதவி	ரூ. 100 மில்லியன்	2017-2024	83%
9	UNICEF செயற்றிட்டம் (முன் பிள்ளைப் பருவக் கல்வி, டிஜிட்டல் பிரஜைகள் திறன்கள் போன்றன)	UNICEF		2024	100%
10	இந்திய நிதி உதவியின் கீழ் 9 பெருந்தோட்டப் பாடசாலைகளை மேம்படுத்துதல்.	இந்திய நிதி உதவி (Indian Grant)	ரூ. 300 மில்லியன்	2022 – 2024	85 %

க,கொ. 1. பல செயற்றிட்டங்களதும் ஆரம்ப கால வரையறைகள் நீடிக்கப்பட்டுள்ளன.

2. முன்னேற்றம் தொடர்பான தரவுகள் 2024 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இற்றைப்படுத்தப் பட்டுள்ளது.

04. நிதி முன்னேற்றம்

கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் மூலதனச் செலவுகள் (2024.11.30ம் திகதிக்கு) - பொதுக் கல்வி

வேலைத்திட்டம்	2024 மதிப்பீடு (ரூ. மில்லியன்)	2024.11.30 ம் திகதிக்கு செலவு (ரூ. மில்லியன்)
அமைச்சர் அலுவலகம்	26,000,000	19,978,293.47
நிர்வாகம் மற்றும் தாபனச் சேவைகள் (பொதுக் கல்வி)	344,000,000	155,888,650.84
நிர்வாகம் மற்றும் தாபனச் சேவைகள் (உயர் கல்வி)	2,155,000,000	1,559,870,164.77
நிர்வாகம் மற்றும் தாபனச் சேவைகள் (ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்)	6,851,000	1,788,300
நிர்வாகம் மற்றும் தாபனச் சேவைகள் (திறன் விருத்தி மற்றும் தொழிற் கல்வி)	786,850,000	444,609,187.06
ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி	1,692,174,000	529,219,194.90
விசேட கல்வி	305,000,000	91,638,438.62
ஆசிரியர் அபிவிருத்தி	324,076,000	121,224,472
பொதுக் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டங்கள்	16,608,750,000	5,400,141,049.67
- வெளிநாட்டு உதவி	11,510,000,000	4,331,790,320.63
- உள்நாட்டு (NSBS)	2,188,750,000	369,618,070.16
- உள்நாட்டு	2,910,000,000	698,732,658.88
உயர் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டங்கள்	23,795,000,000	17,426,758,025.86
உயர் கல்வியின் பண்புத்தரத்தை விருத்தி செய்வதற்காக நிறுவன உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.	300,000,000	95,070,000
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி	914,000,000	394,238,652
கோள் மண்டலம்	106,000,000	62,000
தொழிற் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அபிவிருத்தி	3,315,930,000	906,364,091.95
விதாதா அபிவிருத்தி	-	-
மொத்தம்	50,679,631,000	27,146,850,521.14

தகவல் மூலம்: பல்வகைக் கணக்குகள் கிளை, கல்வி அமைச்சு

கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் மீண்டு வரும் செலவினங்கள் -(2024.11.30) - பொதுக் கல்வி

வேலைத்திட்டம்	**2024** ***மதிப்பீடு (ரூ. மில்லியன்)***	**2024.11.30 ம்** ***திகதிக்கு செலவு (ரூ. மில்லியன்)***
அமைச்சர் அலுவலகம் (126 - 1– 1)	142.01	87.81
தாபன மற்றும் நிர்வாக செயற்பாடுகள் (126 - 1– 2)	34,275.20	16,160.39
தாபனம் மற்றும் நிர்வாகம்—உயர் கல்வி (126 - 1– 9)	256.21	212.55
ஆரம்பக் கல்வி (126 - 2 - 3 – 1)	7,062.23	5,743.47
இடைநிலைக் கல்வி (126 - 2 – 3 - 2)	41,887.01	37,836.93
தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான அனுசரனை (126 - 2– 3 - 3 - 1409)	50.00	28.59
தொழிற் பயிற்சிக்கான நிறுவன உதவிகள் (126 - 2– 3 - 4 - 1409)	200.00	47.78
விசேட கல்வி (126 - 2– 5 - 1)	20.50	18.28
வலது குறைந்தவர்களுக்கான கல்வி (126 - 2– 5 - 3)	309.54	247.23
உதவி பெறும் பாடசாலைகளுக்கு (126 - 2– 5 - 4)	3,035.04	2,478.34
ஆசிரியர் நிலையங்கள்- ஆசிரியர் கல்லூரிகாள் மற்றும் ஆசிரியர் நிலையங்கள் (126 - 2– 6 - 1)	553.70	425.03
ஆசிரியர் விருத்தி—தேசிய கல்வியியல் கல்லூரி (126 - 2– 6 - 2)	2,668.39	2,257.56
உயர் கல்வியின் பண்புத்தர விருத்திக்கான நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல். (126 - 2– 11)	2,138.74	1,896.58
மொத்தம்	**92,598.55**	**67,440.54**

தகவல் மூலம்: நிதிக் கிளை, கல்வி அமைச்சு

05. மாணவர் அடைவு

மாணவர் அடைவு

(அ) தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் அடைவு

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர் அடைவு (2017 – 2023)



தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் சதவீதம் (2017– 2023)

	2017	2018	2019	2020	2021	2022	2023
தோற்றிய மாணவர் தொகை	350,462	350,191	332,179	326,264	335,158	329,668	332,949
70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் சதவீதம் (%)	69.4	79.09	78.1	86.83	77.12	82.97	77.75
நடுப் புள்ளி	106.43	117.98	114.38	125.65	109.31	115.11	111.74

மூலம்: மதிப்பீட்டு அறிக்கை—2023 இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

ஆ) க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் மாணவர் அடைவு

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையின் பின்னர் க.பொ.த (உயர் தரத்திற்கு) தகுதி பெற்ற மாணவர் தொகை மற்றும் சதவீதம் (2016 – 2022)

	2016	**2017**	**2018**	**2019**	**2020**	**2021**	2022
தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	286,251	296,812	296,029	305,427	308,134	311,321	317,326
சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை	200,208	216,815	222,281	225,539	236,015	231,982	236,041
சித்தியடைந்த சதவீதம் %	69.9	73.05	75.09	73.84	76.59	74.52	74.38

மாகாணங்களுக்கமைய க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் க.பொ.த (உயர் தரத்திற்கு) தகுதி பெற்ற மாணவர் தொகை மற்றும் சதவீதம் **(2021 - 2022)**

மாகாணம்	**2021**			**2022**		
	தோற்றிய மாணவர் எண்ணிக்கை	**சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை**	**சித்தியடைந்த சதவீதம் %**	**தோற்றிய மாணவர் எண்ணிக்கை**	**சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை**	**சித்தியடைந்த சதவீதம் %**
தென்	39,487	30,860	78.15	41,446	32,165	77.61
வடமேல்	36,874	26,613	72.17	37,275	27,780	74.53
மேல்	81,299	61,854	76.08	81,093	60,789	74.96
ஊவா	20,901	15,257	73	21,367	15,876	74.30
மத்திய	40,160	29,584	73.67	40,840	29,701	72,73
சபரகமுவ	28,849	21,492	74.5	29,642	22,285	75.18
வடமத்திய	21,293	15,119	71	21,987	15,351	69.82
கிழக்கு	25,895	19,201	74.15	26,874	19,819	73.75
வடக்கு	16,563	12,002	72.46	16,802	12,275	73.06
மொத்தம்	**311,321**	**231,982**	**74.52**	371,326	236,041	74.38

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை (2017–2022) அவ் அப் பாடங்களில் சித்தியடைந்த மாணவர் சதவீதம்



மூலம்: மதிப்பீட்டு அறிக்கை—2017-2022 இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

(இ) க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மாணவர் அடைவு (பாடசாலைப் பரீட்சார்த்திகள்)2019 - 2023

	2019 (புதிய பாடத் திட்டம்)	2019 (பழைய பாடத் திட்டம்)	2020 (புதிய பாடத் திட்டம்)	2020 (பழைய பாடத் திட்டம்)	2021	2022	2023
தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	173,781	61,769	251,168	24146	236,035	232,797	229,057
பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர் எண்ணிக்கை	108,353	46,552	165,711	15,960	149,946	149,487	151,343
பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர் சதவீதம் (%)	62.35	75.36	65.98	66.1	63.53	64.21	66.07

மூலம்: மதிப்பீட்டு அறிக்கை—2023 இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

ஒவ்வொரு பாடத் துறைகளிலிருந்தும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர் சதவீதம் (முதல் தடவை தோற்றிய 2019 - 2023)















மூலம்: மதிப்பீட்டு அறிக்கை—2023 இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

06. பொதுக் கல்வித் துறைசார்ந்த நிறுவனங்கள்

தேசிய கல்வி நிறுவகம்

2024.12.31 ஆம் திகதி வரை பௌதீக முன்னேற்றம்

- ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கான தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்துடன் பொருந்தும் வகையில் தேசிய கலைத்திட்ட சட்டகத்தை ஒழுங்குபடுத்தல்.
- 2025 ம் ஆண்டில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட இருந்த தரம் 1, 2, 6, 7, 10 மற்றும் 11 இற்குரிய செயற்பாட்டு நூல்கள், மொடியுல்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டிகள் (மூன்று மொழிகளிலும்) தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இவ் விடயம் தொடர்பில் அடைந்துள்ள முன்னேற்றம் கீழ்வருமாறு,

		இறுதிப் பிரதி	வரைவாக்கம்	மொத்தம்
தரம் 1	செயற்பாட்டு நூல்	43	-	43
	ஆசிரியர் வழிகாட்டி	17	-	17
தரம் 2	செயற்பாட்டு நூல்	10	-	10
	ஆசிரியர் வழிகாட்டி	04	-	04
தரம் 6 மற்றும்10	மொடியுல்	811	-	811
	ஆசிரியர் வழிகாட்டி	442	-	442
தரம் 7 மற்றும் 11	மொடியுல்	163	60	223
	ஆசிரியர் வழிகாட்டி	115	10	125

முன்னோடி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் உரிய உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ஒட்டுமொத்த முறைமையையும் அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ்வருமாறு நடாத்தப்பட வேண்டும்.

		1 ம் தவணை	2 மற்றும் 3 ம் தவணைகள்	மொத்தம்
தரம் 1	ஆசிரியர்கள்/ ஆசிரியர் ஆலோசகர்கள்/ அதிபர்கள்/ ஏனைய உத்தியோகத்தர்கள்	224	92	316
தரம் 6 மற்றும் 10	ஆசிரியர்கள்/ ஆசிரியர் ஆலோசகர்கள்/ அதிபர்கள்/ ஏனைய உத்தியோகத்தர்கள்	938	628	1,566

- தரம் 1, 6 மற்றும் 10 இற்காக தயாரிக்கப்பட்டுள்ள புதிய கலைத்திட்டத்தை இவ் வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 5000 மாணவர்களை ஈடுபடுத்தி கண்காணித்தல் மற்றும் அக் கண்காணிப்பினூடாக கிடைக்கப் பெற்ற பின்னூட்டல்களின் அடிப்படையில் இத் தரங்களுக்குரிய செயற்பாட்டு நூல்கள், மொடியுல்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டல்களில் திருத்தங்களை மேற்கொண்டு அச்சிடுவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடம் கையளித்தல்.
- தரம் 1 இற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களை இனங்காண்பதற்காக தற்போது பயன்படுத்தப்படும் செயற்பாடுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அத்தியாவசியமான தரவுகளை முன்கூட்டியே கண்காணித்ததன் பின்னர் செயற்பாடுகளின் இறுதிப் பிரதியைத் தயாரித்தல். அதற்கு மேலதிகமாக ஆசிரியர்களை அறியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான காணொளி ஒன்றைத் தயாரித்தல்.
- தற்போதுள்ள தேசிய முன்பிள்ளைப் பருவ கலைத்திட்ட சட்டகத்தை (NECCF) மீளாய்வுக்குட்படுத்தியதன் பின்னர் தேசிய முன் பிள்ளைப் பருவ கலைத்திட்ட சட்டகத்தின் இறுதி வரைவாக்கத்தை தயாரித்தல்.
- தரம் 10-13 வரையான 400 கொரியா மொழி ஆசிரியர்களை அறியப்படுத்துதல் மற்றும் நிகழ்நிலை இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- தரம் 8-11 வரையான மாணவர்களிடையே டிஜிட்டல் பிரஜா உரிமைக்குரிய திறன்களை விருத்தி செய்வதற்காக 05 மொடியுல்களை விருத்தி செய்தல் மற்றும் முன்னோடிப் பாடசாலைகளின் 45 ஆசிரியர்களை இது தொடர்பில் இற்றைப்படுத்துதல்.
- பிராந்திய ஆங்கில உதவி நிலையங்களின் (RESC) 26 வது தேசிய மாநாடு மற்றும் மொழி மதிப்பீடு தொடர்பான 11வது தேசிய மாநாட்டை (2024) நடாத்துதல்.
- பாடசாலை மாணவர்களிடையே சிறந்த பிரஜை, பண்புத்தரத்தை மேம்படுத்துதல் மற்றும் தொழில் வழிகாட்டலுக்காக 13 மேலதிக காணொளி நிகழ்ச்சிகள் மற்றும் 05 குறுகிய காணொளிகளை தயாரித்தல்.
- தேசிய கல்வி நிறுவகத்தின் யூ டியூப் அலைவரிசைக்கான 14 பாடம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள், 07 சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 11 போக்குகள் மற்றும் செய்தி நிகழ்வுகள் தயாரிக்கப்பட்டன..
- பொதுக் கல்வியின் இடைநிலைக் கலைத்திட்ட சாதனங்களில் நற்பிரஜை தொடர்பிலான கோட்பாடுகள் வெளிக்காட்டப்படும் விதம் தொடர்பான ஆய்வு" எனின் ஆராய்ச்சி அறிக்கையினை வரைவாக்கம் செய்தல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் திரு சம்பத் அமரதுங்க அவர்களால் நடாத்தப்பட்ட "கன்னங்கர கல்வித் தத்துவம் மற்றும் திறன்களுடன் கூடிய தொழிற் படை ஒன்றை உருவாக்குவதற்கு உயர் கல்வியின் பணிகள்" எனும் கலாநிதி சீ.டப்.டப் கன்னங்கர ஞாபகார்த்த உரையை ஒழுங்கு செய்தல்.
- இடைநிலைக் கல்வி மறுசீரமைப்புக்குரியதாக அறிவுறுத்தல் தலைமைத்துவம் தொடர்பில் 275 அதிபர்கள் மற்றும் உதவி அதிபர்களுக்கும் 102 இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- "கல்வி முகாமை 2024" சஞ்சிகையை மூன்று மொழிகளிலும் வெளியிடல்

- இலங்கை தகைமை வழிகாட்டலுக்கமைய தேசிய போதனாவியல் டிப்ளோமா தொடர்பான ஆவணத்தை தயாரித்தல்.
- விசேட கல்வித் தேவைகளுடன் கூடிய பிள்ளைகளை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் 05 காணொளிகள் மற்றும் 10 மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.
- "உட்படுத்துகை 2024" சஞ்சிகையை தயாரித்தல்.
- முன் பிள்ளைப் பருவம் மற்றும் ஆரம்பக் கல்வித் துறையின் ஒத்துழைப்புடன் கலைத்திட்டத்துடன் தழுதல் தொடர்பில் 292 பேரை உள்ளடக்கிய ஆரம்பக் கல்வி வளவாளர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் உட்படுத்தல் கல்வி தொடர்பில் 33 ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
- 200 ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- முன்னோடியாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் தரம் 6 மற்றும் தரம் 6 தொழில் வழிகாட்டல் ஆசிரியர்கள் 25 பேருக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- பல்வேறு காரணங்களால் பாடசாலைக் கல்வியை இழந்தவர்களுக்கு கல்விக்கான பாதையை ஏற்படுத்திக் கொடுக்கும் குறிக்கோளுடன் திறந்த பாடசாலை அலகினால் மூன்று தொலைக் கல்விப் பாடநெறிகளை (எழுத்தறிவு பாடநெறி, அடிப்படைப் பாடநெறி மற்றும் இடைநிலைப் பாடநெறி) ஆரம்பித்தல் மற்றும் அதன் கீழ் சுமார் 1300 பேர் குறித்த பாடநெறிகளை தொடர்கின்றனர்.
- டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைப்பதனூடாக எழுத்தறிவை மேம்படுத்துவதற்காக இரண்டு திறந்த பாடசாலைக் கற்றல் நிலையங்களில் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட முன்னோடி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல். குறித்த நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய இடைத்தொடர்புடன் கூடிய கற்றல் அனுபவங்கள் தொடர்பில் வசதியளிப்பதற்காக மாணவர்களுக்கு டெப்லெட் கணினிகளை இலவசமாக வழங்குதல்.
- நாடு பூராகவும் அமைந்துள்ள பிராந்திய நிலையங்களூடாக கல்வித் துறையின் தொழில் வாண்மையாளர்களுக்கு கலாநிதி பட்டம் முதல் சான்றிதழ் பாடநெறி வரை 14 பாடநெறிகளை நடைமுறைப்படுத்துதல். தற்போது 14,589 மாணவர்கள் அப் பாடநெறிகளை தொடர்கின்றனர்.

2024.12.31 ம் திகதி வரையிலான நிதி முன்னேற்றம்

நிதி மூலம்	மீண்டுவரும் செலவினம்		மூலதனச் செல்வினம்	
	ஒதுக்கீடு	செலவு	ஒதுக்கீடு	செலவு
அரச நிதி	488,160,000	488,160,000	30,000,000	19,764,780
GEMP	120,000,000	80,125,293	-	-
SESIP	60,000,000	17,997,842	-	-
NIE நிதி (வருமானம்)	655,085,000	512,356,621	32,000,000	18,719,967
UNICEF	23,264,075	11,552,349	-	-
UNESCO (KNCU)	21,403,000	16,209,623	2,590,000	2,360,246
மொத்தம்	**1,367,912,075**	**1,046,276,435**	**64,590,000**	**40,844,993**

2025 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் சாராம்சம்

- கலைத்திட்டத்தை மீண்டும் மீளாய்வு செய்தல் மற்றும் கல்வி நிலைமாற்றம் தொடர்பிலான புதிய நோக்கின் இலக்குகளுடன் தழுவச் செய்தல்.
- கல்வியின் நிலைமாற்றத்திற்கான புதிய நோக்கின் குறிக்கோள்களுடன் பொருந்தும் வகையில் கலைத்திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் மீட்டுதல்.
- கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சட்டகம் மற்றும் அதற்குரிய ஆவணங்களை மீளாய்வு செய்து கல்வி அமைச்சிற்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் வழங்குதல்.
- கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட இயலுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வுக்குட்படுத்தி அதற்குரிய வழங்கல்களை திட்டமிடுவதற்காக (logistical planning) அவற்றை அமைச்சிடம் கையளித்தல்.
- கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் தொடர்பிலான வழிகாட்டல்களை கல்வி அமைச்சிற்கு வழங்குதல்.
- கலைத்திட்ட மதிப்பீட்டுச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படல்.
- பல்வேறு காரணங்களால் பாடசாலைக் கல்வியை இழந்தவர்களுக்கு கல்விக்கான பாதையை ஏற்படுத்திக் கொடுக்கும் குறிக்கோளுடன் திறந்த பாடசாலை அலகினால் மூன்று தொலைக்கல்விப் பாடநெறிகளை (எழுத்தறிவு பாடநெறி, அடிப்படைப் பாடநெறி மற்றும் இடைநிலைப் பாடநெறி) ஆரம்பித்தல் .
- தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பில் ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- கல்வித் துறையின் தொழில் வாண்மையாளர்களுக்காக கலாநிதி (கல்வி) பட்டம் முதல் சான்றிதழ் பாடநெறி வரையிலான 20 பாடநெறிகள நடைமுறைப்படுத்துதல்.
- மதிய நேரக் காப்பகத்துடன் கூடிய முன்மாதிரி முன்பள்ளி ஒன்றைத் தாபிப்பதற்கான கட்டடத் தொகுதி ஒன்றை நிர்மாணித்தல்.
- NIE Alpha U ஒளி வானொலி அலைவரிசைக்காக கல்விசார் வானொலி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்.
- ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்கு உறுதுணையளிக்கும் வகையில் ஒளி மற்றும் ஒலி நிகழ்ச்சிகளை தயாரித்தல்.
- திறந்த பாடசாலை பிராந்திய நிலையங்களின் 1500 மாணவர்களுக்காக மூன்று பாடநெறிகளை (எழுத்தறிவு பாடநெறி, அடிப்படைப் பாடநெறி மற்றும் இடைநிலைப் பாடநெறி) நடாத்துதல்.

2024/ 2025 வரவு செலவு குழு நிலையின் போது சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

அறிமுகம்

நாட்டின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியின் அனுகூலங்களைப் பெற்றுக் கொடுக்க அவசியமான பாடசாலைப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கும் மற்றும் அதனுடன் இணைந்த மேலதிக வாசிப்பு நூல்கள் மற்றும் கற்றல் உதவிச் சாதனங்களை தயாரித்து வழங்கும் தேசிய பணியை செய்வதற்காக, கல்வி அமைச்சின் கீழ் திணைக்களம் ஒன்றாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

பின்னணித் தகவல்கள்

1965 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தனியான செலவு அலகொன்றாகவும் 1996 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அப்போதைய கல்வி மற்றும் கலாசார அமைச்சின் கீழ் செயற்படக்கூடிய திணைக்களம் ஒன்றாகவும் மீள நிறுவப்பட்டது.

1965 ஆம் ஆண்டில் "பீ" தரத்துடன் கூடிய திணைக்களம் ஒன்றாக நிறுவப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது 2004.07.14 ஆந் திகதி முதல் அதி உயர் தர திணைக்களம் ஒன்றாக மீள நிறுவப்பட்டு திணைக்களத் தலைவரின் பெயர் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் என்பதாக திருத்தம் செய்யப்பட்டதுடன், அமைச்சின் மேலதிக செயலாளர் பதவிக்கு இணையான பதவியொன்றாக அது தரமுயர்த்தப்பட்டது.

பிரதான பணிகளின் மேற்பார்வையை இலகுபடுத்தும் நோக்குடன் அபிவிருத்தி, திட்டமிடல், உற்பத்தி, வெளியீடு, விநியோகம், விற்பனை மேம்பாடு, நிதி, தாபனம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்காய்வு என பல்வேறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவற்றின் கீழ் பிரதி மற்றும் உதவி ஆணையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர் சேவை ஊழியர்கள், சாரதிகள் போன்ற பணிக்குழுவினர் இணைப்புச் செய்யப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

நோக்கு

சர்வதேச கல்வி அபிவிருத்தி யுடன் தழுவிய உயர் பண்புத் தரத்துடன் கூடிய பாடப் புத்தகங்களை தயாரிப்பதனூ டாக அனைவருக்கும் கல்வி வழங்குவதை உறுதிப்படுத் துதல்.

பணிக்கூற்று

அரசினால் இலவசமாக பாடப் புத்தகங் களை வழங்கும் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதனூடாக கல்விச் செயன்முறைக்கு அவசியமான ஏனைய பாடப்புத்தகங்கள், செயல் நூல்கள், மொழி பெயர்க்கப்பட்ட நூல்கள், கலைச் சொற்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், அகராதி நூல்கள் மற்றும் ஒலி, ஒளி உபகரணங்கள் உட்பட ஏனைய சாதனங்களை தயாரித்து வழங்குவத னூடாக கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதன் மூலம் நாட்டிற்கு பிரயோசனமான நற்குணங்களுடன் கூடிய அறிவுடன் கூடிய பிரஜைகளை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தல்.

குறிக்கோள்கள்

கல்வியின் பண்புத்தர விருத்தியினூடாக நாட்டிற்கு பிரயோசனம் மிக்க நற்குணங்களுடன் கூடிய அறிவு நிறைந்த பிரஜைகளை உருவாக்குதல்

அரச பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கல்வி கற்கும் தரம் 1 முதல் 11 வரையான அனைத்து தரங்களில் கற்கும் மாணவர்களுக்கு அவசியமான பாடசாலைப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குதல்.

மேலதிக வாசிப்பு நூல்களை தயாரிப்பதனூடாக பாடசாலைக் கலைத்திட்டம் மற்றும் மேலதிக அறிவை மாணவர்களை வழங்குதல்.

வினா விடைப் புத்தகங்களை அச்சிடுவதனூடாக பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு முகங்கொடுப்பதற்கு தயார்படுத்துதல்.

ஆசிரியர் வழிகாட்டல்களை அச்சிடுதல் மற்றும் பகிர்ந்தளிப்பதனூடாக பாடத் திட்டம் தொடர்பிலான அறிவை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.

பாடத்திட்டத்திற்குரிய கற்றலை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அவசியமான கற்றல் உதவிச் சாதனங்களை வழங்குதல்.

பிரதான செயற்பாடுகள்

இலக்கம் 14, 715/3 1966 *ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*

இலங்கை அரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர் கல்வியின் பாவனைக்காக அங்கீகரிக்கப்பட்ட நூல்களை மொழிபெயர்த்தல், பிரசுரித்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல், பிரசுர உரிமைகளை கொள்வனவு செய்தல்.

கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியமான பாடப் புத்தகங்கள், கலைச் சொற்கள், அகராதி நூல்கள் மற்றும் ஏனைய புத்தகங்களை தயாரித்தல், பிரசுரித்தல், விந்யோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

கற்றல் உதவிகள், ஒலி, ஒளி மற்றும் ஏனைய உபகரணங்களைத் தயாரித்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல், வாசிக்கும் பொருட்களைத் தயாரிப்பதை ஊக்குவித்தல்.

விசேட விடயங்கள்

பிரேல் பாடப் புத்தகங்கள் தொடர்பாக

பிரேல் பாடப்புத்தகங்களின் கொள்வனவு ஆணை ஆவணங்களுக்கமைய

1. 2025 *ஆம் ஆண்டில் நாடு பூராகவும் கல்வி கற்கும் பார்வைக் குறைபாட்டுடன் கூடிய மாணவிகளுக்கு வழங்குவதற்கு அவசியமான பிரேல் பாடப் புத்தகப் பிரதிகளின் எண்ணிக்கை 7,970 ஆகும்.*

2. *பிரேல் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்ட* ***விசேட பாடசாலைகளின் எண்ணிக்கை 14 ஆகும்****.*

3. *வலயக் கல்வி அலுவலகங்களின் கீழ் உள்ள* ***விசேட கல்வி அலகுகளின் எண்ணிக்கை 43 ஆகும்****.*

4. *பிரேல் பாடப் புத்தகங்களைக் கோரிய* ***பார்வைக் குறைபாட்டுடன் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை*** *230 ஆகும்.*

திணைக்களத்தின் பணிக்குழுவினர் இணைந்து நடாத்திய 2024 சித்திரப் புத்தாண்டு விழா.....

2025 ***ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்***

2026 *ஆம் ஆண்டிற்கு அவசியமான பாடப் புத்தகங்களை அச்சிடுதல்.*

2026 *ஆம் ஆண்டிற்கு அவசியமான பாடப் புத்தகங்களை பாடசாலைகள் மற்றும் விநியோக நிலையங்களுக்கு விநியோகித்தல்.*

மேலதிக வாசிப்பு நூல்களைத் தயாரித்தல்

பார்வைக் குறைபாட்டுடன் கூடிய மாணவர்களுக்கு அவசியமான பிரேல் பாடப் புத்தகங்களை தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்

தொடர் இலக்கம்	செயற்பாடு	நிதி முன்னேற்றம் (ரூ. மில்லியன்)			**பௌதீக முன்னேற்றம்**	**2024-12-31** ஆம் திகதியளவில் எதிர்பார்க்கப்பட்ட செயல்திறன்
		மதிப்பீட்டுத் தொகை	செலவு	செலவு செய்யப்பட்ட தொகை மதிப்பீடு செய்யப்பட்ட தொகையின் சதவீதமாக (%)		
1	11	19986.00	8578.00 (தொடர் இலக்கம் 1 முதல் 4 வரை நிதி முன்னேற்றம் இங்கு தரப்பட்டுள்ளது)	42.92 % (தொடர் இலக்கம் 1 முதல் 4 வரை நிதி முன்னேற்றம் இங்கு தரப்பட்டுள்ளது.)	தரம் 2,3,4,5,7,8,9,11 ஆகியவற்றிற்கு 2025 ஆம் ஆண்டிற்கு அச்சிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடப்புத்தகங்களின் 100% சத வீதம் அச்சிட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. தரம் 1,6,10 இற்கு 2025 ஆம் ஆண்டில் அச்சிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன.	2025 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்க அவசியமான அனைத்து பாடப் புத்தகங்களையும் அச்சிட்டு நிறைவு செய்தல்.
2	பாடப் புத்தகங்களை விநியோகித்தல்.				2025 இற்கு அவசியமான பாடசாலை பாடப் புத்தகங்களின் 72 % சதவீதமானவை விநியோகிக்கப்பட்டுள்ளன (தரம் 1,6,10 இற்கான பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.	அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் உரிய நேரத்தில் பாடப் புத்தகங்களை வழங்குதல்.

3	விநியோகிப்பதற்கான கொடுப்பனவுகள் (மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு)				2023 ஆம் ஆண்டில் பாடப் புத்தகங்களை விநியோகிப்பதற்காக உரிய கொடுப்பனவுகள் அனைத்தும் செலுத்தப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் விநியோகிப் பதற்கான கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன.	விநியோக கொடுப்பனவுகளை 100% செலுத்துதல்.
4	மேலதிக புத்தகங்களை தயாரித்தல்.				13. மேலதிக நூல்களை அச்சிடுவதற்காக அச்சு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 10 நூல்கள் அச்சிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.	வருடத்தினுள் எதிர்பார்க்கப்படும் மேலதிக நூல்களை அச்சிடுதல்.
5	2023 ஆம் ஆண்டிற்குரிய பணிகளுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகைகளை செலுத்துதல்.	**8.2**	**8.18**	**100%**	100%செலுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளன	2023 ஆம் ஆண்டிற்குரிய செயற்பாடுகளுக்காக அனைத்து நிதி செலுத்துகளையும் நிறைவு செய்தல்.
6	மேலதிக நூல் ஒன்றான 16+ இளைஞர்களுக்கான அழைப்பு எனும்" நூலை தமிழ் மொழியில் தயாரித்தல்.	**5**	**1.49**	**29.8%**	100%அச்சிட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.	"16+ இளைஞர்களுக்கான அழைப்பு எனும்" நூலை தமிழ் மொழியில் தயாரிக்கும் பணிகளை நிறைவு செய்தல்.

7	அலுவலக தானியங்கி முறைமையினை விருத்தி செய்தல்.	**14.2**	**0**	**0%**	முறைமையில் விநியோக பிரிவுக்குரிய பகுதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய பிரிவுகளுக்குரிய முறைமையின் பகுதிகள் விருத்தி செய்யப்படுகின்றன.	அலுவலக தானியங்கி முறைமையை விருத்தி செய்து நிறுவுதல்.
8	திணைக்களத்திற்கான POS முறைமை ஒன்றை நிறுவுதல்.	**4**	**0**	**0%**	POS முறைமையை ஆரம்பிப் பதற்கான முதல்கட்ட கலந்துரை யாடல் இடம்பெற்றது	முறைமையினை நிறுவுதல்.
9	POS முறைமை மற்றும் தானியங்கி முறைமை தொடர்பில் பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்.	**0.5**	**0**	**0%**	செய்யப்படவுள்ளது	POS முறைமை மற்றும் தானியங்கி முறைமை தொடர்பில் சிறந்த அறிவு மற்றும் புரிதலை வழங்குதல்.

10	கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் கற்றல் சாதனங்கள் தொடர்பில் மதிப்பீட்டு ஆய்வு	0.2	0	**0%**	செய்யப்படவுள்ளது	மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைத் தயாரித்தல்.
11	கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைத் திணைக் களம் ஆகியனவற்றுடன் இணைந்து கல்வி சார் கருவிகளை அச்சிடல்	15.9	13.5	**84.9%**	*11* கடந்த கால வினாப் பத்திரங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஆங்கிலம் மற்றும் கணிதக் கிளைகளின் *03* புத்தகங்களை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன.	கல்விசார் கருவிகளை அச்சிடல்
12	கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு இயந்திரங்களைக் (Brightness and Opasity Tester) கொள்வனவு செய்தல்.	2	**0**	**0%**	திறந்த விலைமனுக் கோரல் மூலம் பெற்றுக் கொள்வதற்காக குழுவி னால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விலை மனுக்கள் கிடைக்கப் பெற்ற தன் பின்னர் பெறுகைச் செயற்பாடு கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.	கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தி; இயந்திரங்களைப் பொருத்துதல். (Brightness and Opacity Tester)

13	உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.	1	0.87	86.6 %	*102* உத்தியோகத்தர்கள் *07* பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்	திணைக்களத்தின் செயல்டதிறனை மேம்படுத்துதல்.
14	**<u>உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்</u>**. வாகனங்கள்	**<u>வேலைத் திட்டங்கள்</u>** 3	2.35	78.34 %		நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் இருக்கும் நிலைகளில் பேணுவதற்கு அவசியமான வசதியளித்தல்.
15	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	1.25	1.25	100 %		
16	இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	1	0.86	86.09 %		
17	கட்டடங்கள் மற்றும் கட்டுமானம்	4	3.56	89.04 %		
18	**<u>மீண்டுவரும் செலவினங்கள்</u>** பராமரிப்பு செலவுகள்	9.31	7.42	79.71 %		
19	சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு	64.5	62.37	96.7 %		
20	மேலதிக சேவை வழங்குதல்.	37.84	27	71.37 %		

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் 2024.01.01 ம் திகதி முதல் 2024.12.31 திகதி வரையான முன்னேற்றம்

01. பாடசாலை பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்

நாட்டில் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாகவும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு மத்தியில் அவ் அவ் வருடங்களில் நடாத்தப்பட இருந்த தேசிய மட்டப் பரீட்சைகள் எவையும் திட்டமிடப்பட்டவாறு நடாத்தப்படாத காரணத்தால் 2024 ஆம் ஆண்டில் 2023 ஆம் ஆண்டிற்குரிய பரீட்சைகளையும் நடாத்த நேரிட்டது.

க.பொ.த (உயர் தர) பரீட்சை **2023 (2024)**

பரீட்சை நடாத்தப்பட்ட திகதி - 2024.01.04 முதல் 2024.01.31

பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி - 2024.05.31

	விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை				மொத்த விண்ணப்ப தாரர்கள்	
	பாடசாலை		தனிப்பட்ட		எண்ணிக்கை	சதவீதம் (%)
	பெண்	ஆண்	பெண்	ஆண்		
03 பாடங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	135,010	94,047	24,795	15,761	269,613	
பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க அவசியமான ஆகக் குறைந்த தகைமைகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை	97,305	54,038	14,639	7,462	173,444	64.30%
பெறுபேறு இடைநிறுத்தப் பட்டவர்களின் எண்ணிக்கை	55		35		90	



***க.பொ.த (சாதாரண தர) பரீட்சை* 2023 (2024)**

பரீட்சை நடைபெற்ற திகதி - 2024.05.06 *முதல்* 2024.05.15

பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை - 453,420

பெறுபேறு வெளியிடப்பட்ட திகதி - 2024.09.28

க.பொ.த (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை - 244,228

***தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை* 2024**

பரீட்சை நடைபெற்ற திகதி - 2024.09.15

பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை - 323,879

***க.பொ.த (உயர் தர) பரீட்சை* 2024**

பரீட்சை வகை	***நடாத்தப்பட்ட எண்ணிக்கை***	**பெறுபேறுகள் வெளியிடப்பட்ட எண்ணிக்கை**
உள்நாட்டு மாணவர்களுக்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கற்கை செயற்பாடுகளை தொடர்வதற்காக அமைச்சினால் வெளிநாட்டு புலமைப்பரிசில் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அமைய 2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு முதலாவது இளமானி பட்ட புலமைப்பரிசிலிற்காக 26 மாணவர்களும் பட்டப்பின் படிப்பிற்காக 101 மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டைப் போன்று வெளிநாட்டு மாணவர்களுக்கும் இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியினைத் தொடர்வதற்காக வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு அமைய 2024 ஆம் ஆண்டளவில் முதலாவது இளமானிப் பட்டத்தினை தொடர்வதற்காக 356 வெளிநாட்டு மாணவர்களும், பட்டப்பின் படிப்பிற்காக 561 வெளிநாட்டு மாணவர்களும் பதிவு செய்துள்ளனர்.

உயர் கல்விப் பிரவேசம் பெற்ற பொருளாதார சிரமங்கள் கொண்ட மாணவர்களுக்காக பிரதான 03 முறைகளின் கீழ் நிதி அனுசரணைகள் வழங்கப்படுகின்றன. அதாவது மஹபொல புலமைப்பரிசில் முறை, பல்கலைக்கழக புலமைப்பரிசில் முறை மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள், நபர்களினால் வழங்கப்படும் நன்கொடையாகும். அதற்கு அமைய மஹபொல புலமைப்பரிசில் முறை மற்றும் பல்கலைக்கழக புலமைப்பரிசில் முறையின் கீழ் 2024 ஆம் ஆண்டில் 92,550 மாணவர்களுக்கு ரூபா 1,865.14 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி முறைமையின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் திறமைகள் கொண்ட பட்டாதரிகளை உருவாக்குவது நோக்கமாகும். இதற்கு அமைய 2023/2024 காலப்பகுதியில் பல்கலைக்கழக முறைமையில் உருவாக்கப்பட்ட பட்டதாரிகள் (பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் மற்றும் பிக்கு பல்கலைக்கழகம் உட்பட) 30,703 என்பதுடன் பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் 10, 454 உருவாக்கப்பட்டுள்ளனர். 2023 ஆம் ஆண்டில் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தினால் 5,100 பட்டதாரிகள் உருவாக்கப்படடுள்ளனர்.

பட்டதாரிகளின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதற்காக கல்விசார் பணியாளர் சபைக்காக கலாநிதி றம்றும் பட்டப்பின் படிப்பு வாய்ப்புக்களை வழங்குதற்கும், பல்வேறுபட்ட சர்வதேச செயலமர்வு வேலைத்தட்டங்களை அமுல்படுத்துவதற்காக உயர் கல்வி அமைச்சுடன் கைச்சாத்திடப்படும் இருதரப்பு உடண்படிக்கையின் கீழ் வெளிநாடுகளினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலை வழங்குவதற்கும் தொடர்ச்சியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பட்டதாரிகளின் பண்புசார் தரத்தனை மேம்படுத்துவதற்கு இனைவாக, உயர் கல்வி முறைமையில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பட்டதாரிகளின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதற்க இணைவாக, உயர் கல்வி முறைமையின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்துவதற்காக பல்வேறுட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக அமைச்சு மட்டத்தினைப் போன்று பல்கலைக்கழக மட்டத்தில் அனைத்து ஊழியர்களுக்காகவும் உள்நாட்டைப் போன்று வெளிநாட்டுப் பயிற்சி வேலைத்திட்ட வாயப்புக்களை வழங்குதல் போன்று அது தொடர்பாக உாயி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில் உயர் கல்வி முறைமையில் அனைத்து (நிரந்தர மற்றும் தற்காலிக) கல்விசார் ஊழியர்கள் 10,277 என்பதுடன் கல்விசாரா ஊழியர்கள் 12.926 அகும்.

அனைத்து பல்கலைக்கழகங்கள் அடங்களாக உயர் கல்வி முறைமை மூலம் 21 ஆவது நூற்றாண்டின் எதிர்வரும் தசாப்தத்திற்காக தொழில்நுட்பம் கொண்ட உலகளாவிய பொருளாதாரத்திற்கு இணைவாக பட்டதாரிகளைப் போன்று டிப்ளோமாதாரிகளையும் உருவாக்குவது நாம் எதிர்கொண்டுள்ள பிரதான சவாலகும். இதற்கு அமைய, பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பாடநெறிகளை அபிவிருத்தி செய்தல், புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதற்காக அமைச்சினால் உள்நாட்டைப் போன்று வெளிநாட்டு நிதி அனுசரணையின் கீழ் பல்வேறுபட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த மூலதன ஒதுக்கீட்டில் 88% உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூபா 22,214 மில்லியன் அதாவது 75% நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அவ் ஒதுக்கீடுகளில் ரூபா 8,366 மில்லியன் உள்நாட்டு நிதியத்தின் மூலமும், வெளிநாட்டுக் கடன் மற்றும்

உதவிகள் மூலம் ரூபா 13,848 மில்லியன் நிதியும் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் 2024 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 34 செயற்திட்டங்ககளினதும், நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட 08 க்காகவும் புதிய செயற்திட்டம் 01 இற்காகவும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நாட்டின் அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்வதற்கு, அந் நாட்டில் உருவாகும் புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளின் பயன்களை விளைதிறன் மிக்கதாக, பயன்படுத்துவது அத்தியவசிய விடயமாகும். ஆமைச்சினால், 2024 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக மூலதன ஒதுக்கீடாக ரூபா 892.5 உம் மீண்டெழும் செலவினமாக ரூபா 3,267.10 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதே போன்று ரூபா 579.5 மில்லியன் வெளிநாட்டு செயற்திட்டங்கள் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஒதுக்கீடுகளின் கீழ் பல்கலைக்கழகங்களினல் ஆராய்ச்சி, அபிவிருத்தி, புத்தாக்கங்கள் மற்றும் வர்த்தகமயம் போன்றன தனித்தனியாக மேற்கொள்வதற்கு பல்வேறுபட்ட செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தி ஆராய்ச்சிகள் ஊடாக பட்டப்பின் படிப்ப பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

02

நிதி முன்னேற்கள்

2.1 அறிமுகம்

உயர்கல்வி முறைமையை அபிவிருத்திசெய்யும் நோக்கில் 2024 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடாக 103.3 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அது 11.5% அதிகரிப்பாகும். 2007 ஆம் ஆண்டில் உயர்கல்விக்காக தனியான அமைச்சு தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரூபா 19.8 பில்லியன் ஒதுக்கப்பட்டது. அது தொடக்கம் உயர்கல்வி அமைச்சு பல்வேறுபட்ட விடயப்பரப்பிற்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டது. இவ் அமைச்சிற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் கிரமாக அதிகரிக்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுகாலப் பகுதியில் இவ் ஒதக்கீடு 260.8% விதம் வரை விருத்தியடைந்துள்ளது.. உயர்கல்வி முறைமைக் காக 2014 ஆம் ஆண்டு முதல் பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு உரு. 2.1 இன் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

2.1 படம் : உயர் கல்வி முறைமை பொதுத்திறைசேரியினால் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல். 2014– 2024



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சபை)

2024 ஆம் ஆண்டுக்கான உயர்கல்வி முறைமையின் மொத்தச் செலவினத்துக்கான நிதி ஒதுக்கீடு 103.3 பில்லியன் ரூபா ஆகும். பொதுத் திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டு அளவினைக் கருத்திற் கொள்ளும் போது அது உள்நாட்டு நிதியம் ரூ72.8 பில்லியன் ரூபாவினாலும், வெளிநாட்டு கடன் மற்றும் கொடைகள் 18.7 பில்லியன் ரூபாவினாலும் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளது

2024 ஆண்டிற்காக நிதி முன்னேற்ற உள்ளீடு 2.2 படம் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2 படம்: 2024 ஆண்டிற்கன நிதிய உள்ளீடு



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிருவகம் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

2024 ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 103.3 பில்லியன் ஒதுக்கீடுகளில் ரூபா 33.8 பில்லியன் மூலதன ஒதுக்கீடு என்பதுடன் ரூபா 69.5 பில்லியன் மீண்டெழும் செலவின ஒதுக்கீடாகும். இம் மூலதன ஒதுக்கீடு ரூபா 33.8 பில்லியனும் ரூபா 20.1 பில்லியனும் வெளிநாட்டு செயற்திட்டம் மூலம் பெற்ற ஒதுக்கீடாகும்.

2024 ஆம் அண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் செவிடப்பட்ட மொத்த நிதி ரூபா 105.2 பில்லியன் என்பதுடன், அது ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் 101.8% அகும். மூலதன ஒதுக்கீடுகளில் செலவிடப்பட்ட விகிதாசரம் 86.8% என்பதுடன் மீண்டெழும் ஒதுக்கீடு செலவீட்டு விகிதாசாரம் 109.1% ஆகும். 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மற்றும் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 31 ஆம் திகதி அளவில் ஒதுக்கீட்டு செலவினமாக மேற்கொள்ளப்பட்ட முறை 2.3 படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் ஒதுக்கீட்டு ஒப்பீட்டிற்கு அமைய 2023 ஆம் ஆண்டில் 93.3% உம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று 101.8% என ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுகள் செலவிடப்பட்டுள்ளன.

2.3 படம் : ஒதுக்கிடுகளை மேற்கொள்ளல் மற்றும் செலவினம் 2023 மற்றும் 2024.



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைரக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிருவகம் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

2.2 மீண்டெழும் செலவினம்

2024 ஆம் ஆண்டிற்காக மீண்டெழும் செலவினமாக ரூபா 69.5 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல் 6.3 பில்லியன் அதிகரிப்பினைக் காண்பித்துள்ளது.

2024 ஆண்டில் மீண்டெழும் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் 81% இற்கு மேற்பட்ட அளவு தனிநபர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. சேவைச் செலவினம், விநியோக செலவினம், பிராயாணச் செலவினம், பராமரிப்புச் செலவினம் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக 12.3% உம் மாணவர்களுக்காக நிதி வசதிகளை வழங்குவதற்காக 6.5% உம் வரவு செலவுத் திட்ட யோசனை செயற்திட்டமான மாணவர் கடன் யோசனைத் திட்டம் மற்றும் மடிக் கணனியிற்காக கடன் வசதிகளை வழங்குவதற்கு 0.1% உம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட மீண்டெழும் செலவினங்களின் உள்ளீடு 2.4 படத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

இதன் மிண்டெழும் செலவினங்களுக்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஈட்டப்பட்ட வருமானங்களில் ரூபா 6.9 பில்லியன் மீண்டெழும் செலிவனத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

20234 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் தனிநபர் சம்பளத்திற்கான ஒதுக்கீடு செலவினம் மேற்கொள்ளும் விகிதாசாரம் 100.5% என்பதுடன் மாணவர்களுக்காக நிதி வசதிளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் செலவின விகிதாசாரம் 100% ஆகும். விளக்கமான உள்ளீடு 2.5 படத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.5 படம் மீண்டெழும் ஒதுக்கீட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்ட முறைகள் - 2024



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைரக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிருவகம் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

செலவிடப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் கூடுதலான வகிதாசாரமான 31.2% செலவிடப்பட்டு இருப்பது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காகும். இரண்டாவது கூடுதலான விகிதாசாரமான 26.6% மேற்கொள்ளப்பட்டு இருப்பது கல்விசார் பணியாளர் சபை கொடுப்பனவிற்காகும். இதன் விளக்கமான உள்ளீடு 2.6 படத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

6 படம் : தனிநபர் சம்பளத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு செலவினம் மேற்கொண்ட முறைகள் - 2024



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைரக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிருவகம் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

2.3 மூலதன செலவினம்

உயர் கல்வி முறைமைக்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 33.8 பில்லியன் நிதி மூலதன செலவினத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. மூலதன செலவின உள்ளீட்டில் கூடுதலான அளவு ஒதுக்கீடான 78.8% பங்குகள் நிர்மாண செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 4.8% மூலதன சொத்துக்கள் புணரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதற்காகவும், 4.7% நிலையான சொத்துக்கள் பொறுப்பேற்கிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி செயற்பாடுகளைப் போன்று புத்தாக்க

அபிவிருத்தி மற்றும் வர்த்தக மயத்திற்காக வசதிகளை வழங்குவதற்காக 3.8% ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் வேலைவாய்ப்பு மற்றும் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வதற்கா 0.7% உம் கடன் தவணைக்காக 5.5% உம் ஏனைய மூலதன செலவினத்திற்காக 1.7% ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 மூலதன செலவின ஒதுக்கீட்டு உள்ளீடு – 2024 (ரூபா.பில்).



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைரக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிருவகம் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

மேற்கூறப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஈட்டப்பட்ட வருமானங்கள் மூலம் ரூபா 6,630 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இது மீண்டெழும் செலவினங்களில் ரூபா 6,295 உம் மூலதன செலவினங்களில் ரூபா 335 மில்லியன் அகும்.

மூலதன செலவின உள்ளீட்டின் அவ்வவ் உள்ளீட்டிற்காக 2024 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் ஒதுக்கப்பட்ட நிதியில் உண்மையாக செலவினம் மேற்கொள்ளப்பட்ட நிதியினை கருத்திற் கொள்ளும் போது நிர்மாணிப்பு செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் 85.7% உம், பண்புசார் தரம், விளைத்திறன் மற்றும் விளைத்திறனை விருத்தி செய்வதற்காக 93.9% உம் ஆராய்ச்சி செயற்பாடுகளைப் போன்று புத்தாக்கத்தினை விருத்தி செய்வதற்காக மற்றும் வர்த்தகமயத்திற்காக வசதிகளை வழங்குதற்காக 19.9% பிரதான சொத்துக்கள் புணரமைப்பு மற்றும் விருத்தி செய்வதற்காக் 94.6% உம் நிலையான சொத்தினை எட்டுவதற்காக 154.8% உம் கடன் தவணைக் கொடுப்பனவிற்காக 79.1% உம் ஏனைய மூலதன செலவினங்கள் மூலம் 99.6% உம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மூலதன ஒதுக்கீட்டு செலவினம் மேற்கொண்ட முறைகள் 2.8 படத்தின் மூலம்.

2.8 படம்: ஒதுக்கீட்டு செலவினம் மேற்கொண்ட முறைகள்



(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு, பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு -)

2.1 அட்டவணை : தாபனம் என்ற ரீதியில் மீண்டெழும் ஒதுக்கீடுகள் மற்றும் மூலதன ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட முறைகள் -
2024 டிசம்பர் 31 வரை (மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்விப் பிரிவு பலக்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

பல்கலைக்கழகங்கள் மற்றும் தாபனம்	மீண்டெழும் 2024 (ரூபா.மி.)			மூலதனம் 2024 (ரூபா.மி.)			முழு மொத்தம் 2024 (ரூபா.மி.)		
	ஒதுக்கீடுகள்	செலவினம்	%	ஒதுக்கீடுகள்	செலவினம	%	ஒதுக்கீடுகள்	சேலவினம்	%
உயர் கல்விப் பிரிவு	256	237	92	10	8	80	266	245	92.1
ஊயர் தொழில்நுட் நிறுவகம்	1,093	1,206	110.3	75	74	100	1,168	1,281	109.7
பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்	552	563	102.0	75	51	68.0	627	614	97.9
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	493	492	99.8	150	21	14.0	643	513	79.8
வர்த்தக செயற்திட்டம்	-	-	-	20,155	16,675	82.7	20,155	16,675	82.7
இராஜாங்க அமைச்சு அலுவலகம்	***26***	***19***	72	3	3	100	29	22	75.3
வரவு செலவு யோசனை	1,892	1,845	97.5	5,864	4,726	80.6	7,756	6,571	84.7
அமைச்சின் முழு மொத்தம்	***4,312***	***4,362***	***101.2***	***26,332***	***21,559***	***81.9***	***30,644***	***25,921***	***84.6***
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	65,211	71,506	109.7	7,500	7,835	15.2	72,711	71,341	59.1
முழு மொத்தம்	**69,523**	**75,868**	**109.1**	**33,832**	**29,394**	**86.9**	**103,355**	**105,262**	**101.8**

(மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதன செலவினத்திற்காக ஒப்பீடு செய்யும் போது 2024.12.31 ஆம் திகதியன்று கல்வி அமைச்சின் உயர் கல்விப் பிரிவின் கீழ் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பிக்கு, பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை உயர் கல்வி தொழில்நுட்ப நிறுவகத்தினால் ஈட்டப்பட்ட வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளது)

2.4 மொத்த செலசவினத்தின் தாபனப் பங்களிப்பு

செலவினத்திற்கான மொத்த ஒதுக்கீட்டு வழங்களாக கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகிய இரு செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சின் கீழ் உயர் கல்வியிற்காக ஒதுக்கப்பட்டு இருந்த ரூபா 30,644 மில்லியன் ஒதுக்கீட்டு நிதி ரூபா 26,332 மில்லியன் ரூபா மூலதன ஒதுக்கீடு மற்றும் ரூபா 4,312 மில்லியன் ஒதுக்கீடான மீண்டெழும் ஒதுக்கீடுகளில் அடங்கியுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவனால் ஒதுக்கப்பட்ட ரூபா 72,711 மில்லியனில் ரூபா 7,500 மூலதன செலவினமாகவும் ரூபா 64,211 மில்லியன் மீண்டெழும் செலவினமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தாபன ரீதியில் ஒதுக்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன ஒதுக்கீடுகள் செலவிடப்பட்ட நிதியில் தொடர்ச்சியாக அட்டவணை இலக்கம் 2.1 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.5 வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம்

டெ

2.5.1 வெளிநாட்டு இளமானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம

2023 ஆண்டில் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தில் 55.8% வெளிநாட்டு இளமானி பட்ட அபோட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்ததுடன் அது 411 மாணவர்களிடம் இருந்து ரூபா 508.6 மில்லியன் கிடைக்கப் பெற்றமை பதிவாகியுள்ளது. 2024 டிசம்பர் மாதமளவில் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தில் 59.3% இளமானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடம் என்பதுடன் அது 339 மாணவர்களில் ரூபா 551.3 மில்லியன் ஆகும்.

2023 ஆண்டில் வெளிநாட்டு இளமானிப்பட்ட அபேட்சக மாணவர்களிடம் கிடைத்த வருமானம் பாடநெறிக்கு அமைய கருத்திற் கொள்ளும் போது கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது வைத்திய மணாவர்களிடம் என்பதுடன் அது 2023 ஆம் ஆண்டில் 188 மணவர்களிடமிருந்து ரூபா 461.7 மில்லியன் என்பதுடன் விகிதாசாரமாக இளமானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந3து கிடைத்த வருமானத்தில் 90.8% அகும்.

2024 டிசம்பர் மாதமளவில் கூடுதலான வருமானத்தினை ஈட்டி இருப்பது வைத்திய மாணவர்கள் மூலமாகும். அதன் மாணவர் எண்ணிக்கை 220 என்பதுடன் வருமானம் ரூபா 520 மில்லியன் ஆகும். அது 94.3% விகிதாசார பெறுமதியாகும். இரண்டாவது கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது பெறியியல் பாடநெறியினைத் தொடர்வதற்காக வருகை தந்த மாணவர்களிடம் என்பதுடன் அது 2024 ஆம் ஆண்டில் இளமானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த மொத்த வருமானத்தில் 2.2% ஆகும். 2024 டிசம்பர் மாதமளவில் மூன்றாவது கூடுதலான வருனம் ஈட்டப்பட்டு இருப்பது பௌத்த கற்கை பாடநெறியினை தொடர்வதற்காக வருகைதந்த மாணவர்கள் மூலமாகும் என்துடன் அது 9.7 மில்லியன் என்பதுடன் மொத்த வருமானத்தில் 1.8% ஆகும்.

அந்தந்த பாடநெறிக்கு அமைய 2024 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதமளவில் வெளிநாட்டு இளமானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் 2.2 அட்டவணை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2 அட்டவணை : இதுவரையில் அந்தந்த பாடநெறிக்கு அமைய வெளிநாட்டு இளமானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் (2024 டிசம்பர் மாதம் 31 ஆம் தகதியன்று)

(மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

புாடநெறிகள்	மாணவர் எண்ணிக்கை	2024.12.31 இற்கு வலுருமானத்திற்கு (ரூபா.)
வைத்திள விஞ்ஞானம்	220	520,088,185.57
பொறியியல்	7	11,958,044.80
பௌத்த கற்கை	87	9,721,130.60
கலை	22	5,409,630.93
ஊயிரியல் விஞ்ஞானம்	1	368,060.00
குணனி விஞ்ஞானம்	2	3,778,500.00
மொத்தம்	**339**	**551,323,551.90**

வெளிநாட்டு இளமானி பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் பால்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அமைய ஒப்பீடு செய்யும் போது 2023 ஆம் ஆண்டில் தொடராக 47.2% என்ற வருமானம் கொழும்பு பல்கலைக்கழகம், 17.2% என்ற வருமானம் களனிப் பல்கலைக்கழகம் 9.3% என்ற வருமானம் பேராதனைப் பல்கலைக்கழகத்தினாலும் ஈட்டப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதமளவில் பெற்ற மொத்த வருமானத்தில் 47.2% கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலமாகும். இரண்டாவது கூடுதலான வருமானமான 15.9% ஈட்டப்பட்டு இருப்பது களனிப் பல்கலைக்கழகத்தில் இருந்து என்பதுடன், மூன்றாவது கூடுதலான 13.6% வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது பேராதனை பல்கலைக்கழகத்தின் மூலமாகும். 2024 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதளவில் அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கு அமைய வெளிநாட்டு இளமானிப் பட்ட ஆபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் 2.3 அட்டவணை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.3 அட்டவணை : அந்நதந்த பல்கலைக்கழகங்களுக்கு அமைய வெளிநாட்டு இளமானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் (2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று)

பல்கரைக்கழகங்கள்	மாணவர் எண்ணிக்கை	2024.12.31 இற்கு வருமானம் (ரூபா)
கொழும்பு	83	260,499,500.00
களனி	83	87,849,109.69
பேராதனை	67	75,168,663.25
ஸ்ரீ ஜயவர்தனபுர	13	40,600,000.00
றுஹுனு	12	24,307,376.14
யாழ்ப்பானம்	6	23,006,250.00
கிழக்கு	7	15,615,027.87
மொரட்டுவை	5	13,606,934.80
பௌத்த மற்றும் பாலி	59	4,615,035.15
வடமேல்	1	3,703,125.00
கொழும்பு (UCSC)	1	1,840,500.00
திறந்த பல்கலைக்கழகம்	2	512,030.00
மொத்தம்	**339**	**551,323,551.90**

(மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

2023 ஆண்டில் 36 நாடுகளுக்கு உரிய 411 மாணவர்கள் தமது இளமானிப் பட்ட கற்கை செயற்பாடுபளுக்காக இலங்கைக்கு வருகைதந்துள்ளதுடன் 102 என்ற கூடுதலான மணாவர்கள் வருகைதந்திருப்பது பூட்டானில் இருந்தாகும். கூடுதலான வருமானமும் ஈட்டப்பட்டு இருப்பது பூட்டானில் இருந்து வருகை தந்த மாணவர்களிடமிருந்து என்பதுடன் அது ரூபா 133.5 மில்லியனாகும். அது இள மானிப் பட்ட அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த மொத்த வருமானத்தில் இருந்து 26.2% ஆகும

2024 ஆம் ஆண்டில் 31 நாடுகளில் இருந்து 339 மணாவர்கள் இலங்கைக்கு இளமானிப் பட்டத்தினை தொடர்வதற்கான செயற்பாடுகளில்

ஈடுபட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டைப் போன்று 2024 ஆம் ஆண்டில் இளமானி பட்ட அபேட்சக மணாவர்களிடமிருந்து கிடைத்த வருமானத்தில் கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது பூட்டானில் இருந்து என்பதுடன் அது 115 மணாவர்களிடமிருந்து ரூபா 163.1 மில்லியன் ஆகும். விகிதாசார அடிப்படையில் 29.6% ஆகும்.

2023 ஆண்டில் மற்றும் 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் வெளிநாட்டு இளமானிப் பட்ட அபேட்சக மணாவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் நாடுகளுக்கு அமைய இணைப்பு A மூலம் குறிப்பிடப்பட்டு உள்ளது

2.5.2 வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம்..

2023 ஆம் ஆண்டில் பட்டப்பின் படிப்பு அபேட்சக வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த மொத்த வருமானம் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த மொத்த வருமானத்தில் 44.2% சதவீதம் என்பதுடன் அது 790 மாணவர்களிடமிருந்து ரூபா 403.2 மில்லியன் ஆகும். 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதளவில் பட்டப்பின் படிப்பு ஆபேட்சக வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து பெற்ற வருமானத்தில் 40.7% விகிதாசாரமாகும் என்பதுடன் அது 554 மாணவர்களிடமிருந்து ரூபா 378.4 மில்லியனாகும்.

2023 ஆம் ஆண்டில் பட்டப்பின் படிப்பு அபேட்சக வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த மொத்த வருமானத்தில் கூடுதலான வருமானமான 27.2% விகிதாசாரம் ஈட்டப்பட்டு இருப்பது பொருளாதர முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடம் என்பதுடன் அது 89 மணாவர்களிடமிருந்து ரூபா 109.7 மில்லியன் ஆகும்.

2024 ஆண்டில் டிசம்பர் மாதளவில் பட்டப்பின் படிப்பு அபேட்சக வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கடைத்த மொத்த வருமானத்தில் கூடுதலான வருமானமான 53.8% ஈட்டப்பட்டு இருப்பது முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடம் என்பதுடன் அது 158 மாணவர்கள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 203.4 மில்லியன் ஆகும். 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் அந்தந்த பாடநெறிக்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் பகடிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் 2.4 அட்டவணை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.4 **அட்டவணை : 2024 டிசம்பர் மதாளவில் அந்தந்த பாடநெறிகளுக்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து பெற்ற வருமானம்.**

பாடநெறி	மாணவர் எண்ணிக்கை	2024.12.31 இற்கு வருமானம் (ரூபா.)
முகாமைத்துவம்	158	203,431,500.00
பௌத்த கற்கை	259	57,691,018.31
கலை	68	41,321,513.00
வைத்திய விஞ்ஞானம்	5	36,806,008.00
விஞ்ஞானம்	9	10,620,675.92
சட்டம்	4	6,137,000.00
கல்விமானி	29	4,676,500.00
பெருளியல் விஞ்ஞானம்	4	1,866,953.78
பொறியியல்	2	1,672,836.02
தகவல் தொழில்நுட்பம்	1	305,424.37
பிரயோக விஞ்ஞானம்	1	148,750.00
மொத்தம்	**554**	**378,456,748.99**

(மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானத்தினை கருத்திற் கொள்ளும் போது 2023 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழக வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானத்தில் கூடுதலான வருமானமான ரூபா 207.4 மில்லியன் ஈட்டப்பட்ட முடிந்துள்ளதுடன் அது மொத்த வருமானத்தில் 51.4% ஆகும். 2023 ஆம் ஆண்டில் இரண்டாவது கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது பௌத்த மற்றும் பாலி பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIBPS) என்பதுடன், அது ரூபா 71.3 மில்லயினாகும். அது பட்டப்பின் படிப்பு வருமானத்தில் விகிதாசாரமாக 17.7% ஆகும். 2023 ஆம் ஆண்டைப் போன்று 2024 டிசம்பர் மாதளவில்

வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மாணவர்களின் வருமானத்தில் கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலமாகும். அது ரூபா 184.5 மில்லியன் என்துடன் பட்டப்பின் படிப்பு வருமானத்தில் 48.8% ஆகும்.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் பல்கலைக்கழக மற்றும் நிறுவனங்களுக்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து பெற்ற வருமானம் 2.5 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.5. அட்டவணை நிறுவனங்களுக்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் (2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று)

நிறுவனங்கள் / பல்கழலைக்கழகங்கள்	முாணவர் எண்ணிக்கை	2024.12.31 திகதியன்று வருமானம் (ரூபா.)
கொழும்பு	113	184,589,828.80
பட்ப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவகம் - (PIM)	98	110,102,500.00
பௌத்த மற்றும் பாலி பட்டப்பின் படிப்பு நிறுவகம்	264	54,174,000.00
திறந்த பல்கலைக்கழகம்	17	14,828,523.37
உயிரியல் இரசாயண அனு உயிரியல் விஞ்ஞானம் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம (IBMBB)	3	4,374,897.12
களனி	11	2,775,525.85
மானிட சாஸ்திர மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIHS)	7	2,013,900.00
ஸ்ரீ ஜயவர்தனபுர	5	1,788,801.33
மொரட்டுவை	2	1,672,836.02
பேராதனை	1	1,380,375.00
பௌத்த மற்றும் பட்டப்பின் படிப்பு நிறுவகம்	2	432,517.50
விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIS)	29	248,346.00
பிக்கு பல்கலைக்கழகம்	2	74,698.00
மொத்தம்	**554**	**378,456,748.99**

(மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்)

2023 ஆம் ஆண்டில் 32 நாடுகளுக்கு உரியதாக 790 மாணவர்கள் பட்டப்பின் படிப்பு கற்கை செயற்பாடுகளுக்காக இலங்கைக்கு வருகைதந்துள்ளதுடன் இவர்களில் 363 என்ற கூடுதலான மாணவர்கள் வருகை தந்திருப்பது சீனாவில் இருந்தாகும். இதன் மூலம் வருமானமாக ரூபா 267.1 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது. அது பட்டப்பின் படிப்பு கற்கை மாணவர்களிடமிருந்து கிடைத்த மொத்த வருமானத்தில் 66.2% விகிதாசாரமாகும். அடுத்த தொடராக கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது மியன்மாரில் இருந்து என்பதுடன் அது 243 மாணவர்களில் ரூபா 50.1 மில்லியன் என்பதுடன் விகிதாசரமாக கணிப்பீடு செய்யும் போது அது 12.4% ஆகும்

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதளவில், கூடுதலான மாணவர்கள் வருகைதந்திருப்பது சீனாவில் இருந்தாகும். அது 290 மாணவர்கள் என்பதுடன் வருமானமாக ரூபா 268.5 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது. விகிதாசார அடிப்படையில் நோக்கும் போது பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானத்தில் 70.9% சதவீதமாகும். இரண்டாவது கூடுதலான வருமானம் ஈட்டப்பட்டு இருப்பது மலைதீவில் இருந்து வருகைதந்த மணாவர்கள் 10 பேர்களிடம் இருந்து ரூபா 41.4 மில்லியன் என்பதுடன் அது மொத்த வருமானத்தில் 10.9% ஆகும்

2023 ஆண்டில் மற்றும் 2024 ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் நாடுகளுக்கு அமைய இணைப்பு A1 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

03

உயர் கல்வியின் பிரவேசங்கள் மற்றும் வாய்ப்புக்கள்

3.1 அறிமுகம்

கல்வி என்பது காணப்பட்ட மற்றும் காணப்படும் அனைத்து சமூக கட்டங்களினால் உருவாக்கப்பட்ட அறிவினை எட்டி மற்றும் பகிர்ந்து புதிய அறிவினை உருவாக்கும் செயற்பாடாகும். இதற்கு அமைய பண்புசார் தரம் கொண்ட பிரஜைகளை உருவாக்கும் செயற்பாட்டின் போது அனைவருக்கும் உயர் கல்வியிற்கான வாய்ப்பினை வழங்கும் கொள்கையினை வகுத்து அமுல்படுத்துவது அனைத்து அரசாங்கங்களினதும் பொறுப்பாகும்.

உள்நாட்டு மற்றும் உலளாவிய பொருளாதார இலக்குகளுக்காக முன்னுரிமையினை வழங்கும் நோக்குடன் அரச பல்கலைக்கழக முறைமையில் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது காணப்படும் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் செயற்பாடுகளின் தாமதங்களை தவிர்த்து அந்தந்த பாடநெறிகளுக்காக குறைந்தபட்ச தகமையினை இணங்கண்டு அதனை நிவர்த்தி செய்யும் அனைவருக்கும் வாய்ப்பினை வழங்கக் கூடியவாறு மூன்றாம் நிலைக் கல்வி முறைமையினை முறையாக விரிவுபடுத்துவதற்கான இலக்கு தொடர்ந்தும் வகுக்கப்பட வேண்டும். அதற்கு அமைய விரிவுரை மண்டபங்கள், ஆராய்ச்சி ஆய்வுகூடம், நூலகம், உணவகம், இணையத்தள வசதிகளை உரிய தரங்களுக்கு அமைய வகுப்பதற்கு தொடர்ந்தும் செயற்பாடுகள் வகுக்கப்படுகின்றன.

உயர் கல்வியிற்காக காணப்படும் வாய்ப்புக்கள் மற்றும் பிரவேசங்களை விருத்தி செய்வது அமைச்சின் பிரதான நோக்கம் என்பதுடன், அதற்காக பல்வேறுபட்ட மூலோபாயங்கள் பின்பற்றப்படுகின்றன. விஷேடமாக உள்நாட்டைப் போன்று வெளிநாட்டு செயற்திட்டம் மூலம் கிடைக்கும் ஒதுக்கீடுகள் பல்ககலைக்கழக முறைமை, உயர் கல்வி நிறுவனங்கள் பௌத்த மற்றும் பாலி, பிக்கு பல்கலைக்கழகம் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவிற்கு அனுப்பி அதன் பௌதீக மற்றும் மானிட வளத்தினை விருத்தி செய்வதற்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்குவதற்காக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் அரச சார்பற்ற பல்கலைக்கழங்களுக்காக பிரவேசிப்பதற்கு வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வியிற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்காக சமகாலப்படுத்தப்பட்ட பரிந்துரைக்கு அமைய புதிய பாடநெறியினைப் போன்று பீடங்கள் / கல்விப் பிரிவினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாணவர் நலன்புரியிற்காக தேவையான செலவினமும் மேற்கொள்ளப்படுகின்றது.

3.2 உயர் கல்வியிற்காக பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை.

2023 ஆண்டளவில் உள்ளக, வெளி மற்றும் பட்டப்பின் படிப்பு அபேட்சக மாணவ மாணவர்கள் உட்பட மொத்த அரச உயர் கல்வி முறைமையில் கற்கை செயற்பாடுகளில் ஈபடுவதற்காக பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 444,057 ஆகும். இவ் மொத்த மாணவர் எண்ணிக்கையில் " Z " பெறுமதியினனை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 143,203 ஆகும்.

திறந்த பலகலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை

30,324 ஆகும். இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு உரியதாக 1,016 உள்ளக மாணவர்கள் உள்ளனர். மொத்த அரச பல்கலைக்கழக முறைமையில் இருக்கும் வெளி மணாவர்களின் எண்ணிக்கை 189,774 அகும்.

பல்கலைக்கழக மானிய மானிய ஆணைக்குழுவின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை 5,321 அகும். 2023 ஆம் ஆண்டிற்காக தேசிய உயர் டிப்ளோமா தொடர்வதற்கு இலங்கை உயர் தொழல்நுட்ப கல்வி நிறுவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை 24,577 ஆகும். அத்துடன் உயர் கல்வி முறைமையில் பட்டப்பின் படிப்பு கற்கை செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 49,359 ஆக காணப்படுகின்றது. நிறுவன ரீதியில் மொத்த மாணவர் எண்ணிக்கை இணைப்பு B மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் உள்ளீட்டு சுருக்க அட்டவணை இலக்கம் 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.1 அட்டவணை 2023 ஆம் ஆண்டில் அரச உயர் கல்வி முறைமையில் கல்வி செயற்பாடுகளில் ஈபடும் மொத்த மாணவர் எண்ணிக்கை

மாணவர் குழு	ஆண்	பெண்	மொத்தம்
பல்கலைக்கழகம் மற்றும் இணை நிறுவனங்கள்	49,751	93,452	143,203
திறந்த பல்கலைக்கழகம்	8,822	21,502	30,324
பௌத்த மற்றும் பாலி ப.க. / பிக்கு பல்கலைக்கழகம்	1,016		1,016
வெளிவாரி பட்டத்திற்காக பதிவு செய்த மாணவர்கள்.	49,117	140,657	189,774
அடிப்படை பட்ட கற்கைக்காக	108,706	255,611	364,317
ப.க.மானி.ஆ. குழுவின் கீழ் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள்.	2,472	2,849	5,321
இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (SLIATE)	7,404	17,173	24,577
பௌத்த பல்ககலைக்கழகம் / பிக்கு பல்கலைக்கழகம்	158	325	483
சான்றிதழ் / டிப்ளோமா	10,034	20,347	30,381
பட்டப்பின் படிப்பு நிறுவகம்	23,071	26,288	49,359
மொத்தம்	118,740	275,958	444,057

மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகம், பல்கலைக்கழக மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்

பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவர் எண்ணிக்கையும் குறைந்த பட்ச தகமைகளை பூர்த்தி செய்த மாணவர் எண்ணிக்கையும் பல்கலைக்கழங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையும் 3.2 அட்டவணையில் குறிப்பிடப்படடுள்ளது.

3.3 உயர் கல்வியிற்கான மாணவர் பிரவேசம்

3.3.1 அரச பல்கலைக்களகங்களுக்காக மாணவர்களை சேர்த்துக் கொள்ளல்.

2023 க.பொ.த (உயர்தர) பரீட்சை பெறுபெறுகளுக்கு அமைய 2023/2024 கல்வி ஆண்டிற்காக சோத்துக்கொள்ள எதிர்பாக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 43,204 ஆகும். கடந்த 11 ஆண்டு காலத்திற்குள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை, குறைந்தபட்ச தகமைகளைப் பூர்த்தி செய்த மாணவர் எண்ணிக்கை, பல்கலைக்கழகங்களுக்கு தோந்தெடுக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 3.2 அட்டவணையில் குறிப்பிபடப்பட்டுள்ளது.

3.2 அட்டவணை பல்கலைக்கழகங்ளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளல்.

ஆண்டு	பரீட்சைக்கு தோற்றிய மாணவர் எண்ணிக்கை	குறைந்தபட்ச தகமைகளை பூர்த்திசெய்த மாணவர் எண்ணிக்கை	தேர்ந்தெடுக்கபபட்ட மாணவர் எண்ணிக்கை	தேர்நதெடுக்கப்பட்ட மணாவர் எண்ணிக்கை (2) இல் விகிதாசாரம்
	(1)	(2)	(3)	
2013	246,665	143,740	25,200	17.5
2014	247,376	149,572	25,643	17.1
2015	302,434	155,550	29,550	18.7
2016	263,184	160,517	30,662	19.1
2017	253,357	163,160	31,415	19.3
2018	267,202	167,992	31,902	19.0
2019	290,313	181,206	41,669	23.0
2020	301,771	194,297	43,927	22.6
2021	283,616	171,532	43,568	25.4
2022	274,304	166,967	44,005*	26.4
2023	269,613	173,444	43,204**	24.9

மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

* சமகாலப்படுத்தப்பட்ட ** உத்சே ஆட்சேர்ப்பு

2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்காக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர் எண்ணிக்கை

`

25,200 என்பதுடன் 2023 ஆம் ஆண்டில் 43,204 (உத்தேச ஆட்சேர்ப்பு) ஆகும். இதற்கு அமைய வருடாந்தம் கருத்திற் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆண்டு வரையான காலத்திற்குள் பல்கலைக்கழகத்தற்காக சோத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 18,004 இனால் விருத்தியடைந்துள்ளது.

இதே வேளை அநுராரதபுரத்தில் அமைந்துள்ள இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் 2022/2023 ஆம் ஆண்டில் 156 மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் இரண்டு பேர் வெளிநாடுகளைப் பிரதிநித்துவப்படுத்தினர்.

2023/2024 கற்கை ஆண்டிற்காக பதிவுகளில் 171 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஹோமாகமையில் அமைந்துள்ள பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் 2022/2023 ஆம் ஆண்டில் பதிவுகள் 168 காணப்படுவதுடன் அதில் வெளிநாட்டு மாணவர்கள் 15 பேர் பிரதிநித்துவப்படுத்துகின்றனர். இப் பல்கலைக்கழகத்தில் கற்கை செயற்பாடுகளுக்காக 2023/2024 ஆம் ஆண்டில் 141 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 24 பேர்கள் வெளிநாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இது தொடர்பான விபரங்கள் அட்டவணை 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3 அட்டவணை இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் பௌத்த பாலிப் பல்கலைக்கழகத்திற்கான கற்கை செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படும் பதிவுகள்.

நிறுவனங்கள்	2022/2023	2023/2024
பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்	168	141
இலங்கை பிக்கு பல்ககலைக்கழகம்	156	171
மொத்தம்	324	312

மூலம் : பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் இலங்கைக்கு பிக்கு பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழக பிரவேசத்திற்காக 5 பாடவிதானங்களின் கீழ் மற்றும் பொது பாடவிதானத்தின் கீழ் இம் முறையும் பதிவு செய்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் இவ் ஆட் சேர்ப்பு அட்டவணை 3.4 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது எவ்வாறாக இருப்பினும் முழுமையாக நோக்கும் போது ஆட்சேர்ப்பின் போது 2021/2022 ஆம் ஆண்டிற்கு இணைவாக 2022/2023 ஆம் ஆண்டில் 8.79% அதிகரிப்பு காணப்படுகின்றது. புள்ளிவிபர அடிப்படையில் உயிரியல் விஞ்ஞான துறையில் சுமார் 66 மணாவர்கள் அதிகரித்துள்ளதுடன், பௌதீக விஞ்ஞான துறையில் சுமார் 41 மாணவர்களின் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

3.4 அட்டவணை : பல்கலைக்கழக பிரவேசத்தின் முன்னேற்றங்கள்.

உயர்தர பாடவிதானங்கள்	**2021/2022**	**2022/2023**	அதிகரிப்பு
கலை	**12,825**	**13,055**	**1.76%**
உயிரியல் விஞ்ஞானம்	**10,038**	**10,104**	**0.65%**
பௌதீக விஞ்ஞானம்	**8,245**	**8,204**	**(0.50%)**
வர்த்தகம்	**7,899**	**8,001**	**1.27%**
தொழில்நுட்பம்	**3,844**	**3,886**	**1.08%**
பொது பாடங்கள்	**695**	**728**	**4.53%**
மொத்தம்	**43,546**	**43,978**	**8.79%**

3.3.2 இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திற்காக மாணவர்களை சேர்த்துக் கொள்ளல்

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திற்கு 2024 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் 31 ஆம் திகி வரை மாணவர்கள் 10,623 சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். பிரதேச மட்டத்தில் மிகுந்த விரிவான நிறுவனமாக செயற்படும் உயர் தொழில்நுட்ப நிறுவகம் கணக்கியல், விவசாயம், சிவில் மற்றும் இலத்திரணியல் பொறியியலாளர், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவ மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் போன்ற பல துறைகளுக்கு உரிய பாடநெறிகள் அமுல்படுத்தப்படுகின்றன. அத்துடன் எதிர்வரும் ஆண்டுக்குள் தொடர்ந்தும் படநெறியிற்காக மாணவர்களை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2024 ஆம் ஆண்டுக்குள் இலங்கை பூராகவும் விரிவடைந்து காணப்படும் அனைத்து உயர் தொழில்நுட்ப நிறுவகங்களுக்காக மாணவர்கள் விண்ணப்பிப்பதில் குறைவு காணப்படுகின்றது. பிரதேச ரீதியில் காணப்படும் உயர் தொழில்நுட்ப கிளைக்கு அமைய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் செயற்பாடுகள் இணைப்பு B1 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கற்கை செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களில் கணக்கியல் முழு நேரம் (மு.நே.) உயர் தொழல்நுட்ப தேசிய ஆங்கில டிப்ளோமா

(மு.நே.) தகவல் தொழில்நுட்பம் (மு.நேர.) ஆகிய பாடங்கள் பிரபல்யத்திற்கு உட்பட்டுள்ளது.

பாடநெறியிற்கு அமைய மாணவர்களை சோர்த்துக் கொள்ளல் இணைப்பு B2 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.4 அரச சார்பற்ற உயர் கல்வி முறைமை.

பட்டம் வழங்குவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்கள்.

1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கட்டளை மூலம் உயர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அமைச்சின் செயலாளருக்கு இப் பணியின் போது உரிய பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு அமைய உரிய பொறுப்பாளரினால் பட்டம் மற்றும் பட்டம் வழங்கும் நிறுவனத்தினை பரிந்துரை செய்யும் வகையில் தாபிக்கப்பட்ட "தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாடு தொடர்பான நிலையான குழு" எற்கனவே எட்டாவது ஆட்சேர்ப்பிற்கான செய்றபாடுகளை ஆரம்பித்துள்ளது. இதற்கு அமைய அரச சார்பற்ற 20 உயர் கல்வி நிறுவனங்களினால் யோசனைகள் கோரப்பட்டுள்ளன. 97 பட்டம் வழங்கும் வேலைத்திட்டங்களின் பதிவு செய்யும் செய்யும் வகையில் 10,335 பேர்களுக்காக 18 அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களினால் யோசனைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பட்டம் வழங்குவதற்காக தகமை கொண்ட நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் 2023 ஆம் ஆண்டிற்கு உரியதாக மாணவர்களை ஆட்சேர்ப்பது தொடர்பான தகவல்கள் இணைப்பு B3 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், க.பொ.த (உ/த) பரீட்சையில் பல்கலைக்கழக பிரவேசத்திற்காக தகமை கொண்ட அது வரை அரச பல்கலைக்கழகங்களுக்காக சேர்த்துக் கொள்வதற்கு தகமை பெறாத மாணவர்களுக்கு உயர் கல்வியிற்காக பிரவேசிக்கும் வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

3.5 அட்டவணை 2018-2024 ஆண்டிற்காக வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் அரச சாபற்ற உயர் கல்வி நிறுவனங்களுக்காக மாணவர்களை சேர்த்துக் கொள்ளல்.

ஆண்டு	அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை	பட்டப் பாடநெறி எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை
2019	10	50	2,330
2020	12	69	2,308
2021	15	95	4.157
2022	16	101	4,752
2023	17	93	3,766
2024	18	110	-----
மொத்தம்			16,019

மூலம் : அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு

3.5 இலங்கை மாணவர்களுக்காக வெளிநாட்டுப் புலமைப்பரிசில்.

வருடாந்தம் பல்வேறுபட்ட நாடுகளினால் வெளிவிவகார அமைச்சின் ஊடாக இலங்கை மாணவர்களுக்காக ஆரம்ப பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில் வழங்கும் செய்றபாடுகள் இவ் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் பிரதான பணியாகும்.

வெளிநாட்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக வருடாந்தம் பல நாடுகளினால் புலமைப்பரிசில் வழங்கப்படுவதுடன் அது தொடர்பான தகவல்களை மும்மொழிகளிலும் பிரபல பத்திரிகைகள் ஊடாக மற்றும் எமது இணையத்ததளம் (www.mohe.gov.lk) பகிரங்கப்படுத்தப்படுவதுடன் இவ் ஆண்டு தொடக்கம் ஒன்லைன் முறைகள் ஊடாக விண்ணப்பம் கோரும் செயற்பாடுகளை மேற்கொண்டு முறையாக மற்றும் நெகிழ்வுத் தன்மையுடனான செயற்பாடுகளின் கீழ் மாணவர்கள் தோந்தெடுக்கப்பட்டதுடன் விண்ணப்பதாரர்களுக்கு உரியதாக வழங்கப்படும் நாடுகள் அல்லது உரிய முகவர் நிறுவனத்தினால் இச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் மேலதிகமாக நேரடியாக விண்ணப்பம் கோர முடியுமான வெளிநாட்டு புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

`

2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரை இளமானி மற்றும் பட்டப்பின் படிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 3.6 மற்றும் 3.7 அட்டவணை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.6 அட்டவணை முதலாவது பட்ட புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் (2021 – 2023.07.31)

நாடுகள்	2021	2022	2023	2024
இந்தியா	32	37	44	11
சீனா	-	-	-	05
கியுபா	-	01	01	01
ஜப்பான்	-	01	02	ஜப்பான் தூதரக அலுவலகத்தின் ஊடாக உரிய தேர்ந்தெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
சுர்பியா	-	01	-	01.
ஹங்கேரி	-	-	08	08

மூலம் : கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு / உயர் கல்வி

3.7 அட்டவணை பட்டப்பின் படிப்பு புலரமைப்பரிசில் வாய்ப்புக்கள் (2021 – 2024.12.31)

நாடுகள்	2021	2022	2023	2024
இந்தியா	56	06	28	75
சீனா	13	07	30	24
ஜப்பான்	-	07	07	நேர்முகப்ப பரீட்சை நடாத்தி திறமைத் தொடருக்கு அமைய பட்டியல்படுத்தப்பட்ட மாணவர் ஆவணம் ஜப்பான் தூதரக அலவலகத்திற்கு எதிர்கால செயற்பாடுகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது.
ஐக்கிய இராச்சியம்	05	03	02	02
ஹன்கேரியா	-	-	12	12

மூலம் : கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு / உயர் கல்வி

3.6 வெளிநாட்டு மாணவர்களை பதிவு செய்தல்.

3.6.1 வெளிநாட்டு இளமானி பட்ட மாணவர் பதிவு

2023 ஆம் ஆண்டிற்காக 431 வெளிநாட்டு மாணவர்கள் முதலாவது பட்டத்தினை தொடர்வதற்காக அரச பல்கலைக்கழக்ங்களில் பதிவு செய்துள்ளனர். இவ் எண்ணிக்கை 2024.12.31 ஆம் திகதியன்று 356 ஆகும். 2014 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாட்டு இளமானி பட்ட மாணவர் பதிவு 3.1 படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.1 படம்: வெளிநாட்டு முதலாவது பட்ட மாணவர் பதிவு



மூலம்: பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்.

நாடுகளுக்கு அமைய வெளிநாடுகளில் முதலாவது பட்ட மாணவர்களைப் பதிவு செய்யும் செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டில் 31 நாடுகளில் இருந்து இளமானிப் பட்டத்தினை தொடர்வதற்காக மாணவர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். 2024 ஆம் ஆண்டில் இளமானிப் பட்டத்திற்காக கூடுதலான மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பது பூட்டான் தேசத்தில் இருந்தாகும். அவ் எண்ணிக்கை 115 ஆகும். இது மொத்த மாணவர் எண்ணிக்கையில் 32% சதவீதமாகும். இரண்டாவது கூடுதலான மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பது மியன்மாரில் ஆகும். நாடுகளுக்கு அமைய இளமானிப் பட்ட மாணவர் பதிவு இணைப்பு A மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆண்டில் பாடநெறியிற்கு அமைய வெளிநாட்டு இளமானிப் பட்ட மாணவர் பதிவு கூடுதலான மாணவர்களான 197 பேர் வைத்திய விஞ்ஞானம் தொடர்வதற்காக பதிவு செய்யதுள்ளனர். 2024.12.31 ஆம் திகதியன்று அப் பாடநெறியிற்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கை 229 ஆகும். வைத்திய விஞ்ஞானத்திற்காக மாணவர் பதிவு மொத்த மாணவர் பதிவு எண்ணிக்கையில் 64% விகிதாசாரம் ஆகும். இரண்டாவதாக கூடுதலான மாணவர் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்டு இருப்பது பௌத்த தத்துவ பாடத்தினை தொடர்வதற்காகும். அவ் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 118 மற்றும் 2024.12.31 ஆம் திகதியன்று 90 ஆகும். பாடநெறியிற்கு அமைய இளமானிப் பட்ட மாணவர் பதிவு இணைப்பு B4 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு அமைய இளமானி பட்ட மாணவர் பதிவு 15 பல்கலைக்கழங்களில் இளமானிப் பட்டத்திற்காக வெளிநாட்டு மாணவர் கற்கை செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் கூடுதலான மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பது களனிப் பல்கலைக்கழகத்தில் ஆகும். அது 2024.12.31 ஆம் திகதியன்று 86 அகும். இரண்டாவது கூடுதலான மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பது கொழும்பு பல்கலைக்கழகத்தில் என்பதுடன் என்பதுடன், அவ் எண்ணிக்கை 2024.12.31 ஆம் திகதியன்று 85 அகும். மூன்றாவது பேராதனை பல்கலைக்கழகத்தில் 68 மாணவர்கள், 2024.12.31 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளனர். பல்கலைக்கழங்களுக்கு அமைய முதலாவது பட்ட மாணவர் பதிவு இணைப்பு B5 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.6.2 வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மாணவர் பதிவு.

பட்டப்பின் படிப்பு தொடர்வதற்காக வெளிநாட்டு மாணவர்கள் 2023 ஆம் ஆண்டில் 794 பேர் மற்றும் 2024.12.31 ஆம் திகதியன்று 561 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பட்டப்பின் பட்டத்தினை தொடர்வதற்காக வெளிநாட்டு மாணவர்கள் பதிவு 3.2 படத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.2 படம் : **வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மாணவர் பதிவு**



மூலம்: பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்.

நாடுகளுக்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மாணவர் பதிவு 2023 ஆம் ஆண்டில் 32 நாடுகளில் இருந்து 794 மாணவர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன் 2024.12.31 ஆம் திகதியன்று 28 நாடுகளில் இருந்து வருகைதந்த மாணவர் எண்ணிக்கை 561 அகும். 2024 ஆம் ஆண்டில் கூடுதலான மாணவர்கள் வருகைதந்து இருப்பது சீனாவில் இருந்தாகும். நாடுகளுக்கு அமைய பட்டப்பின் படிப்பிற்காக வெளிநாட்டு மாணவர் பதிவு இணைப்பு A1 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடநெறியிற்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மாணவர் பதிவு 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பட்டப்பின் படிப்பினை தொடர்வதற்காக வருகைதந்த மொத்த மாணவர் எண்ணிக்கையான 794 பேர்களில் 433 வருகைதந்து இருப்பது பௌத்த கற்கை பாடத்தினை தொடர்வதற்காகும். அது மொத்த மாணவர் எண்ணிக்கையில் 55% ஆகும். 2024.12.31 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்டு இருப்பது மொத்த மாணவர்களான 561 பேர்களில் 262 பேர் வருகைதந்து இருப்பது பௌத்த கற்கை பாடத்தினை தொடர்வதற்காகும். அவ் எண்ணிக்கை மொத்த மாணவர் எண்ணிக்கையில் 47% அகும். பாடநெறியிற்கு அமைய பட்டப்பின் பட்டத்திற்காக வெளிநாட்டு மாணவர் பதிவு இணைப்பு B6 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு அமைய வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மாணவர் பதிவு 2023 ஆம் ஆண்டில் கூடுதலான வெளிநாட்டு மாணவர் எண்ணிக்கை கற்கை செயற்பாடுகளுக்காக பதிவு செய்யப்பட்டு இருப்பது பௌத்த மற்றும் பாலி பட்டப் பின் படிப்பு நிறுவகத்திற்கு என்பதுடன் அது மொத்த மாணவர் பதிவான 773 பேர்களில் 329 மாணவர்களாகும். அதாவது 43% சதவீதமாகும். ஆகும். 2024.12.31 ஆம் திகதியன்று கூடுதலான வெளிநாட்டு மாணவர் எண்ணிக்கை கற்கை செயற்பாடுகளுக்காக பதிவு செய்யப்பட்டு இருப்பது பௌத்த மற்றும் பாலி பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு என்பதுடன் அதன் மொத்த மாணவர்கள் 561 பேர்களில் 264 மாணவர்களாகும். அது மொத்த மாணவர் எண்ணிக்கையில் 47% ஆகும். பட்டப்பின் படிப்பிற்காக இரண்டாவதாக கூடுதலான மாணவர்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பது கொழும்பு பல்கலைக்கழகம் என்பதுடன் அது 2024.12.31 ஆம் திகதியன்று 113 ஆகும். பல்கலைக்கழங்களுக்கு அமைய பட்டப்பின் படிப்பிற்காக வெளிநாட்டு மாணவர் பதிவு இணைப்பு B7 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.7 மாணவர்களுக்கான நிதி அனுசரணை

உயர் கல்வி பிரவேசத்திற்காக கிடைத்த பொரளாதார சிரமங்கள் கொண்ட பல்கலைக்கழக மாணவர்களுக்காக தமது கற்கை செயற்பாடுகளை இலகுவில் மேற்கொள்வதற்கு முக்கியமாக 02 பிரதான முறைகளின் கீழ் நிதி அனுசரணைகள் வழங்கப்படுகின்றன,

- மஹபொல புலமைப்பரிசில் முறை.
- பல்கலைக்கழக புலமைப்பரிசில்.

3.7.1 மஹபொல புலமைப்பரிசில் முறை மற்றும் பல்கலைக்கழக புலமைப்பரிசில் உதவித் திட்டம்.

2024 ஆண்டில் மாணவர்கள் 92,550 பேருக்கு ரூபா 1,865.14 மில்லியன் மஹபொல, பல்கலைக்கழக புலமைப்பரிசில் உதவி மற்றும் ஏனைய பங்களிப்புக்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. இதன் போது உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் மாணவர்கள் 2,138 பேருக்காக மஹபொல யோசனைத் திட்டத்தின் கீழ் ரூபா 79.34 மில்லியன் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. 2023 மற்றும் 2024 டிசம்பர் 31 வரையான காலத்திற்குள் மஹபொல மற்றும் பல்கலைக்கழக புலமைப்பரிசில் உதவியின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி அனுசரணை 3.8 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.8 அட்டவணை மஹபொல புலமைப்பரிசில் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கபட்ட நிதி அனுசரணை

	2023		2024 ஜூலை 31 திகதி வரை	
	மாணவர் எண்ணிக்கை	மொத்த நிதி (ரூபா.மி.)	மாணவர் எண்ணிக்கை	மொத்த நிதி (ரூபா.மி)
ப.க.மா. ஆணைக்குழுவின் கீழ் உள்ள நிறுவனங்கள்	**95,345**	**2,016.3**	**87,490**	**1,774.8**
புலமைப்பரிசில் உதவி	63,026	1,012.0	62,400	1,141.0
மஹபொல *	*32,292*	*1,003.0*	*27,063*	*633.0*
ஏனையவை	*27*	*1.3*	*27*	*0.8*
பௌத்த மற்றும் பாலி ப.க.	**573**	**2.4**	**530**	**2.20**
புலமைப்பரிசில்	*480*	*1.90*	*465*	*1.90*
மஹபொல *	*93*	*0.50*	*65*	*0.30*
பிக்கு ப.க.	383	15.6	470	9.40
புலமைப்பரிசில்	*342*	*13.7*	*457*	*9.10*
மஹபொல	*39*	*2*	*13*	*0.30*
ஏனையவை	*2***	*0.01462*	-	-
இலங்கை உயர் தொழி. நிறுவகம்	3,636	62.50	2,060	78.74
மஹபொல *	*3,636*	*62.50*	*2,060*	78.74
மொத்ததம்	**99,937**	**2,096.86**	**92,550**	**1,865.14**

மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பௌத்த பல்கலைக்கழகம்.

*மஹபொல புலமைப்பரிசில் உதவியின் கீழ் மஹபொல பொறுப்பு நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதி உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அப் புலமைப்பரிசில்தார்களுக்காக திறைசேரி நிதியத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட பகுதி மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சொமிலாவதி பொலிகொடபிடிய

`

3.8 கல்விசார் அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல்.

3.8.1 புதிய பாடநெறியினை அறிமுகப்படுத்தல்.

பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்களினால் சமர்பிக்கப்பட்ட யோசனைகளுகளை கருத்திற் கொண்டு 2024 ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவினால் இளமானிப் பட்டப் பாடநெறிகள் 03 அங்கீகாக்கப்பட்டுள்ளதுடன், ஆண்டில் விஷேட பட்டப் பாடநெறிகள் 03 அறிகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்ாக 3.9 மற்றும் 3.10 அட்டவணை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.9 அட்டவணை 2024.12.31 ஆம் திகதி வரை அறிமுகப்படுத்தப்பட்ட விஷேட பட்டப் பாடநெறி

நிறுவகம்	புட்டப் பாடநெறி
கிழக்குப் பல்கலைக் கழகம் இலங்கை	Bachelor of Information and Communication Technology Honours in Software Development Techniques
	Bachelor of Information and Communication Technology Honours in Multimedia Design Techniques
களனிப் பல்கலைக் கழகம்	Bachelor of Science Honours Degree in Electronics

மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

3.10 அட்டவணை 2024.12.31 ஆம் திகதி வரை அறிமுகப்படுத்தப்பட்ட புதிய இளமானிப்ப பட்டப் பாடநெறி.

நிறுவகம்	பட்டப் பாடநெறி
கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை	Bachelor of Information and Communication Technology Honors
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்	Bachelor of Arts Honors in English Language Teaching
கம்பஹ விக்ரமாரச்சி உள்நாட்டு வைத்திய பல்கலைக்கழகம்	Bachelor of Science Honors in Service Management

மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

3.8.2 இலங்கையில் பட்டப்பின் படிப்பு கற்கை பாடநெறியினை முறைப்படுத்தல்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் விஷேட துறைகளில் உயரிய மனிதவலு மட்டத்திற்கான தீவிர ஊழியத் தேவையினை நிவர்த்தி செய்வதற்கு உதவக் கூடிய பட்டப்பின் படிப்பு கற்கைத் தேவைகளை விரிவுபடுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் 01 பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2024.12.31 ஆம் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பாடநெறி தொடர்பான விபரங்கள், வெளிவாரி பட்டப் பாடநெறி மற்றும் சமகாலப்படுத்தப்பட்ட பாடநெறியின் விபரங்கள் இணைப்பு B8 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.8.3 தாபிக்கப்பட்ட புதிய பீடங்கள் / கற்கைப் பிரிவுகள் மற்றும் அலகுகள்.

கற்கை வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகளை விரித்தி செய்யும் நோக்குடன் நிலையான குழுவின் பரிந்துரையுடன் ஆரம்பத் தேவைகளை கருத்திற் கொண்ட கீழ் குறிப்பிபடப்பட்ட புதிய கற்கைப் பிரிவு மற்றும் புதிய பீடங்களை தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. புதிய கற்கை பீடங்கள் இணைப்பு B9 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கற்கை பீடம் தாபிக்கப்பட்டுள்ளது.

3.9 உயர் கல்வித்துறையில் சர்வதேச கல்வி ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.

இலங்கையின் பல்கலைக்கழகங்களை உலகத் தரப்படுத்தலின் சுட்டிகளில் உயரிய மட்டத்திற்கு தரம் உயர்த்துவதற்காக உயர் கல்வி ஒத்துழைப்பிற்கான சர்வதேச உறவுகளை விருத்தி செய்தல் மற்றும் சர்வதேச ஆராய்ச்சியிற்கான பங்கேற்பினை நோக்காக் கொண்டு நாட்டின் அரச பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்யும் போது சட்ட அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

எனவே உயர் கல்வியிற்காக தகமை பெறும் கோட்பாடுகளை அறிமுகபப்டுத்தல் அரச கொள்கையைப் போன்று நீண்ட நீண்டகாலமாக அடையாளம் காணப்பட்டு இருந்த சமகாலத் தேவையாகும். அத்துடன் உயர் கல்வியின்

`

வலய ரீதியில் மற்றும் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் ஊழியர்களின் அசைவுகள் அதிகரித்தமை, தகவல் மற்றும் தொடர்புசாதன ஆதொழில்நுட்பத்தின் மற்றும் தொலைக் கற்கை முறைகளின் விருத்தி காரணமாக உயர்கல்வியிற்கான தகமை கோட்பாடு அறிமுகப்படுத்தப்படுவதனைப் போன்று வலய பரிந்துரை கோட்பாட்டினை அங்கீகரித்தல் மற்றும் உலகளாவிய சாசனங்களை அமுல்படுத்துவதற்காக (Ratify) தேவையான அடிப்படை செயற்பாடுகள் வகுக்கப்படுகின்றன.

இதற்கு அமைய,

- உயர் கல்வியிற்காக இலங்கை தகமை கோட்பாட்டினை அறிமுகபப்டுத்தல்.
- வலய பரிந்துரை கோட்பாட்டினை அங்கீகரித்தல்.
- உலகளாவிய சாசனங்களை அமுல்படுத்துவதற்கு (ratify) இணங்குவதற்காக கலந்துரையாடலிற்கு உட்பபட்டுள்ளது.
- புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்க / கல்வி ஒத்துழைப்பு உடண்படிக்கைகளை எட்டுதல்.

I . 2024 - 2026 காலத்திற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசிற்கு இடையிலான கல்விசார் ஒத்துழைப்பு உடன்படிக்கையினை செய்து கொள்ளல்.

II. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மற்றும் நேபால் அரசிற்கு இடையிலான உயர் கலவித்துறையின் ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கையினை செய்து கொள்ளல்.

III. இலங்கை பலக்லைக்கழக மற்றும் வெளிநாட்டு பல்ககைலக்கழகங்களுக்கு இடையிலான கல்வி ஒத்துழைப்பினை நோக்காக் கொண்ட புரிந்துணர்வு உடண்படிக்கை / உடண்படிக்கைகளை எட்டுதல்.

04

பட்டதாரி விளைவளவும் பட்டதாரிகளின் பண்புசார் தரமும்

4.1 அறிமுகம்

உயர் கல்வியின் அமைச்சினால் பட்டதாரிகளின் விளைவளவு மட்டத்தினை நூறு சதவீதம் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தரச் சான்றுப்படுத்தல் முறைமையினை பலப்படுத்துவதும், கல்விசார் பணியாளர் சபையின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதற்காக உயர் கல்வி வாய்ப்பினை வழங்கவதும், சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கருத்தரங்குகள் மற்றும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பட்டதாரிகளின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கு அமைய பிரதானமாக, 2023/2024 கால எல்லைக்காக பல்கலைக்கழக முறைமையில் இருந்து வெளியேரிய மொத்த இளமானி பட்டாதாரிகளின் எண்ணிக்கை 30,703 என்பதுடன் பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் 10,454 உம் மேற்கூறப்பட்ட காலத்திற்குள் அவர்களின் பட்டத்தினை பூர்த்தி செய்துள்ளனர். அதே போன்று, 2023 ஆம் ஆண்டில் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் **(SLIATE)** மூலம் 5,100 டிப்ளோமாதிரிகள் உருவாகியுள்ளனர்.

4.2 பட்டதாரிகள் விளைவளவு

4.2.1 முதல் பட்டதாரி விளைவளவு (First Degree)

2023/2024 கால எல்லைக்ககாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கீழ் காணப்படும் பல்கலைக் கழகங்களின் முழுமொத்த பட்டதாரிகளின் விளைவளவு 30,041 ஆகக் காணப்படுவதுடன், அதில் 20,429 உள்வாரிப் பட்டதாரிகளையும் 9,612 வெளிநிலைப் பட்டதாரிகளையும் கொண்டதாகும். அதேபோல், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக் கழகத்திலிருந்து 75 உள்வாரி பிக்கு மாணவர்களும் 311 வெளிவாரி பிக்கு மாணவர்களும், பிக்கு பல்கலைக் கழகத்திலிருந்து 97 உள்வாரி பிக்கு மாணவர்களும், 179 வெளிவாரி பிக்கு மாணவர்களும் தமது பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்துள்ளனர்.

இதற்கு அமைய, உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் மொத்த பட்டதாரி விளைவளவு 30,703 ஆகும். ஆண் பெண் பால் அடிப்படையிலான விபரங்கள் அட்டவணை 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 4.1 பட்டதாரிகளின் விளைவளவு (ஆண் பெண் பால் அடிப்படையில்)

	ஆண்	பெண்	மொத்தம்
உள்வாரி	7,378	13,223	20,601
வெளிவாரி	2,172	7,930	10,102
மொத்தம்	9,550	21,153	30,703

(மூலம் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம், பிக்கு பல்லைக்கழகம்)

முழுமொத்த பட்டதாரி விளைவளவில் பெரும்பாலானவர்கள் கலைப் பட்டதாரிகளாக விளங்குவதுடன், அவர்களின் எண்ணிக்கை 13,232 அதாவது 43% வீதம் ஆகும். அதேபோல், 7,286 பட்டதாரிகள் வர்த்தக மற்றும் முகாமைத்துவப் பிரிவுகளிலிருந்து பட்டத்தைப் பூர்த்திசெய்துள்ளதுடன் அது, மொத்த

விளைவளவில் 23% ஆகும். 3,045 பட்டதாரிகள் அதாவது 9.9% விஞ்ஞான பாட விதானம் என்பதுடன், 1,808 பேர் அதாவது 5.8% பொறியியல் பாடத்துறையிலிருந்தும் ஆகும். 1,314 பேர் அதாவது 4.2% கணினியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவிலிருந்தும் 1,260 பேர் மருத்துவத்துறையில் பட்டத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அது, முழுமொத்த விளைவளவில் அதாவது 4.1% ஆகும் என்பதுடன், 731 பட்டதாரிகள் அதாவது 2.3% தொழில்நுட்ப பாடத்துறையிலிருந்தும் ஆகும். 2023 ஆம் ஆண்டில் பல்மருத்துவ பாடத்துறைக் காக இறுதியாண்டு பரீட்சை நடைபெறவில்லை என்பதோடு, 2022 ஆம் ஆண்டுக்கு இணைவாக 2023 ஆம் ஆண்டில் பொறியியல் விஞ்ஞான பாடத்துறையில் பட்டதாரிகள் 205 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பாடத்துறைகளின் அடிப்படையில் முழுமொத்த பட்டதாரிகளின் விளைவளவு ***அட்டவணை 4.2*** இல் காட்டப்பட்டுள்ளது.

ஆட்டவணை 4.2 பாடவிதானத்திற்கு அமைய மொத்த பட்டதாரிகளின் விளைவளவு

பாடவிதானம்	2022	2023
கலை	11,140	13,232
முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம்	7,232	7,286
கல்வி	353	157
விஞ்ஞானம்	3,314	3,045
சட்டம்	379	309
மருத்துவம்	1,278	1,260
புல் மருத்துவம்	72	-
கால்நடை மருத்துவம்	64	80
விவசாயம்	1,209	687
பொறியியல் வி	1,603	1,808
கட்டட விஞ்ஞானம் மற்றும் அளவை ஆய்வு	334	348
கணனி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்	1,425	1,314
இணை சுகாதார விஞ்ஞானம்	801	369
சுதேச வைத்தியம்	291	77
தொழில்நுட்பம்	1,421	731
மொத்தம்	30,916	30,703

(மூலம் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, இலங்கை பௌத்த மற்றும் பாலப்பல்கலைக்கழகம், பிக்கு பல்கலைக்கழகம்)

4.2.2 பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளின் விளைவளவு

தற்போது ஈடுபட்டுவரும் தொழிலில் பதவி உயர்வை எதிர்பார்த்து, தொழிற்சந்தையில் கடும் போட்டிநிலையொன்றுக்கு முகங்கொடுப்பது, அறிவை முன்னேற்றிக்கொள்வதற்கான ஆர்வம் போன்ற பல்வேறு காரணங்களினால் மாணவர்கள் பட்டப்படிப்புக் கல்விகளை நோக்கி நகரும் உயர் போக்கொன்று காணப்படுகிறது

2023 ஆம் ஆண்டு இறுதியளவில் மொத்த பட்டப்பின்படிப்பு பட்ட விளைவளவு 6,261 ஆகும். இதில் 6,204 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள நிறுவனங்களிலிருந்து என்பதுடன், 04 பட்டப்பின்படிப்பு பட்டதாரிகள் பிக்கு பல்கலைக்கழகத்திலிருந்தும், 53 பேர் இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்திலிருந்தும் ஆகும். மொத்த பட்டப்பின்படிப்பு பட்டங்களின் விளைவளவைக் கருத்திற் கொள்ளும்போது அதில் 1,175 பட்டப்பின்படிப்பு டிப்ளோமாதாரிகளும் கலைமுதுமாணி / விஞ்ஞான முதுமாணி பட்டதாரிகள் 4,425 உம் உள்ளடங்கும். அதேபோல் மருத்துவ பட்டப்பின்படிப்பு பட்டதாரிகளும் கலாநிதிப் பட்டதாரிகள் 661 உம் மொத்த பட்டப் பின்படிப்பு பட்டதாரிகளின் விளைவளவில் உள்ளடங்கும். பட்டப்பின்படிப்பு பட்டதாரிகளின் விளைவளவினுள், பட்டப்பின்படிப்பு பட்டதாரிகள் அதிகளவானவர்கள் முகாமைத்துவ மற்றும் வணிக பாடத்துறையில் உருவாகியுள்ளனர். அது, எண்ணிக்கை ரீதியில் 1,741 அதாவது 28% சதவீதமாகும். கலைப் பாடத்துறை அடுத்த அதிகூடிய பட்டதாரிகளின் விளைவளவு உருவாக்கியுள்ளதுடன், அதன் எண்ணிக்கை 1,625 அதாவது 26% ஆகும். பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளின் விளைவளவின் பொழிப்பு ***அட்டவணை 4.3*** இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை – 4.3 பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் விளைவளவு

குற்கைத்துறை	பட்டப்பின் படிப்பு டிப்ளோமா	முது விஞ்ஞான மானி / முது தத்துவமானி	கலாநிதி/ மருத்துவ பட்டப் பின்படிப்பு	மொத்தம்
கலை	293	1,258	74	**1,625**
கல்வி	45	200	-	**245**
முகதாமைத்துவமும் வணிகமும்	148	1,571	22	**1,741**
சட்டம்	-	-	-	-
மருத்துவம்	292	128	498	**918**
புல் மருத்துவம்	-	2	-	**2**
விவசாயம்	12	190	10	**212**
போறியியல் விஞ்ஞானம்	175	262	11	**448**
கால நடை மருத்துவம்	-	6	2	**8**
கட்டக்கலை கணிமவியலும்	24	64	2	**90**
விஞ்ஞானம்	154	491	21	**666**
துகவல் தொழில்நுட்பம்	32	253	5	**290**
சுதேச வைத்தியம்	-	-	16	**16**
துணை மருத்துவ விஞ்ஞானம்	-	-	-	-
மொத்தம்	**1,175**	**4,425**	**661**	**6,261**

(மூலம் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்)

4.1 படம் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் பட்டப்பின் படிப்பு பட்டதாரி விளைவளவின் தளம்பலைக் காண்பிக்கின்றது.

படம் 4.1 பட்டப்பின் படிப்பு பட்டதாரி விளைவளவு



(மூலம் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், பிக்கு பல்கலைக்கழகம்)

4.2.3 இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் விளைவளவு

2023 ஆம் ஆண்டில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் விளைவளவு 5,100 ஆக இருந்ததுடன், அது 2022 ஆம் ஆண்டில் 6,582 ஆகக் காணப்பட்டது. பாடநெறிகள் வாரியாக 2023 ஆம் ஆண்டில் சித்தியடைந்தவர்கள் பற்றி விபரம் ***அட்டவணை 4.4*** இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.4 இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் விளைவளவு

பாடநெறி	2023
HNDA	1,510
HNDIT	696
HNDE (Civil)	225
HNDE (Mech.)	117
HNDE (Ele & Electronics)	177
HND(English)	1,129
HNDM	389
HNDT(Agri)	142
HNDBF	65
HNDFT	45
HNDQS	115
HNDBSE	16
HNDBA	109
HNDTHM	283
HNDCSPT	61
HNDPM	21
மொத்தம்	5,100

(மூலம்- இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்)

4.3 பட்டதாரிகளின் வேலை வாய்ப்புக்கள்

2023 ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு அமைய வேலைவாயப்புக்கள்

2012 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டு பல ஆண்டுகளாக பேணப்பட்டுவந்த பட்டதாரிகளின் தொழிலீடுபாட்டுநிலை பற்றிய அளவைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது பல்கலைக்கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஆம்

ஆண்டுக்காக பல பல்கலைக்கழகங்களினால் மேற்கொள்ளப்பட்ட அளவைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் முழுதும்அளாவிய பட்டதாரிகளின் தொழிலீடுபாட்டுநிலை 69.1% ஆகும். 2023 ஆம் ஆண்டில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலிருந்து 85.5% தொழிலீடுபாட்டுநிலையும் திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து 93.8% வீத தொழிலீடுபாட்டுநிலையும் வடமேல் பல்கலைக்கழகத்தில் தொழிலீடுபாட்டுநிலையும் 72.3% ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து 71.4% தொழிலீடுபாட்டுநிலையும் தென் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து 67.5% தொழிலீடுபாட்டுநிலையும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து 66.8% தொழிலீடுபாட்டுநிலையும் றுஹுனு, யாழ்ப்பாணம், கிழக்கு அகிய பல்பலைக்கழகங்களில் தொடராக 58.1%, 53.5%, 52.8%, தொழிலீடுபாட்டுநிலையும் காணப்பட்டதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

படம் 4.2 – பல்பலைக்கழகங்களுக்கு அமைய மொத்த பட்டதாரிகளின் வேலை வாய்ப்புக்கள்



(மூலம் - கொழும்பு பல்கலைக்கழகம், மெரட்டுவை பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், றுஹுனு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், தென் கிழக்கு பல்கலைக்கழகம், வடமேல் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம்)

பாடவிதானங்களின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கள் - 2023

அட்டவணை 4.5 – பாடவிதானங்களுக்கு அமைய மொத்த பட்டதரிகளின் வேலைவாய்ப்பு

பாடவிதானம்	விகிதாசாரம் (%)
கலை	32.6
முகாமைத்துவம்	76.9
வர்த்தக கற்கை	69.4
கல்வி	32.0
விஞ்ஞானம்	73.1
பிரயோக விஞ்ஞானம்	60.2
சட்டம்	52.0
மருத்துவம்	76.2
*பல் மருத்துவம்	-
கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானம்	42.9
***கால்நடை மருத்துவம்**	-
கால் நடை வள, கடற்றொழில் மற்றும் போசாக்கு	85.0
விவசாயம்	65.2
பெறியியல் விஞ்ஞானம்	80.6
கட்டக் கலை	78.0
கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம்	90.0
இணைசுகாதார விஞ்ஞானம்	34.2
சுதேச மருத்துவம்	37.5
தாதி	81.0
தகவல் தொழில்நுட்பம்	90.0
உயிரியல் முறைமை தொழில்நுட்பம்	42.0
தொழில்நுட்பம்	59.7
தொழில்நுட்ப கற்கை	85.1
கணிய அளவை	96.4
***விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானம்**	-
அலங்கார ஆக்கங்கள் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி	87.5
படைப்பாற்றல்	93.6
வர்த்தகவியல்	96.7
பொறியியல் தொழில்நுட்பம்	65.0
வசதிகள் முகாமைத்துவம்	91.1
தகவல் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவம்	82.2
போக்குவரத்து மற்றும் வழங்கள் முகாமைத்துவம்	86.4
நகர மற்றும் கிராமிய திட்டமிடல்	77.3
வெகுசன ஊடகம் மற்றும் அரங்கியல் (ஸ்ரீபாலி மண்டபம்)	35.5
புவிசரிதவியல் கட்டக் கலை	63.6
இஸ்லாமிய கற்கை மற்றும் அரேபிய	65.1
சராசரி	69.2

(மூலம் - கொழும்பு பல்கலைக்கழகம், மெரட்டுவை பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், றுஹுனு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், தென் கிழக்கு பல்கலைக்கழகம, வடமேல் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம்)

*** - அய்வின் தகவல்கள் அறிக்கைப்படுத்தப்படவில்லை.**

கொழும்பு பல்லைக்கழகத்தினை அடிப்படையாகக் கொண்டு வைத்திய பட்டதாரிகள் வேலை வாய்ப்பு 76.2% ஆகும். பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட மாணவர்களில் வேலை வாய்ப்பிற்கு அமைய கற்கை பாடவிதானத்தில் பட்டதாரிகள் குறைந்தபட்ச அளவான 32% பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ் எண்ணிக்கையினை கணிப்பீடு செய்வதற்கான அடிப்படையாக அமையும் பல்கலைக்கழகங்களாக அமைமவது கொழும்பு பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், றுஹுனு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், தென் கிழக்கு பல்கலைக்கழகம், வடமேல் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகங்கள் ஆகும்.

படம் 4.3 பாடத்துறைக்கு அமைய மொபாத்த பட்டதாரிகள் வேலைவாய்ப்பு



(மூலம் - கொழும:பு பல்கலைக்கழகம், மெரட்டுவைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், றுஹுனு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், தென் கிழக்கு பலக்லைக்கழகம், வடமேல் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம்)

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் பாடநெறியிற்கு அமைய டிப்ளோமாதாரர்களின் வேலைவாயப்பு.

புடம் 4.4- டிப்ளோமாதாரர்களின் வேலைவாய்ப்பு



(மூலம் - இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்)

2023 ஆம் ஆண்டில் உயர் தொழில்நுட்ப பொறியியல் டிப்ளோமாவில் (கட்டிட சேவைகள்) (HNDBSE) தொழிலீடுபாட்டுநிலை 85% ஆகும். உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (பொறிமுறை) (HNDE – MECHANICAL) மற்றும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (மின் மற்றும் இலத்திரனியல்) (HNDE-ELECTRICAL & ELECTRONIC) ஆகிய பாடநெறிகளில் தொழிலீடுபாட்டுநிலை 80% ஐத் தாண்டியுள்ளது. இப்பாடநெறிகளில் ஆகக்குறைந்த தொழிலீடுபாட்டுநிலையான 8% பெறுமானம் கொண்ட உயர் தேசிய வாடிக்கையாளர் விஞ்ஞான மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப டிப்ளோமா (HNDCSPT) பாடநெறி 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு

வரை நடைபெற்றதுடன், 2020 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்கை அடிப்படையிலான தீர்மாணத்திற்கு அமைய பாடநெறிகளுக்கு மாணவர்கள் உள்வாங்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் அனைத்துப் பாடநெறிகளின் தொழிலீடுபாட்டுநிலைக்கான சதவீதம் 61% ஆகும். .

4.4 உள்ளக தர சான்றுப்படுத்தல் முறைமையினை பலப்படுத்தல்.

4.4.1 தர பாதுகாப்பு கவுன்சிலின் (QAC) செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள்.

- பல்பலைக்கழகங்களின் உள்ளக தரப்படுத்தல் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக உதவியினை வழங்குதல்.
- உரிய செயற்பாடுகள் ஊடாக புதிய பாட இம் புள்ளி வெளியீட்டினை விருத்தி செய்தல் மற்றும் காணப்படும் பாட இம் புள்ளிகளை சமகாலப்படுத்தல்.
- தாபன மீளாய்வுகளை மேற்கொள்ளல். (IRs)
- முதல் பட்ட வேலைத்திட்டத்தின் மீளாய்வினை நடாத்துதல். (PRs)
- பட்டப்பின் படிப்பு வேலைத்திட்ட மீளாய்வினை நடாத்துதல்.
- வெளிவாரி பட்ட வேலைத்திட்டத்தின் மீளாய்வினை நடாத்துதல்..
- தொலைக் கற்கை வேலைத்திட்டத்தின் மீளாய்வினை நடாத்துதல்.
- இலங்கைக்கு தகமை வழிகாட்டல் ஆலோசனை (SLQF 2015) இற்கமைய தகமைகளை நிர்ணயிப்பதற்காக பலக்லைக்கழகங்களுக்கு உதவிகளை வழங்குதல் மற்றும் 2023 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தெற்காசிய தகமை பரிந்துரைக் கோட்பாடு (SQRF) மற்றும் அதற்கு அமைவான தகமையினை தீர்மாணிக்கும் தொடர்ச்சியான முயற்சிகளுக்காக பங்களிப்புக்களை வழங்குதல்.
- புதிய பீடங்கள், தாபன, மணடபம், கற்கைப் பிரிவு, மற்றும் பட்டத்தினை நிலைப்படுத்தும் புதிய யோசனை மதிப்பீடுகள்.
- பட்டத்திற்காக கூட்டு (Blanket) அங்கீகாரத்திற்காக சமர்பிக்ப்பட்ட விண்ணப்படிவங்களை மதிப்பீட்டுக் உட்படுத்தல்.
- சர்வதேச உயர் கல்வி தரப் பாதுகாப்பு முகவர் நிறுவனத்துடன் ஒத்துழைப்பினை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் முன்னெடுத்தல்.
- தரப் பாதுகாப்பு (QA) தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- தரப் பாதுகாப்பு கவுன்சிலின் இணையத்தள பராமரிப்பு செயற்பாடுகள்..
- தேசிய, துறைசார் மற்றும் சர்வதேச ஒப்பீடுகளின் போது தரப் பாதுகாப்பு கவுன்சில் மற்றும் அதன் செயற்பாட்டு வேலைத்திட்டத்தினை பிரநிதித்துவப்படுத்தல்.
- உயர் கல்வி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தகமைகளின் தொடர்புபட்ட மற்றும் செல்லுபடியாகுவது தொடர்பான தேசிய மற்றும் வெளிநாட்டு மட்டத்தில் வினவப்படும் விடயங்களுக்கு பதில் வழங்குதல் (வெ.ப..ஆ. கீழ் உட்படாத)
- கல்வி அமைச்சின் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் தராதர அங்கீகார மற்றும் தர உறுப்பாடுகள் தொடர்பான நிலையான குழுவிற்கு தரப் பாதுகாப்பு கவுன்சிலின் பணிப்பாளரினால் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.
- தர பாதுகாப்பு கவுன்சிலின் பணிப்பாளர் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தராதர மற்றும் தர உறுதிப்பாடுகள் தொடர்பான நிலையான குழவின் அங்கத்தவராகும்.
- தரப் பாதுகாப்பு கசுவுன்சிலின் பணிப்பாளரினால் ஏனைய அரச உயர் கல்வி நிறுவனத்தினால் கோரப்பட்டுள்ளவாறு தர உறுதிப்பாடு விடயங்கள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

4.4.2 பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் உள்ளக தர உறுதிப்பாட்டு முறைமையினை பலப்படுத்தல்.

- **தாபன மீளாய்வுகள் (IR)**

நிறுவன மீளாய்வுகள் இரண்டாம் சுற்றுக்காக திட்டமிடப்பட்ட நேரசூசியிற்கு அமைய 2021 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கழலக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழககத்தின் மீளாய்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது எவ்வாராக இருப்பினும் செயற்பாட்டின் தவிர்க்க முடியாத தாமதங்கள் மற்றும் தாபன மீளாய்வுகள் மறுசீரமைப்பு கையேடு அவசியப்படுவதனால் இவ் மீளாய்வு 2023 வரை ஒத்திவைக்கப்பட்டது. மூன்று மீளாய்வுகளையும் பூர்த்தி செய்து இறுதி அறிக்கை 2023 செப்டம்பர் இறுதியளவில் தரப் பாதுகாப்பு கவுன்சிலின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இது தரப்பாதுகாப்பிற்கான AHEAD செயற்பாட்டு இலக்கு 100% இனால் எட்டப்பட்டதாகும். மறுசீரமைப்பு தரப்பாதுகாப்பு கையேடு 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

- **வேலைத்திட்ட மீளாய்வு (PR)**

2020 வேலைத்திட்ட மீளாய்வுகளின் ஒரு பகுதியாக, விஞ்ஞான, பொறியியல், கட்டக் கலை மற்றும் நிலச்சரித வியல் விஞ்ஞான பீடங்களின் மீளாய்வுகள் 59 பூர்த்தி செய்யப்பட இருந்து. கொவிட் 19 தொற்று நோய் காரணமாக, 2020 மீளாய்வு, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் 2021 வரை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சமர்பிக்கப்பட்ட பாட மதிப்பீட்டு மீளாய்வு SERs உடன் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காரணமாக, மீளாய்வுகளின் உள்ளீடுகள் மாற்றப்பட்டதுடன், மீளாய்வுகளின் எண்ணிக்கை 74 வரை அதிகரிக்கப்பட்டது. மீளாய்வுகள் இரண்டு கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. கட்டம் 1 இற்காக 37 மற்றும் கட்டம் 2 இற்காக 37.

மேற்கூறப்பட்ட மீளாய்வுகளுக்கு மேலதிகமாக, வெளிவாரி பட்ட பாடநெறி மீளாய்வுகள் (EDP) 20 திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 17 பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கையேட்டில் மாற்றமடையும் வெளி வேலைத்திட்ட மீளாய்விற்கான கையேடு இவ் மீளாய்விற்காக பயன்படுத்தப்பட்டது. மேலும் பல்ககலைகழக முறைமையில் நிறைவேற்று மற்றும் கல்விசார பணியாளர் சபைகளின் வேலை நிறுத்தம் காரணமாக 2024 மே, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு இருந்து மீளாய்வுகள் ஒத்திவைக்கப்பட்டன.

இலங்கை தகமை கோட்பாடு (SLQF)

பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகமையினை வரைபாக்குவதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தரப்பாதுகாப்பு கவுன்சிலின் மூலம் இலங்கை தகமை கோட்பாட்டினை உறுதிப்படுத்தும் சபை தாபிக்கப்பட்டது. இப் பணியிற்காக AHEAD செயற்திட்டத்தின் மூலம் நிதி உதவிகள் வழங்கப்பட்டன. SLQF சான்றுப்படுத்தும் கையேட்டின் இறுதி வாசகம் தரப்பாதுகாப்பு கவன்சிலுக்கு 2023 டிசம்பர் மாதம் ஆரம்பப் பகுதியில் சமர்பிக்கப்பட்டதுடன் அது 2024 ஆம் ஆண்டில் வெளியிட்டு விநியோகிக்கப்பட்டது.

மேலும், இலங்கை தகமைக் கோட்பாடு 2015 ஆவணத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்க வேண்டியுள்ளது.

மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரப்பாதுகாப்பு கவுன்சிலைமீள் கட்டமைத்தல் மற்றும் கொள்ளவினை கட்டியெழுப்புவது தொடர்பான அறிக்கை 2022.03.24 ஆம் திகதி இடம்பெற்ற ஆணைக்குழுவின் 1075 ஆம் கூட்டத்தில் சமர்பிக்கப்பட்டது. இதற்கு அமைய தரப் பாதுகாப்பு கவுன்சிலின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை அமுல்படுத்துவதற்கான புதிய ஊழியர் எண்ணிக்கை ஒன்பது பதவிகள் அவசியமாகும். இது எவ்வாறாக இருப்பினும் ஊழியர் எண்ணிக்கை பதவிகளை உருவாக்குவது வரையறுக்கப்பட்டுள்ளமையினால் புதிய ஊழியர் பதவியினை ஏற்படுத்துவதற்கான கோரிக்கை அமுல்படுத்தப்படவில்லை. துரப் பாதுகாப்பு கவுன்சில் மீள்கட்டமைப்பு மற்றும் கொள்ளவினை கட்டியெழுப்புவதற்கான யோசனை மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்பித்து தேவையான புதிய ஊழியர் எண்ணிக்கை பதவியிற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு தரப் பாதுகாப்பு கவுன்சிலினால் ஏற்கனவே செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.4.3 பட்ட பாடநெறி, பட்டம் வழங்கும் தரத்தினைப் பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் 2023/2024 ஆண்டுகளில் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் புதிய விண்ணப்பப்படிவங்கள்.

4.6 அட்டவணை பட்டப்பாடநெறி எண்ணிக்கை (2024.12 31 ஆம் திகதியன்று)

	(அடிப்படை பட்டம்)	(பட்டப்பின் படிப்பு டிப்ளோமா)	(விஞ்ஞானமானி / கலைமானி)	(தத்துவமானி)	(தத்துவமானி)	முழு மொத்தம்
2023.09.30 வரை	189	15	22	12	12	250
2023.10.01 தொடக்கம் 2024.12.31 வரை	24	-	3	-	-	27
மொத்தம்	213	15	25	12	12	277

(மூலம் - கல்வி அமைச்சு – அரச சார்பற்ற உயர் கலவி- அரச சர்பற்ற உயர் கல்விப் பிரிவு)

2024.12.31 வரையான கால எல்லைக்காக 265 பட்டப்பாடநெறிகளுக்காக பட்டம் வழங்கும் தரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 2023.10.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 வரை 27 பாடநெறிகளுக்ககாக பட்டம் வழங்கும் தரம் வழங்கப்பட்டுள்ளது

பட்டம் வழங்கும் தரம் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் புதிய விண்ணப்பப்படிவங்கள்.

2024.12.31 ஆம் திகதியளவில் 28 நிறுவனங்களுக்கு பட்டம் வழங்கும் தரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

2023.09.30 ஆம் திகதியன்று 25 நிறுவனங்கள் காணப்பட்டதுடன் 2024.12.30 ஆம் திகதியளவில் அது 28 வரை அதிகரித்துள்ளது.

1. த கேட்வே கொலேஜ் (பிரைவட்) லிமிடட்.
2. த லைசியம் கம்பஸ் (பிரைவட்) லிமிடட்,

ஆகிய இறு நிறுசவனங்களுக்கு புதிய பட்டம் வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4.4.4 மடிக் கணனி பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியற்ற கடனை வழங்குதல்.

2016 வரவு செலவு யோசைனகளுக்கு அமைய, மடிக் கணனி கொள்வனவு செய்வதற்காக வட்டியற்ற கடன் வழங்கும் செயற்திட்டத்திற்கு உரியதாக கடமை செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

2023.01.01 தொடக்கம் 2024.12.31 வரை பெற்றுக் கொள்ளப்பட்ட கடனிற்காக வங்கியிற்கு செலுத்தப்பட்ட வட்டி நிதி, தொடர்பான விபரங்கள் இலக்கம் 4.7 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.7 அட்டவணை பெற்றுக் கொள்ளப்பட்ட கடனிற்காக வங்கியிற்கு செலுத்தப்பட்ட வட்டி நிதி.

மாதங்கள்	இலங்கை வங்கி (ரூபா.மி.)	மக்கள் வங்கி (ரூபா.மி.)
2023		
ஜனவரி	0.67	0.11
பெப்ரவரி	0.52	0.1
மார்ச்	0.52	0.09
ஏப்ரல்	0.42	0.05
மே	0.4	0.04
ஜூன்	0.37	0.04
ஜூலை	0.33	0.04
ஆகஸ்ட்	0.28	0.04
செப்டம்பர்	0.23	0.03
ஒக்டோபர்	0.2	0.03
நவம்பர்	0.17	0.03
டிசம்பர்	0.16	0.03
2023.01.01 தொடக்கம் 2023.12.31 திகதி வரை மொத்தம்	4.27	0.63
2024		
ஜனவரி	0.14	0.02
பெப்ரவரி	0.12	0.02
மார்ச்	0.12	0.02
ஏப்ரல்	0.11	0.02
மே	0.10	0.01
ஜூன்	0.09	0.01
ஜூலை	0.08	0.01
ஆகஸ்ட்	0.08	0.008
செப்டம்பர்	0.07	0.006
ஒக்டோபர்	0.07	0.005
நவம்பர்	0.07	0.005
டிசம்பர்	0.07	0.004
2023.01.01 தொடக்கம் 2023.12.31 திகதி வரை மொத்தம்	1.05	0.138

(மூலம் - கல்வி அமைச்சு – உயர் கல்வி – கதவல் தொழில்நுட்பப் பிரிவு)

4.5. செயலமர்வு மற்றும் கருத்தரங்கு

1. "அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவின் பண்புசார் தரம் மற்றும் நீடித்த நிலையான செயற்பாடுகளை மேம்படுத்தல்" தொடர்பான செயலமர்வு.

உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் எண்ணக்கருவிற்கு அமைய "அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவின் பண்புசார் தரம் மற்றும் நீடித்த நிலையான தரத்தினை மேம்படுத்தல்" தொடர்பான செயலமர்வு 2023 டிசம்பர் 29 ஆம் திகதி கொழும்பு 01 கலதாரி ஹோட்டலில் நடாத்தப்பட்டதுடன், இந் நிகழ்விற்கு நிதியம் வழங்கப்பட்டது AHEAD செயற்பாட்டின் மூலமாகும்.

மேலும், அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் (NSHEIs) பரிணாம வளர்ச்சி தொடர்பான உரையாடலிற்கான இச் செயறலமர்விற்காக முக்கியஸ்தர்கள், கல்வியலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், மற்றும் தரப்பினர்பன் அழைக்கப்பட்டனர். பிரிவின் பண்புசார் தரம், வினைத்திறன் மற்றும் நீடித்த நிலையான தரத்தினை விருத்திசெய்பவதற்காக மூலோபாயத்தினை அடையாளம் காண்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அரச சார்பற்ற உயர் கல்வியின் பண்புசார் தரம் மற்றும் நீடித்த நிலையான தரத்தினை தொடர்ச்சியாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கான உரையாடல் மற்றும் கருத்துக்களை போசித்தல், இப் பிரிவின் களனமான நிலமைகள் தொடர்பாக கலந்துரையாடுவது இதன் போது நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

2. Erasmus+ உயர் கல்வித்துறைக்கு உரியதான கொள்ளவினை விருத்தி செய்யும் வேலைத்திட்டம் (Erasmus+ CBHE Info Day Session – 2024)

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலகம் பூராகவும் மூன்றாம் நிலையில் உள்ள நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பினை பலப்படுத்துவதற்கு நீண்டகாலம் செயற்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும் ERASMAS+ என்ற கல்வி, பயிற்சி, இளைஞர் மற்றும் விளையாட்டுக்காக உதவிகளை வழங்குவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டமாகும். அவ் வேலைத்திட்டத்துடன் தொடர்புபடுவதனால் இலங்கை பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான இவ் வேலைத்திட்டத்தினை ஊக்குவிப்பதற்காக இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார் துறையினை அறிவுறுத்துவதற்காக 170 பேருக்கு மேற்பட்ட புத்திஜீவிகளின் பங்கேற்புடன் 2024.07.03 ஆம் திகதி இவ் வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது.

3. கல்வி அமைச்சின் உயர் கல்விப் பிரிவின் மற்றும் பல்கலைக்கழக முறைமையில் மானிட சாஸ்திர, சமூக விஞ்ஞானம், கலை மற்றும் அரங்கியல் கலை பீடங்களில் பீடாதிபதிகளின் பங்கேற்புடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அரங்கியல் கலை, மானிட சாஸ்திர, சமூக விஞ்ஞான (FAHSS) பாடவிதானத்தினை மறுசீரமைத்தல்.

இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) கல்வி அமைச்சின் உயர் கல்வித்துறையின் பங்கேற்புடன் அரங்கியல் கலை, மானிட சாஸ்திர மற்றும் சமூக விஞ்ஞான பாடநெறிகளை மறுசீரமைப்பது தொடர்பான செயலமர்வு இப் பீடங்களின் கற்கைப் பிரிவின் பெறுப்பாளர்களின் பங்கேற்புடன் 2023 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு டாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

இச் செயலமர்வு முக்கியமாக கீழ் குறிப்பிடப்பட்ட கூட்டிற்கு (Clusters) பகிர்தல், செயற்பாட்டு திட்டத்திற்கு அமைய மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் பிரதான மூன்று கூட்டுக்களின் கீழ் துணைக் குழுவினால் பின்னூட்டல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மானிட சாஸ்திர குழ
- சமூக விஞ்ஞான குழு
- அரங்கியல் கலை குழு

மேற்கூறப்பட்ட செயலமர்வில் கலந்துரையாடப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களுக்கு அமைய பட்டப் பாடநெறியிற்காக தகவல் தொழில்நுட்பம், சேவைக் காலப்பயிற்சி, விமர்சன ரீதியிலான சிந்தனை மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடத்துறைகளை உள்ளடக்கும் உரிமை பல்கலைக்கழகங்களுக்கு பெறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்டது.

4. 5 ஆவது சர்வதேச ஒம்பரங்கு 2023- உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS)

உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS) இனால் 2023 சமூக விஞ்ஞான மற்றும் மானிட சாஸ்திரம் தொடர்பான ஐந்தாவது சர்வதேச ஒம்பரங்கு (ISSSH) 2023 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி கெழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூயில் இடம்பெற்றது. இக்

கருத்தரங்கின் தொனிப்பொருளாக அமைந்தது "மறைந்த பேராசிரியர் சேனக டயஸ் பண்டாரநாயக்க அவர்களின் வளப் பங்களிப்புடன் மீண்டும் ஒரு முறை நடாத்தப்பட்டது. ஏம்ஸ்டர்டாம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூதனசாலையின் முன்னாள் சிரேஷ்ட பொறுப்பாளர் பேராசிரியர் லோடெவிக் ஜே. வெக்னார் 5 ஆவது (IRSSSH) 2023 இல் பிரதான பேச்சாளராக பங்கேற்றார்.

இதற்கு அமைய கீழ் உப தொனிப்பொருளின் கீழ் இம் மாநாட்டில் உரையாடல் நடாத்தப்பட்டது -

1. உருவ மற்றும் அருவ கலாச்சார மரபுரிமை: வேண்டப்படும் அடையாளத்தின் பின்னோக்கு.

2. சமயம் மற்றும் சமூகம் : விஞ்ஞானத்திற்கு அப்பால் சென்ற தத்துவம், போலியான மற்றும் யாதாத்தபூர்வமான..

3. சுதந்தரம், உரிமைகள் மற்றும் சிவில் பொறுப்புக்களுக்கு எதிரான சட்ட வாக்கம் மற்றும் சமூக நியாயம்.

4. நல்லிணக்கம், அரசியல் மற்றும் சமூகம்.

5. சூழல் மற்றும் சமூக விஞ்ஞானம் : சுகாதார வளம் கொண்ட ஜீவனோபாயத்தினை ஊடுகடத்தல்.

6. நிலையான அபிவிருத்தி மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியின் செய்பாடுகள்.

7.சுற்றுலாத்துறை: கைத்தொழில் மற்றும் கலை

8. கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகிளின் போது டிஜிடல் கருவிகளின் செயற்பாடுகள் : மொழி கற்பதற்கான ஆர்வக்குறைவு.

9. மெய்யுறுதி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்.

10. AI (செயற்கை நுண்ணறிவு) மற்றும் டிஜிடல் மீட்டளிப்பு.

5. 6 ஆவது சர்வதேச ஓம்பரங்கு (IRSSH) 2024- NCAS- முன்னேற்றங்கள்

NCAS இனால் வருடாந்த ஆராயச்சிக் கருத்தரங்கு : 6 ஆவது சர்வதேச ஆராய்ச்சி கருத்தரங்கு (IRSSH) 2024 ஒக்டோபர் 24 தொடக்கம் 25 வரை "தேசிய அபிவிருத்தியிற்கான மானிட சாஸ்திர மற்றும் சமூக விஞ்ஞான ஆராய்ச்சியினை முன்னேற்றுதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் நடாத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு என்பது,

1) நிலையான தேசிய அபிவிருத்தியிற்கு தொழில்நுட்ப புத்தாக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியிற்கு அமைய மாத்திரம் நம்பிக்கை வைக்க முடியாது என்பதனால் தேசிய மற்றும் சர்வதேச தொடர்பாடல்களை கௌரவித்து உலகளாவிய பரிமாணங்களை நிராகரிக்க முடியாத முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அங்கீகரித்தல்.

2) டிஜிடல் தொழில்நுட்பங்கள் மற்றும் முறைகளை ஆய்விற்கு உட்படுத்துவதனை கருத்திற் கொள்ளுதல் மானிட சாஸ்திர மற்றும் சமூக விஞ்ஞான ஆராய்ச்சியினைப் பயன்படுத்தி மீள் கட்டமைத்து விஷேடமாக பாரிய புள்ளிவிபர தளங்கள் மற்றும் கணனி மாதிரி ஆக்கங்கள் பாரிய ஆராய்ச்சிகளை துரிதமாக வெளிப்படுத்தி, மெய்நகர் ஆராய்ச்சிகள் மற்றும் புள்ளவிபர பகுப்பாய்வுகளுக்கு தாக்கங்கள் செலுத்தப்படுகின்றன. ஒருசில சந்தர்பங்களில் அவற்றின் உரிய விடயங்கள் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்துகின்றது. இவ்வாறான, பிரதான நோக்கங்களின் கீழ் ஆராய்ச்சி ஓம்பரங்கு கீழ் குறிப்பிபடப்பட்ட தொனிப் பொருளின் கீழ் தழுவப்பட்டது;

- சமூக பொருளாதார நெருக்கடிகளுக்கு அமைய தொழில்நுட்பத்தின் தாக்கங்கள்.
- கைத்தொழில் மயமாக்கள், உலகளாவிய வெப்பம் மற்றும் காலநிலை பேரழிவுகள்.
- தொழில்நுட்ப யுகத்தின் சனநாயகம் மற்றும் குடியுரிமை.
- அரசியல் பொருளாதார மற்றும் நிலையான மறிமாற்ற பிரவேசங்கள்.
- கல்வி சீர்திருத்தம் : டிஜிடல் யுகத்தின் மறுசீரமைப்புக்களுக்கு தயாராகுதல்.
- தாங்கிக் கொள்ளக்கூடிய இயலுமையினை மீள கட்டியெழுப்புதல் : சுனாமியிற்கு பின்னர் சமூகம், கலாச்சார மற்றும் மரபுரிமைகள் தொடர்பில் தொழில்நுட்ப தாக்கங்களை ஆய்விற்கு உட்படுத்தல். .
- தொழில்நுட்பம் ஊடாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட சமூக வலமைப்பு மற்றும் மானிட செயறபாடுகள்.
- டிஜிடல் மானிட சாஸ்திர மற்றும் அரங்கியல் உட்பட கட்புல கலையினை பயன்படுத்துவது தொடர்பான கணனி பிரவேசங்கள்.
- குறுக்கு கலாச்சார தொடர்புசாதனத்திற்காக இயந்திர கற்கை மற்றும் இயந்திர பறிமாற்றங்கள்.

- கைத்தொழில், சமூக, ஊழிய சந்தை மற்றும் மானிட நலனுக்கு அமைய தொழில்நுட்ப தாக்கங்கள்.
- தொட்டுனரக் கூடிய மற்றும் தெட்டுனற முடியாத கலாச்சார உரியமைகள் நிலைப்படுத்தும் போது தொழில்நுடபத்தின் செயற்பாடுகள்.
- புத்தாக்க அய்வுகள் : அங்கில மொழி கற்பித்தல் மற்றும் மொழியியல் தொடர்பான தொழில்நுட்பத்தினை ஒருங்கிணைத்தல்.

4.6 கல்விசார் பணியாளர் சபைக்காக உயர் கல்வி வாய்ப்புக்கள்.

பட்டதாரிகளின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வது தொடர்பில் விரிவுரையாளர்களின் பண்புசார் தரம் விருத்தியடைவதற்கு சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்ற ஆரம்ப தீர்மானங்களுக்கு அமைய செயற்பட்டு விரிவுரையாளர்களுக்காக பட்டப்பின் படிப்பு வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பட்டதாரிகளின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வதற்கு 2 பிரதான முறைகளின் கீழ் அனுசரணைகள் வழங்கப்படுகின்றன.

1. பொதுத் திறைசேரியில் இருந்து கிடைத்த அரச முதலீட்டின் கீழ்,

- உயர் கல்வியிற்கான தேசிய மத்தியநிலையம். (NCAS)
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

3. புரிந்துணர்வு உடண்படிக்கை மற்றும் உயர் கல்வி அமைச்சுடன் கைச்சாத்திடப்பட்ட இரு தரப்பு உடண்படிக்கையின் கீழ் வெளிநாடுகளில் இருந்து வழங்கப்பட்ட புலமைப்பரிசில் மூலம்,

அந்தந்த நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் 2023/2024 ஆம் ஆண்டுக்குள் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை அட்டவணை 4.8 மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.8 அட்டவணை 2023 ஆண்டுக்குள் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ள அளவு

நிறுவனங்கள்	கலாநிதி மற்றும் பட்டப்பின் படிப்பு
• உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS)	22
• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	6
• கல்வி அமைச்சு - உயர் கல்வி	184
மொத்தம்	212

(மூலம் - உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS), பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, கல்வி அமைச்சு – உயர் கல்வி)

4.6.1 உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS) மூலம் ஒதுக்கீடு வழங்குதல்.

உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையத்தின் பணியாக அமைவது மானிட வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான நவீன மற்றும் புத்தாக்க கருத்துக்களுடன் சமூகத்திற்கு பயன்களை வழங்குவது தொடர்பில் மானிட சாஸ்திர மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பாக உயர் கல்வியிற்கு உதவிகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி செய்வதாகும். இது உள்நாடு மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தின் மூலம், கொள்கை அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்வதற்கான அடிப்படைத் தேவைகள் மூலம் வாழ்விற்கு வசதியிற்காக தழுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அம் முழுமையான நோக்கின் மூலம், கலை, மானிட சாஸ்திர, சமூக விஞ்ஞானம், கல்வி, சட்டம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய பீடங்களுக்கு விஷேடமாக இணைப்பு செய்யப்பட்டுள்ள இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களின் புத்திஜீவிகளுக்கு முக்கியமாக பல்கலைக்கழகங்களுக்கு மற்றும் நாட்டிற்கு பயன்மிக்கதாக அவர்களின் ஆராய்ச்சி இயலுமைகளை விருத்தி செய்யும் வகையில் அவர்களின் கலாநிதிப் பட்ட கற்கை, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கலாநிதிப் பட்டத்திற்காக ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் தத்துவமானி பட்டத்தினை தொடர்வதற்காக உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையத்தினால் உதவிகள் வழங்கப்படுகின்றன. வருடாந்தம் அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் மூலம் மற்றும் அதற்கு அப்பால் நிதியம் ஒதுக்கப்படும் NCAS பகுதி நிதி யோசனைத் திட்டத்தின் கீழ் தகமை கொண்ட வழங்குனர்களை தேர்ந்தெடுப்பதற்காக தகமை கொண்ட அபேட்சகர்களில் இரண்டு

ஆண்டுகளுக்கு ஒருமுறை அரச பல்கலைக்கழகங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டுக்குள் 22 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், NCAS இனால் 2024 ஜூலை வரை 07 ஆவது தடவை புலமைப்பரிசில் வழங்கப்பட்டது முதலாவது சுற்றின் விண்ணப்பம் ஊடாக கிடைக்கப் பெற்ற விண்ணப்படிவங்களை சிறந்த முறையில் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் அரச பல்கலைக்கழகளில் புத்திஜீவிகளுக்காகும். 2 ஆவது சுற்றிற்காக விண்ணப்படிவங்கள் 2024 ஆகஸ்ட் 30 வரை கோரப்பட்டதுடன் (2024 ஜூலை நடுப்பகுதி வரை கல்விசாரா மற்றும் நிறைவேற்று பணியாளர் சபையின் தொழில்சார் செயற்பாடுகள் காரணமாக அது தாமதமடைந்தது) தற்போது மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட / ஒதுக்கப்பட்டுள்ள மொத்த வழங்கள் நிதி ரூபா 11.32 மில்லியன் என்பதுடன், அது நிதியம் மீள் சுழற்சி செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடிந்ததுடன் அது இவ் ஆண்டில் தகமை கொண்ட அபேட்சகர்களுக்கு செலவிடப்படும்.

மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வியினைத் தொடர்வதற்கு முன்னர் நிதி வழங்கப்பட்டு இருப்பது NCAS புத்திஜீவிகளின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் கல்வி செயற்பாடுகளுக்காக தற்போது காணப்படும் கலாநிதிப் பட்டத்தினை வழங்குதற்காக உதவும் வகையில் NCAS மூலம் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் ரூபா 28 மில்லின், ரூபா 486 மில்லியன், ரூபா 113.58 மில்லியன் செலவிடப்பட்டது. NCAS விபரக்கொத்தில் 02/2005 கட்டளைக்கு அமைய மானிட சாஸ்திர, சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம், சட்டம், கல்வி ஆகிய துறைகளின் புத்திஜீவிகளுக்காக வழங்கப்பட்டது. பட்டத்தினை பூர்த்தி செய்த வழங்குனர்கள் 392 பேருக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்பட்ட பயனாளிகள் 2023 ஆம் ஆண்டில் தமது கற்கை செயற்பாடுகளை பூர்த்தி செய்து, அவர்களின் உரிய பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களில் தமது கடமையினை மீள ஆரம்பித்துள்ளனர்.

பட்டத்தினை பூர்த்தி செய்யாத பயனாளிகளில் 2024.08.30 ஆம் திகதி தொடக்கம் ரூபா 1.55 மில்லியன் முழுமையாக அறவிடுவதற்கு NCAS இற்கு முடிந்ததுடன், உரிய பட்டதாரிகள் பதவியினை விட்டு சென்று / இராஜினாமா செய்துள்ளமையினால் மேலும் பல பல்கலைக்கழகங்களில் செலுத்தப்பட வேண்டிய நிலுவை நிதி காணப்படுகின்றது. சுருக்கமாக, 2024 ஆம் ஆண்டில் முதலாவது சுற்றில் விண்ணத்தின் கீழ் வழங்கப்பட்ட வழங்கள்கள் ஏழு (07) உடன் NCAS தற்போது பயனாளிகள் 475 பேருக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

4.5 படத்தின் மூலம் 2012 ஆண்டு தொடக்கம் ஒதுக்கீடுகள் கிடைத்த அளவு 4.6 கொண்ட செலவினத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

படம் 4.5 NCAS ஒதுக்கீட்டாளர்களின் எண்ணிக்கை



(மூலம் - உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS)

படம் 4.6 கொண்ட செலவினம்



(மூலம் - உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS)

அவுஸ்திரேலிய குவீன்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி (QUT) – உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம்

(NCAS) கலாநிதிப் பட்ட வேலைத்திட்டம்.

உயர் கல்வியிற்கான தேசிய மத்திய நிலையம் (NCAS) மற்றும் அவுஸ்திரேலியாவின் குவீனஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி QUT இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடண்படிக்கையின் கீழ் NCAS-QUT ஊடாக புத்திஜீவிகளுக்கு உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. குவின்ஸ்லன்ட யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி (QUT) மற்றும் NCAS இணைவாக விண்ணப்படிவங்களை மீளாய்விற்கு உட்படுத்தியதன் பின்னர் தகமை கொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்காக புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. அவ் உடண்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய, தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திஜீவிகள் குவீன்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி (QUT) இற்கு பெயரிடப்பட்ட காலாநிதி பட்ட பாடநெறியிற்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. குவின்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி இனால் விண்ணப்பதாரர்களின் வருடாந்த பாடநெறிக் கட்டணம் 03 ஆண்டுகளுக்காக அறவிடப்படுவதில்லை என்பதுடன் NCAS இனால் வருடத்திற்கு 18,610 அவுஸ்திரேலிய டொலர் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் வெளிநாட்டு சுகாதார தழுவலிற்காக 2,451 அவுஸ்திரேலிய டொலர் ஒரே தடவையில் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. இப் புரிந்துணவு உடண்படிக்கையின் கீழ் NCAS உயர்ந்தபட்சம் (06) புலமைப்பரிசிலிற்கான உரிய செயற்பாடுகளை மேற்கொண்டது. ஆரம்ப உடண்படிக்கை 2018 செப்டம்பர் மாதம் தொடக்கம் அழலுக்கு வரும் மேலும் ஐந்து (05) வருடங்களுக்காக நீண்டிக்கப்பட்டதுடன், 2023 செப்டம்பர் மாதளவில் பூர்த்தியடைந்தது.

புலமைப்பாரிசில் ஆரம்பம் தொடக்கம் ஒரு சுற்றிற்கு ஐந்து (05) புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டில் விண்ணப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித்திகதியளவில மொத்த விண்ணப்படிவங்கள் பதினென்று (11) கிடைக்கப் பெற்றது. இது எவ்வாறாக இருப்பினும், 2022.04.26 ஆம் திகதிய **03/2022** தேசிய வரவு செலவு சுற்றரிக்கைக்கு அமைய, அரச செலவினம் கடுமையாக மட்டுப்படுத்தி உள்நாட்டு நிதியத்தினைப் பயன்படுத்தி நடாத்தப்பட்ட வெளிநாட்டு வெளிநாட்டு கல்விசார் சுற்றுலாக்கள் மற்றும் பயிற்சி செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டதுடன், **QUT** இன் கீழ் தகமை கொண்ட வழங்குனர்களுக்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு நிதியடிப்படையில் வழங்குவது **NCAS** இனால் வரையறுக்கப்பட்டுள்ளது. விடயங்களைக் கருத்திற் கொண்டு, தகமை கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் **QUT** இல் கற்கை செயற்பாடுகள் மேறகொள்ளப்படும் கால எல்லைக்குள் முழுமையான புலமைப்பரிசில் கிடைக்கக் கூடியவர்களாக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினை நேரடியாக வழங்குவதற்காக அவர்களினால் நேர்முகப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மற்றும் மீளாய்வுகளை மேற்கொள்வதற்கான விண்ணப்படிவங்கள் பதினொன்று **QUT** இனால் கருத்திற் கொள்ளப்பட்டது. **QUT** முழுமையான புலமைப்பரிசில் - 2022 இற்காக கருத்திற் கொள்வதற்காக விண்ணப்பதாரர்கள் இரண்டு பேர் (02) தகமை பெற்றுள்ளதாக **NCAS** இற்கு அறிவிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய டொலர் (AUD) மற்றும் இலங்கை ரூபா (LKR) இடையிலான எதிர்பாராத செலாவணி விகிதாசாரத்தனைப் பொன்று பாரிய பொருளாதார வீழ்ச்சி காரணமாக உயர் கல்வயிற்கான தேசிய மத்திய நிலையம் அவர்களின் புலமைப்பரிசில் வேலைத்திட்டங்களில் மாற்றங்களை கோருவதற்கு தீர்மானக்கப்பட்டது. அவர்களுக்கு அவசியப்பட்டது முழுமையான ஆட்சேர்ப்பில் இருந்து “split-site” பட்ட வேலைத்திட்டம் வரை மாற்றுவதற்காகும். குவின்ஸ்லந்து தொழில்நுட்ப கல்லூரி (QUT) ஆராய்ச்சிகள் மூலம் உயர் பட்டம் (HDR) புலமைப்பரிசில் இற்காக அதன் வதிவிடக் கட்டணம் ஒரு வருடத்திற்கு அவுஸ்திரேலிய டொலர் 18,610 தொடக்கம் ஆவுஸ்திரேலிய டொலர் 32,192 வரை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் இக் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக் கோரிக்கை தொடர்பாக இறுதித் தீானம் மீளாய்வு மட்டத்தில் உள்ளது.

4.6.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒதுக்கீடுகளை வழங்குதல்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டப்பின் படிப்பு யோசனைத் திட்டத்தின் நோக்கமாக அமைவது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி இயலுமைகளை பலப்படுத்துவதன் மூலம் விரிவுரையாளர் சபையின் நிரந்தர உறுப்பினர்களுக்கு தமது தொழில் முன்னேற்றத்திற்காக தேவையான பட்டப்பின்

படிப்பு தகமையினை பெற்றுக் கொள்வதற்காக நிதியடிப்படையில் ஒத்துழைப்புக்களை வழங்குவதாகும்.

கொடை வழங்கப்படுவது உள்நாட்டு / வெளிநாட்டு கலாநிதி பட்டம் மற்றும் கலாநிதிப் பட்டம் வரையான தத்துவமானி பட்டம் மற்றும் அதற்கு சமமான கல்விசார் பாடநெறிகளுக்கு மாத்திரமாகும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பட்டப்பின் படிப்பு கொடை வழங்கள் யோசனைத்திட்டத்தின் மூலம் PhD/ கலாநிதி பட்ட கற்கைக்காக உயர்ந்தபட்சம் 03 வருடங்களுக்கான வழங்கள் மற்றும் MPhil/ கலைமானி படட்திற்காக உயர்ந்தபட்சம் 02 வருடங்கங்களுக்கான கொடை மாத்திரம் வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பட்டப்பின் டிப்பு வழங்கள் யோசனைத் திட்டத்தின் மொத்த வழங்கள் கால எல்லை, தாபன மற்றும் வாழ்க்ககைச் செலவு அகிய இரண்டும் உட்பட ஒரு விண்ணப்பதாரியிற்கு ஒரு வருடத்திற்கு ரூபா 2 மில்லியனாகும். வெளிநாடுகளில் பட்டப்பின்ப படிப்பு கற்கையினை மேற்கொள்ளும் விண்ணப்பதாரியிற்கு வாழ்க்கைச் செலவிற்காக கிடைக்கும் வழங்கள் உயர்ந்தபட்ச எல்லை வருடத்திற்கு ரூபா 1.5 மில்லியனாகும். வாழ்க்கைச் செலவினத்தின் கீழ், தனிப்பட்ட விண்ணப்பதாரியிற்கு உரியதான எல்லை கீழ் குறிப்பிடப்பட்டவாறு உயர்ந்தபட்ச எல்லைக்குள் நாட்டிற்கு அமைய மாற்றமடையும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பட்டப்பின் படிப்பு வழங்கள் யோசனைத் திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் ஆறு புலமைப்பரிசில்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டில் இரண்டு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தற்போது கொடை வழங்கப்படும் பயனாளிகளுக்காக அவர்களின் பட்டப்பின் படிப்பு கற்கை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ரூபா 5.5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு - இலங்கை கிரபிக் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலிய (GU) முழுமையான / கூட்டிணைந்த கலாநிதி கலாநிதி பட்ட புலமைப்பரிசில் வேலைத்திட்டம்.

அவுஸ்திரேலிய கிரபிக் பல்பலைக்கழப (GU) மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) புத்திஜீவிகள் செயற்பாடுகளுக்கு இடையிலான கலாச்சார பறிமாற்றல்ள், பங்கேற்பு ஆராய்ச்சி மற்றும் ஏனைய முறையில் கலைசார் ஒத்துழைப்புக்களில் பரஸ்பர பிரதிலாபத்தினை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

அவுஸ்திரேலிய கிரபிக் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் கிரபிக் பல்கலைக்கழகத்தினால் 03 வருட கால எல்லைக்காக முழுமையான வகுப்பு கட்டணம் தழுவப்படுவதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவுஸ்திரேலியாவிற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் விண்ணப்பதாரர்களுக்கு 03 வருடக கால எல்லைக்காக வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு மற்றும் வெளிநாட்டு மாணவர் சுகாதார தழுவல் (OSHC) வழங்கப்படுகின்றது. கிரபிக் அவுஸ்திரேலியாவினால் ஒரு வருடத்திற்கு சர்வதேச பட்டப்பின் படிபபு ஆராய்ச்சி புலமைப்பரிசில்கள் 12 வரை வழங்கப்படுகின்றது.

கூட்டிணைந்த கலாநிதி பட்ட மாதிரியின் கீழ் அனைத்து தரப்பினர்களின் இறுதி அங்கீகாரத்திற்கு உட்பட்டு கொழும்பு பல்லைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் உட்பட மற்றும் ஏனைய இலங்கை பல்கலைக்ககங்களினால் எந்தவொரு பிரிவினாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உதவி வழங்கப்படும் விண்ணப்பதாரர்களுக்காக ஒருங்கிணைந்த கலாநிதிப் பட்ட வேலைத்திட்ட மேற்பார்வை ஒழுங்குகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சபையின் - அவுஸ்திரேலிய கிரபிக் பல்கலைக்கழகத்தின் (GU) முழுமையான / கூட்டிணைந்த காலாநிதிப் பட்ட புலமைப்பரிசில் வேலைத்திட்டம் - 2023 ஆம் ஆண்டிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தற்போது காணப்படும் நிலமைக்கு அமைய மறுசீரமைப்பு ஒழுங்குகளுடன் புரிந்துணர்வு உடண்படிக்கையினை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்டநசல் யுனிவர்சிடி ஒப் ஜபான் (IUJ) மற்றும் பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலைமானி மற்றும் கலாநிதி பட்ட வேலைத்திட்டத்திற்காக புலமைப்பரிசில் வேலைத்திட்டம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால். இன்டநசனல் யுனிவர்சிடி ஒப் ஜப்பான் (IUJ) உடண்படிக்கையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்களில் கற்கை மற்றும் நிருவாக பணியாளர் பணியாளர் சபைக்கு இன்டநசனல் யுனிவேர்சிடி ஒப் ஜப்பான் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியினைத் தொடர்வதற்காக நிதி உதவி வழங்குவதற்கு இனை அனுசரணையுடன் புலமைப்பரிசில் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இன்டநசனல் யுனிவேர்சிடி ஒப் ஜப்பான் (IUJ) இடையில் ஏற்பபடுத்திக் கொள்ளப்பட்ட இணக்க கடிதத்திற்கு அமைய, இன்டநசனல் யுனிவர்சிடி ஒப் ஜப்பான் (IUJ) வகுப்புக் கட்டணத்தில் (Tuition fee) 50% நிதி வழங்கப்படுவதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வகுப்புக் கட்டணத்தில் எஞ்சிய 50% (இன்டநசனல் யுனிவர்சிடி ஒப் ஜப்பான் (IUJ) இனால் அறிவிக்கப்பட்டவாறு) மற்றும் ஜப்பான் யென் 90,000 மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவிற்காக நிதியம் வழங்கப்படுகின்றது. கற்கை விடுமுறைக்கமைய வெளிநாடு செல்லும் கல்விசார் பணியாளர் சபைக்கு விமானப் போக்குவரத்திற்காக செலுத்தப்படும் ஒதுக்கீடு உரித்தாகுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய குவீன்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி (QUT) கூட்டிணைந்த / கலாநிதிப்பட்ட வேலைத்திட்டங்கள்.

அவுஸ்திரேலிய குவீன்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்நொலஜியினால் கலாநிதிப் பட்ட அபேட்சகர்கள் (மூன்று ஆண்டுகள் வரை) இற்காக பூரண உதவிக் கட்டண அனுரணையின் (அண்மித்தளவு அவுஸ்திரேலிய டொலர் 100,000 பெறுமதிகள்) வழங்கப்படுகின்றது.

ஒரு வருடத்திற்காக குவீன்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் வேளையில் செலிவினத்தினை தீர்ப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் குவின்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி பல்கலைக்கழகத்தின் தகமைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் இலங்கை புத்திஜீவிகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல் ஆலோசனைக்கு அமைய தேவையானவாறு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, வெளிநாட்டு மாணவர் சுகாதரா தழுவல் (OSHC) மற்றும் அது சார்ந்த தொடர்புட்ட செலவினங்கள் இவ் உதவியில் உள்ளடங்குகின்றது. உயர்ந்தபட்ச கொடுப்னவு எல்லையான 03 வருடங்களுக்காக மாணவர் ஒருவருக்கு ரூபா 3.5 மில்லியனாகும்.

இலங்கை பல்கலைக்கழங்களில் பல்வேறுபட்ட பாடங்களுக்காக விண்ணப்பதாரிகள் 10 – 12 குவின்ஸ்லனட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி (QUT) பல்கலைக்கழகத்தின் பீடங்களில் குறைந்தபட்சம் 12 மாதங்கள் கலாநிதிப் பட்ட கற்கை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் குவின்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி (QUT) மூலம் கலாநிதிப் பட்ட மேற்பார்வை கூட்டு மாதிரியிற்கு (cohort model) உதவிகள் வழங்கப்படுகின்றன.

i. ஒருங்கிணைந்த காலாநிதிப் பட்ட மாதிரிகள். ீ

குவின்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் காலநிதிப் பட்ட வேலைத்திட்டங்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகம் (CMB), போராதனைப் பல்கலைக்கழகம் (PDN) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (SJP) உடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கலாநிதிப் பட்ட மாதிரி உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கலாநிதிப் பட்ட மாணவர்கள், குவின்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி விரிவுரையாளர் சபையின் இரு அங்கத்தவர்கள், கொழும்பு, பேராதனை அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுரா ஆகிய பல்கலைக்கழங்களில் கலாநிதி சபை அங்கத்தவர் ஒருவர் மற்றும் முடியுமாயின் உரிய விண்ணப்பதாரியின் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் சபை அங்கத்தவரினால் இணை – மேற்பார்வைகள் மேற்கொள்ளப்படும்.

ii. **பிரிந்த (Split)/ வெளிநிலை கலாநிதிப் பட்ட மாதிரி.**

பிரிந்த கலாநிதிப் பட்ட மாணவருக்கு. குவின்ஸ்லன்ட் யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி பல்கலைக்கழகத்தின் கற்கை மேற்பார்வை இருவர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்கு உரிய

எந்தவொரு பல்கலைக்கழகத்தனதும் உள்நாட்டுப் பணிப்பாளர் ஒருவரும் உள்ளார்.

2023 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் குவின்ஸ்லந்து யுனிவர்சிடி ஒப் டெக்னொலஜி பல்கலைக்கழகத்திற்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடண்படிக்கை மேலும் 5 வருட காலத்திற்காக புதுப்பிக்கப்பட்டது.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் அவுஸ்திரேலியாவின் ஈடின் கொவன் பல்கலைக்கழகத்தின் (ECU) புலமைப்பரிசில் யோசனைத் திட்டம்.

2023 ஆம் ஆண்டில் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அவுஸ்திரேலியாவின் ஈடின் கொவன் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடண்படிக்கை கைச்சாத்திடப்பட்டது ஒவ்வொருவருடனும் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்காகும்.

ஈடின் கொவன் பல்கலைக்கழகம் (EDU) என்பது அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள பொது பல்கலைக்கழகம் என்பதுடன் அது 100 நாடுகளின் சர்வதேச மாணவர்கள் உட்பட கல்வியலாளர்கள் மற்றும் 30,000 இற்கு மேற்பட்ட பட்ட அபேட்சகர்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்காக சிறந்த கற்றல் சூழல் காண்பிக்கப்படுகின்றது. ஈடின் கொவன் பல்கலைக்கழகத்தின் எட்டு கல்லூரிகள் மூலம் கலை மற்றும் மானிட சாஸ்திர, வர்த்தக மற்றும் சட்டம், கல்வி, பொறியியல் விஞ்ஞானம், வைத்திய மற்றும் சுகாதார விஞ்ஞானம், தாதி மற்றும் மருத்துவச்சி (ஆனைறகைநசல)இ விஞ்ஞான மற்றும் மேற்குலக அவுஸ்திரேலிய இசைக் கலை அகடமி ஊடாக பல்வேறுபட்ட்ட பரம்பலில் பாடநெறிகள் முன்வைக்கப்படுகின்றன.

ஈடின் கொவன் பல்கலைக்கழகத்தின் பாடநெறி கைத்தொழில் சார்ந்த அறிவு விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் கற்றல் பணியாளர் சபைக்கு விரிவான கைத்தொழில் அனுபவங்கள் மற்றும் வலயமைப்புக்கள் காணப்படுவதுடன் எனவே ஈடின் கொவன் பல்கலைகழகத்தின் மாணவர்களுக்கு அவர்களின் கற்கையின் ஒரு பகுதியாக பணிகளை கூட்டிணைக்கும் கற்கை வாய்ப்புக்கள், வெளிக்கள பணிகள், பிரயோக மற்றும் வலயமைப்பு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒத்துழைப்புக்களின் கீழ் உரியதான வெளிக்கள மற்றும் அமுல்படுத்துவதற்கான உத்தேச செயற்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் பல்லைக்கழகத்துடன் (கூட்டிணைந்த / ஒத்துழைப்பு)) கலாநிதி பட்டத்தினை வழங்குதல்.

- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட மற்றும் ஈடின் பல்கலைகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி வேலைத்திட்டத்தின் மூலம் ஈடின் கோவன் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டத்திற்காக தகமை கொண்ட அபேட்சகர்களை தேர்ந்தெடுத்தல்.

- உயர் தகமை கொண்ட இலங்கையின் மாணவர்களுக்காக குறைந்தபட்சம் ஒரு முழுமையான நிதியத்துடன் ஈடின் கொவன் பல்கலைக்கழகத்தின் கலாநிதி பட்ட புலமைப்பரிசிலை தாபிப்பதற்கு காணப்படும் வாய்ப்புக்களை அடையாளம் கானுதல்.

- வெளி வழங்கள்கள் வழங்கப்படும் நிறுவனத்தினால் நிதியாக்கத்திற்கு உட்பட்டு கல்விசார் பணியாளர் சபையினை பறிமாற்றிக் கொள்ளல், கூட்டிணைந்த ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் வெளியீடுகள், கருத்தரங்கு மற்றும் கற்கை கூட்டங்களில் பங்கேற்பதற்காக காணப்படும் இயலுமைகளை அடையாளம் கானுதல்.

- அவ்வவ் நிறுவனங்களின் ஆரம்ப அங்கீகாரத்துடன் விஷேடமாக குறுகிய கால கற்கை வேலைத்திட்டங்கள் / நிருவாக மற்றும் முகாமைத்துவ வேலைத்திட்டங்களுக்காக காணப்படும் இயலுமைகளை அடையாளம் கானுதல்.

- அந்தந்த நிறுவனங்களின் ஆரம்ப அங்கீகாரத்துடன் காலாநிதிப் பட்ட மாணவர்களுக்காக நிதியுடன் குறுகிய கால மற்றும் இடைக்கால ஆராய்ச்சி சுற்றுலா மற்றும் பணியாளர் சபைக்காக பட்டப்பின் படிப்பு காலநிதி பட்ட புலமைப்பரிசிலிற்காக காணப்படும் இயலுமைகளை அடையாளம் கானுதல்.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் மற்றும் அவுஸ்திரேலியாவின் ரோயல் மெல்பர்ன் இன்ஸ்டிரியூட் ஒப் டெக்னெலஜி (RMIT University) இடையிலான ஆராய்ச்சிப்

பயிற்சி ஒத்துழைப்பு (ஒருங்கிணைந்த கலாநிதி பட்ட வேலைத்திட்டம்) – 2023

தரப்படுத்தல்களிற்கு அமைய உலகில் 140 ஆவது இடத்திற்குரிய (QS உலகத் தரப்படுத்தல் 2023) அவுஸ்திரேலிய உயர் கல்வி நிறுவனமான ரோயல் மெல்பர்ன் இன்ஸ்டிரியூட் ஒப் டென்நொலஜி (RMIT University) இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து இலங்கையின் பல்கலைக்கழகங்களில் கனிஷ்ட விரிவிரையாளர் சபை அங்கத்தவர்கள் ஒருங்கிணைந்த கலாநிதிப் பட்ட வேலைத்திட்டம் ஊடாக பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரோயல் மெல்பர்ன் இன்டிரியூட் ஒப் டெக்னொலஜி (RMIT University) 2018 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது கற்கை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் 32 மற்றும் பட்டத்தினை பூர்த்தி செய்யும் செயற்பாடுகள் 4 உடன் மிகுந்த வெற்றிகரமான கூட்டிணைந்த கலாநிதி பட்ட வேலைத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் நான்கு கற்கை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த விரிவுரையாளர் பட்ட வேலைத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

- போரதனை பல்கலைக்கழகம் (PDN)
- மொரட்டுவை பல்கலைக்கழகம் (MRT)
- றுஹுனு பல்கலைக்கழகம் (RUH)
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (SJP)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, கலாநிதிப் பட்டத் தகமையுடன் விரிவுரையாளர் சபையின் அங்கத்தவர் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக காலாநிதி பட்ட புலமைப்பரிசில் வழங்குவதன் மூலம் கல்வியலாளர்களின் ஆராய்ச்சிக் கொள்ளவினை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பரஸ்பர ரீதியில் பயன்மிக்க பங்குடமை மூலம் ரோயல் மெல்பர்ன் இன்டிரியூட் ஒப் டெக்னொலஜி நிறுவனத்தின் உலகளாவிய பரவலாக்கள் விருத்தி செய்யப்படுவதுடன் இலங்கையின் நிறுவனங்களின் ஆராய்ச்சி கலாச்சாரம் விருத்தி செய்யப்படும். இதற்கு அமைய அவுஸ்திரேலியாவின் ரோயல் மெல்பர்ன் இன்டிரியூட் ஒப் டெக்னொலஜி நிறுவனத்துடன் மற்றும் இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2023 பெப்ரவரி 16 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

4.9 அட்டவணை – அவுஸ்திரேலியாவில் ரோயல் மெல்பர்ன் இன்ஸ்டிரியூட் டெக்னொலஜி நிறுவனத்தினால் வழங்குவதற்கு உள்ள புலமைப்பரிசில் மற்றும் இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்.

அவுஸ்திரேலியாவின் ரோயல் மெல்பர்ன் இன்ஸ்ரியூட் ஒப் டெக்னொலஜி நிறுவனத்தினால் வழங்குதற்கு உள்ள புலமைப்பரிசில்.	இலங்கையின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்.
• RMIT கலாநிதி பட்ட புலமைப்பரிசில் 10 வரை வழங்குதல். • உயர்ந்தபட்ச 3.5 வருடங்கள் வரை RMIT வகுப்புக் கட்டண புலைப்பரிசில் - அண்மித் பெறுமதி AU $ 80,000 • மெல்பர்னில் உள்ள 12 மாதங்கள் வரையான RMIT கொடுப்பனவு அண்மித்த பெறுமதி AU $ 35,000	புரிந்துணர்வு உடண்படிக்கைக்கு அமைய, • அவுஸ்திரேலியாவிற்கான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விண்ணப்பதாரர்களுக்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் பயனாகளுக்கு மெல்பர்னில் உள்ள RMIT இனால் கொடுப்பனவு புலமைப்பரிசில் வழங்கப்படாத பட்சத்தில் அவர்கள் அவுஸ்திரேலியாவின் RMIT இல் கற்கை செயற்பாடுகளை மேற்கொள்ளும் கால எல்லைக்குள் உயர்ந்தபட்சம் ஒருவருட (01) காலம் வரை வெளிநாட்டு மாணவர்கள் சுகாதார தழுவலுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. **குறிப்பு :** இது எவ்வாறான இருப்பினும், RMIT இனால் மெல்பர்னில் உள்ள 12 மாதங்கள வரை வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கப்படுவதனால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு நிதிக் கடப்பாடுகள் இல்லை. .

(மூலம் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

4.6.3 உயர் கல்வி அமைச்சினால் ஒதுக்கீடுகளை வழங்குதல்.

வெளிநாடுகளில் உயர்கல்விக்கான வாய்ப்புகளை வழங்கி வருடாந்தம் நேரடி மற்றும் மறைமுக வெளிநாட்டு இளமாணிப்பட்ட மற்றும் பட்டப் பின்படிப்பு புலமைப்பரிசில்கள் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படுகிறது. அதன்மூலம்,

- வெளிநாட்டு உயர்கல்விக்கான நுழைவு வாய்ப்புகளை அதிகரித்தல்
- உலகளாவிய தொடர்புகளையும் கல்விசார் பரிவர்த்தனை வாய்ப்புகளையும் முன்னேற்றுதல்.
- கல்வி சுற்றுலா மூலம் தேசிய பொருளாதாரததிற்கு பங்களிப்பு செய்வது நோக்கமாகும். 2023 ஆம் ஆண்டுக்குள் உயர் கல்வி அமைச்சின் கீழ் பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில்கள் 79 வழங்கப்பட்டுள்ளதுடன், 2024 ஆண்டுக்குள் இந்தியாவிற்காக 67 பேர்களும், சீனாவிற்காக 24 பேர்களும், ஹங்கோயாவிற்காக 12 பேரும், ஐக்கிய இராச்சியத்திற்காக 02 பேர்களும் பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசிலைப் பெற்றுள்ளனர்.

புரிந்துணர்வு உடண்படிக்கை மற்றும் உயர் கல்வி அமைச்சுடன் கைச்சாத்திடப்பட்ட இரு தரப்பு உடண்படிக்கையின் கீழ் வெளிநாடுகளில் இருந்து வழங்கப்பட்ட புலமைப்பரிசில்.

2024 - 2026 காலத்திற்காக இலங்கை சனநாயக சேசலிச குடியரசு மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசிற்கு இடையிலான கல்வி ஒத்துழைப்பு தொடர்பான உடண்படிக்கையினை எட்டுதல்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசினால் இடைக்கிடையே இரு நாடுகளுக்கு இடையிலான கல்வி ஒத்துழைப்பிற்கான உடண்படிக்கைகளை செய்து கொண்டதுடன் 2017 – 2020 வரை இறுதியாக கைச்சாத்திடப்பட்ட கல்வி ஒத்துழைப்பு தொடர்பான உடண்படிக்கை மறுசிமைப்புடன் மீண்டும் 2024 தொடக்கம் 2026 வரையான கால எல்லைக்காக கைச்சாத்திட எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கு அமைய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2024 ஜுன் 24 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உத்தேச புரிந்துணர்வு உடண்படிக்கையின் நேரடி பயன்களாக, அந்தந்த தரப்பினால் தமது தரப்பின் விஷேட திறமைகள் கொண்ட மாணவர்கள் வேறு தரப்பின் பல்கலைக்கழகங்களில் கல்வசார் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பறிமாற்றல்களை மேற்கொள்ளுவதுமட, இரு தரப்பினரினால் பரஸ்பரரீதயில் இணங்கிய துறைகளினல் இளமானிப் பட்டம் அல்லது பட்டப்பின் படிப்பு கற்கைக்காக 05 புலமைப்பரிசில்கள் (ஐந்து) வருடாந்தம் பறிமாறிக் கொள்வதும், இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை, இரு நாடுகளுக்கு இடையிலான அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் ஒத்துழைப்பினை விருத்தி செய்வதற்காக உயர்ந்தபட்சம் 7 நாள் கால எல்லைக்காக நான்கு பிரதிநிதிகள் அல்லது ஐந்து வரையான சிரேஷ்ட கல்விசார் பிரதிநிகள் குழுவினை பரிமாறிக் கொள்வதற்கும், இலங்கையின் உயர் கல்வியிற்கான விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, இலங்கை அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்படும் துறைகளில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வாய்ப்பினை வழங்குவதும், வியட்நாமில் கல்வி மற்றும் பயற்சி அமைச்சு, வியட்நாம் அரசாங்கத்தினால் யோசனை தெரிவிக்கப்படும் துறைகளில் கூட்டிணைந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வாய்ப்பினை வழங்குவதற்கும், இரு தரப்பினரால் பல்கலைக்கழக / ஆராய்ச்சி மத்திய நிலையங்கள் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு இடையில் மாணவர்கள் மற்றும் புத்திஜீவிகள் (விரிவுரையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள்) பாமாறிக் கொள்வதனை ஊக்குவிப்பதற்கு நடடிக்கை எடுக்கப்படுகின்றது.

அத்துடன், இவ் உடண்படிக்கை மூலம் உயர் கல்வித்துறையில அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்கள் தொடர்பில் தகவல்கள் மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளல், கூட்டிணைந்த ஆராய்ச்சிகளை நடாத்துதல், இரு தரப்பு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையே இரு தரப்பு ஒத்துழைப்பு வேலைத்திட்டங்களை ஊக்குவித்தல், இரு தர்ப்பினால் பரஸ்பர ரீதியில் இணங்கிய துறைகளில் இளமானிப் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைக்காக 05 புலமைப்பரிசில்கள் வருடாந்தம் பரிமாறிக் கொள்ளல், இரு நாடுகளுக்கும் இடையிலான பல்கலைக்கழகங்கள் / ஆராய்ச்சி மத்திய

நிலையம் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு இடையே மாணவர்கள் மற்றும் புத்திஜீவிகள் பறிமாறிக் கொள்ளல் ஊக்குவித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

I. இலங்கை சனநாயக சோலிச குடியரசு மற்றும் நேபால் அரசிற்கு இடையிலான உயர் கல்வித்துறையின் ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை செய்து கொள்ளல்.

நாட்டின் கல்வித்துறையில் பண்புசார் தரத்தினை மேம்படுத்தும் வகையில் உயர் கல்வி துறையில் ஒத்துழைப்புக்கள் அத்தியவசிய காரணியாகும். அப் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் நாட்டின் உயர் கல்வி துறையில் கல்விசார் பணியாளர் சபை, ஆராய்ச்சியாளர்களின் மற்றும் மாணவர்களின் அறிவு மற்றும் அனுபவங்களை விரிவுபடுத்துவதற்கும். சிறந்த வாய்ப்பு கிடைக்கின்றது. இதற்காக இலங்கையுடனான ஒத்துழைப்பினை எட்டும் நீண்டகால வரலாறு கொண்ட நேபால் அரசாங்கத்துடன் கலாச்சார, கல்வி மற்றும் விஞ்ஞானத்துறைக்கு உரியதான உடண்படிக்கைக்கு கைச்சாத்திடுவதற்காக எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்கு அமைய, கீழ் குறிப்பிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2023 நவம்பர் 27 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அத்துடன் உத்தேச புரிந்துணர்வு உடன்படிக்கையின் நேரடி பிரதிலாபமாக இலங்கையின் உயர் கல்வி துறையின் எதிர்கால முன்னேற்றத்திற்காக இரு நாடுகளிலும் தாபிக்கப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில்சார் நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பினை மேம்படுத்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் பயிற்சி வேலைத்திட்டங்களைப் போன்று கல்விசார் சுற்றுலாவிற்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் உயர் கல்வித்துறைக்கு உரிய சிரேஷ்ட நிருவாகிகள் பங்கேற்பதனை ஊக்குவிப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. அத்துடன், இரு நாடுகபளுக்கும் இடையிலான உயர் கல்வி முறைமைக்கு உரிய பாடவிதானங்கள், விஞ்ஞான மற்றும் கல்வி முறைகளைப் பரிமாறிக்கொள்வதற்கும் இரு தரப்பினரினால் நடாத்தப்படும் உயர் கல்வி சம்மேளனம், கருந்தரங்கிற்காக பங்கேற்பதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

II. இலங்கை பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கல்விசார் ஒத்துழைப்பினை நோக்காகக் கொண்ட புரிந்துணர்வு உடண்படிக்கை / செய்து கொள்ளல்.

இதன் கீழ், கடந்த காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்ட உடண்படிக்கைக்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

- உயர் கல்வி ஒத்துழைப்பிற்காக இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் சீனாவின் யூனான் பல்கலைக்கழகத்திற்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு கைச்சாத்திடல்.

- உயர் கல்வி ஒத்துழைப்பிற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் சீனாவின் சன்ஹை திறந்த பல்கலைக்கழகம் (Shanghai Open University) இடையிலான புரிந்துணர்வு உடண்படிக்கையினை கைச்சாத்திடல். மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சீன மொழி மத்திய நிலையத்தினை தாபிப்பது தொடர்பில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், சன்ஹை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் வரையறுக்கப்பட்ட பாங் ஒப் சைனா (Bank of China Ltd) இற்கு இடையில் முற்தரப்பு உடன்படிக்கையினை கைச்சாத்திடல்.

- பாதுகாப்பான முறையில் இரத்த தானம் மற்றும் வழங்கள் தொடர்பாக இரத்தமாற்ற மருத்துவ தொழிலாளர்களுக்காக உயரிய தாக்கம் கொண்ட நீடித்த நிலையான கல்வி வேலைத்திட்டத்தினை அபிவருத்தி செய்தல் (ERASMUS-EDU-2022-CBHE)" இற்கான செயற்திட்டத்திற்கு ஸ்பெய்ன் பார்சிலோனா பல்கலைக்கழகம் (Universitat AutÖnoma de Barcelona), மற்றும் இலங்கையின் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம், மற்றும் ரஜரட்டை பல்கலைக்கழத்திற்கு இடையிலான கூட்டு உடண்படிக்கையில் Consortium Agreement) கைச்சாத்திடல்.

- இடர் நிலமைகளை எதிர்கொள்ளுதல் மற்றும் இயற்கை வளங்களின் ஒருங்கிணைந்த முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறுபடுடு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளப்படுவதனை ஊக்குவிப்பதற்கு உரியதாக இலங்கை சப்ரகமுவ பலக்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் சல்பர்ட் பல்கலைக்கழகத்திற்கு (University of Salford) இடையிலான புரிந்துணர்வு உண்படிக்கையினை கைச்சாத்திட்டல்.

- உலகளாவிய சுகாதார முயற்சிகளின் இணைப்புக்களை மேற்கொள்வதனை நோக்காகக் கொண்டு வலய ஒத்துழைப்பு மத்திய நிலையத்தினை தாபிப்பதற்காக இலங்கையின் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் தேசிய பலகலைக்கழகம் (National University of Singapore) மற்றும் சிங்கப்பூர் சுகாதார சேவை தனியார் கம்பனியிற்கு இடையிலான முற்தரப்பு உடண்படிக்கையினை செய்து கொள்ளல்.

- ஊலகளாவிய ரீதியில் பெண்களுக்கு மாதவிடாய் நிறுத்தத்தினால் ஏற்படும் மனோநிலை சுகாதார அழுத்தங்கள் தொடர்பாக மாரி செயற்திட்டத்திற்கு (MARIE project) உரியதாக ஐக்கிய இராச்சியத்தின் மற்றும் அயர்லாந்தின் தெற்கு சுகாதார NHS பொறுப்பு (Southern Health NHS Trust) மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் றுஹுனு பல்கலைக்கழகத்திற்கு இடையிலான உடண்படிக்கை (Non-Disclosure Agreement) உட்பட புரிந்துணர்வு உடண்படிக்கையினை கைச்சாத்திடல்.

- சீனாவின் மாணவர்களுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் கல்வி வேலைத்திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் ஊக்குவிப்பதற்காக அதன் உரிய அதிகாரம் கொண்ட முகவராக Tomorrow Technology Education Service Center (TTESC) பெயரிடல் மற்றும் வலுவூட்டுவதற்கு உரியதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் Tomorrow Technology Education Service Center (TTESC) இடையில் செய்து உடண்படிக்கை மற்றும் புரிந்துணர்வு உடண்படிக்கையினை செய்து கொள்ளல்.

- இரு தரப்பினருக்கு இடையிலான ஒத்துழைப்பினை விருத்தி செய்வதற்காக இலங்கை ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் செக் குடியரசின் தோமஸ் பாடா பல்கலைக்கழகம் (Tomas Bata University) இடையே புரிந்துணர்வு உடண்படிக்கை கைச்சாத்திடல்.

- கெள்ளவினை கட்டியெழுப்புதல், ஆராய்ச்சி ஒத்துழைப்பு, புத்தாக்கம் மற்றும் நீரியல் வாழ் செய்கை உயிரின முறைமை தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவது தொடர்பில் இலங்கையின் ரஜரட்டை பல்கலைக்கழம் மற்றும் இதாலி நேபால் பெட்ரிகோ II பல்கலைக்கழகம் (University of Naples Federico II) இடையிலான உடன்படிக்கையினை செய்து கொள்ளல், கொள்ளவினை அபிவிருத்தி செய்தல், ஆராய்ச்சி ஒத்துழைப்பினை கட்டியெழுப்புதல் மற்றும் ஸ்மார்ட் விவசாயத்திற்கு உரியதான புத்தாக்கங்கள் மற்றும் மூல உள்ளீடுகளை அபிவிருத்தி செய்வதனை நோக்காக் கொண் இலங்கையின் ரஜரட்டடை பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் மிசிகன் மாநில கல்லூரிக்கு (Michigan State University) இடையிலான பங்குடமை உடண்படிக்கையினை செய்து கொள்ளல்.

4.6.4 உயர் கல்வி பரவலாக்கள் மற்றும் அபிவிருத்தியினை துரிதப்படுத்தும் செயற்திட்டம் (AHEAD)

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிற்கு உயர் கல்வியிற்காக பிரதான பாடங்களுக்கு சேர்த்துக் கொள்வதனை அதிகரித்தல், உயர் கல்வியின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்தல், ஆராய்ச்சி, அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் வர்த்தகமய ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய நோக்கங்களை எட்டுவதற்காக இச் செயற்திட்டம் 2018 ஜுன் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

உயர் கல்வி பரவலாக்கள் மற்றும் அபிவிருத்தியினை துரிதப்படுத்தும் செயற்திட்டம் (AHEAD) மூலம் 2023.12.31 கலாநிதிப் பட்டம் வழங்கள் 198 அளவு வழங்கப்பட்டுள்ளதுடன், 36 பேர் கலாநிதிப் பட்டத்தினை பூர்த்தி செய்துள்ளதுடன் 129 பேர் ஏற்கனவே கல்வி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். கலைமானிப் பட்டம் 12 SLIATE கலைப்பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் 04 பேர் பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்துள்ளனர்.

4.6.5 விஞ்ஞான மற்றும் மானிட வள அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகளை வழங்குதல் (STHRDP)

2018 இல் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் பண்புசார் தரம் மற்றும் உயர் தொழில்நுட்ப கற்கை வேலைத்திட்டத்தினை அமுல்படுததுவதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மானிட வள அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் விரிவுரையாளர்களுக்கு பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதிப் பட்டத்திற்காக ஒருவருக்கு 80,000.00 அமெரிக்க டொலர் நிதி அனுசரணை வழங்கப்படுகின்றது.

4.7 பல்கலைக்கழகங்களின் உலக தரவரிசைப்படுத்தல்.

சர்வதேச உயர்கல்வித் துறையில் இலங்கையின் இடத்தை மதிப்பிடுவதற்காக 'Webometrics' தரவரிசைப்படுத்தல் முறை பயன்படுத்தப்படுகிறது. இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்படுத்தல்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்போது, ஒவ்வொரு நிறுவனத்தின் தரவரிசைப்படுத்தலிலும் ஏற்றவிறக்கங்களை அவதானிக்கலாம். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது உலக தரவரிசைப்படுத்தல்களுக்கு அமைய உயர்தர இடத்தை வகிக்கும் பல்கலைக்கழகங்கள் 2024 ஆம் ஆண்டில் தமது தரவரிசைப்படுத்தல்களை தொடர்ந்தும் மேம்படுத்திக்கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதன்படி, இலங்கையின் 19 அரச பல்கலைக்கழகங்களில் (இலங்கை பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம் உட்பட) கொழும்புப் பல்கலைக்கழகம் (1,591), பேராதனைப் பல்கலைக்கழகம் (2,016), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (2,190) முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை தக்கவைத்துக் கொண்டன. 2023 டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது ஐந்து நிறுவனங்கள் அவர்களின் தரவரிசைப்படுத்தல்களை மேம்படுத்திக் கொண்டுள்ளன. அதாவது, களனிப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாலிப் பலர்கலைக்கழகம், பிக்கு பலக்லைக்கழகம் ஆகிய பலக்லைக்கழகங்களாகும். Webometrics' தரவரிசைப்படுத்தல் முறையின் கீழ் உலகம் பூராவும் 31,657 நிறுவனங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 16,594 நிறுவனங்கள் ஆசிய பிராந்தியத்தைச் சேர்ந்தவைகளாகும். அதில் உலக தரவரிசைப்படுத்தலில் முதல் 5,000 இனுள் இலங்கையின் 10 அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன. வனியாப் பல்கலைக்கழகமும் 2024 டிசம்பர் மாத தரவரிசைப்படுத்தலுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் ***அட்டவணை 4.10*** இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 4.10 – ஒப்பீட்டுத் தகவல்கள்

பல்கலைக்கழகம்	தெற்கு ஆசிய தரப்படுத்தல் பெறுமதி 2023 டிசம்பர்	தெற்காசிய தரப்படுத்தல் பெறுமதி 2024 டிசம்பர்	ஆசிய தர வரிசைப்படுத்தல் பெறுமதி 2023 டிசம்பர்	ஆசிய தரப்படுத்தல் பெறுமதி 2024 டிசம்பர்	உலக தர வரிசைப்படுத்தல் பெறுமதி 2023 டிசம்பர்	உலக தர வரிசைப்படுத்தல் பெறுமதி 2024 டிசம்பர்
கொழும்பு	46	52	473	413	1,487	1,591
பேராதனை	83	93	666	562	1,978	2,016
ஸ்ரீ ஜயவர்தனபுர	92	114	693	624	2,043	2,190
றுஹுனு	153	165	883	781	2,534	2,664
மெரட்டுவை	158	199	893	862	2,553	2,899
களனி	201	208	1,069	884	3,001	2,963
ரஜரட்டை	198	265	1,057	1,031	2,973	3,380
யாழப்பாணம்	281	277	1,360	1,070	3,666	3,496
சம்பரமுவ	352	374	1,639	1,338	4,249	4,188
வடமேல்	376	443	1,721	1,521	4,442	4,686
கிழக்கு	444	523	2,040	1,774	5,206	5,416
திறந்த	478	564	2,214	1,946	5,617	5,896
தென் கிழக்கு	642	734	2,906	2,618	7,761	7,931
ஊவா வெல்லஸ்ஸ	625	747	2,858	2,658	7,604	8,055
அழகியற் கலை	1,890	1,891	7,087	6,634	16,475	16,752
வவுனியா	-	1,992	-	6,926	-	17,300
பௌத்த மற்றும் பாலி	2,496	2,298	8,738	7,750	19,515	18,924
பிக்கு	3,454	3,059	10,738	9,307	23,186	21,970

(மூலம் - இணையத்தள – வேபோமெட்ரிக்ஸ் தரப்படுத்தல் முறைகள்)

05

வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன்

5.1 அறிமுகம்

உயர் கல்வி முறைமை மூலம் உருவாக்கப்படும் பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகளின், வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான முறைமையில் சேவையாற்றும் கல்வி மற்றும் கல்விசார ஊழியர்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதனைப் போன்று அமைச்சின் அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களின் பண்புசார் தரம் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வது உயர்கல்வியின் சிறந்த எதிர்ப்பார்ப்பு மட்டத்தினை பேனுவதற்கு காரணமாக அமையும்.

எனவே அமைச்சு மட்டத்தில் ஊழியர்களின் வெற்றிடங்கள் உரிய நேரத்திற்கு நிறப்புவதனைப் போன்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவது, பல்வேறுபட்ட தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் மற்றும் பல்வேறுபட்ட சேவை வழங்கள் ஊடாக கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர் சபையின் கொள்ளவினை விருத்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5.2 உயர் கல்வித்துறையில் வேலை வாய்ப்புக்கள்

கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் கீழ் உள்ள 17 பல்கலைக்கழகங்கள், 18 உயர் கல்வி நிறுவனங்கள் கல்வி அமைச்சின் கீழி உள்ள இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், இலங்கை பிக்கு பல்லைக்கழகம் மற்றும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (SLIATE) உள்ளடங்களாக தயாரிக்கப்பட்டுள்ள உயர் கல்வித்துறையின் வேலை வாயப்பு இப் பிரிவின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு பிரதான பணிகளை மேற்கொள்கின்றது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை 5.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2.1 உயர் கல்வித்துறையின் கல்விசார் பணியாளர் சபை

2024 ஆம் ஆண்டில் கல்வித்துறையில் நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் மொத்த ஊழியர்கள் 10,277 ஆகும். இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் (SLIATE) மொத்த கல்விசார் பணியாளர் சபை 265 ஆகும்.

அரச பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் உளள கல்விசார் ஊழியர்களின் எண்ணிக்கை இணைப்பு C இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.1 அட்டவணை உயர் கல்வித்துறையின் தற்போதைய பணியாளார் சபை.மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை பௌத்த மற்றும் பாலிப்

நிறுவகம்	கல்வசார் (நிரந்தர மற்றும் தற்காலிக)		கல்விசாரா (நிரந்தை மற்றும் தற்காலிக)	
	2023	2024	2023	2024
புல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகம்	10,328	9,891	12,754	11,747
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	10	4	217	216
இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	110	117	207	203
இரல்ங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்	277	265	556	563
கல்வி அமைச்சு (உயர் கல்விப் பிரிவு)	–	–	210	197
மொத்தம்	10,725	10,277	13,944	12,926

பல்கலைக்கழகம், இலங்கை பிக்கு பலக்லைக்கழகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்.

5.1 படம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பலகலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் கல்விசார் ஊழியர் சபை உள்ளீடுகள் - 2024



புள்ளிவிபர மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்.

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் (SLIATE) சேவையாற்றும் மொத்த கல்விசார் ஊழியர்கள் 265 ஆகும். இதே வேளை சிரேஷ்ட விரிவுரையாளர்கள் 89 பேர்களும், விரிவுரையாளர்கள் 28 பேர்களும், உதவி விரிவுரையாளர்கள் 85 பேர்களும், ஏனைய கல்விசார் உதவியாளர்கள் 63 பேர்களும் சேவையாற்றுகின்றனர். கூடுதலான கல்விசார் ஊழியர் எண்ணக்கை (43) காலி உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் சேவையாற்றுவதுடன் குறைந்த எண்ணிக்கையான (02) பேர் சேவையாற்றுவது நாவலபிடிய, மன்னார், வவுனியா, உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆகும்.

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் பணியாளர் சபை தொடர்பான விபரங்கள் இணைப்பு C1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2.2 அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணியாளர் சபை, வெற்றிடங்கள் மற்றும் நியமனங்கள்.

2024 ஆண்டின் நிரந்தர கல்வி சார் பணியாளர் சபை வெற்றிட எண்ணிக்கை 2179 அகும். 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் கல்விசார் பணியாளர் சபையின் நிரந்தர ஊழியர் எண்ணிக்கை 7400 என்பதுடன் 2024 ஆம் ஆண்டளவில் இவ் எண்ணிக்கை 7333 ஆகும். மொத்த பல்கலைக்கழக முறைமையில் 48% அளவு வெற்றிட எண்ணிக்கையில் அரைவாசி தற்காலிக அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள கல்விசார் பணியாளர் சபை மூலம் தழுவப்பட்டுள்ளது. கல்விசார் ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடம் தொடர்பான விபரங்கள் 5.2 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2 அட்டவணை உயர் கல்வித்துறையில் நிரந்தர கல்விசார் ஊழியர் எண்ணிக்கை

நிறுவனங்கள்	அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை	வெற்றிடங்கள்	தற்போதுள்ள ஊழிஜயர்கள்
பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்	9,332	2,048	6,946
ப.க.மா.அ.	4	0	4
இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்	80	23	57
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	66	5	61
இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்	368	103	265
மொத்தம்	**9850**	**2179**	**7333**

மூலம் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, இலங்ஜக பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்.

5.2.3 உயர் கல்வித்துறையின் கல்விசாரா பணியாளர் சபை

உயர் கல்வித்துறையில் மொத்த கல்விசார பணியாளர் சபை 12,926 ஆகும். இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் கல்விசாரா பணியாளர் சபை 563 ஆகும். இலங்கை பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம், இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் கல்வி அமைச்சின் (உயர் கல்விப் பிரிவில்) சேவையாற்றும் மொத்த கல்விசாரா ஊழியர் எண்ணிக்கை 400 ஆகும்.

அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிவனங்களில் உள்ள கல்விசார பணியாளர் தொடர்பான விபரங்கள் இணைப்பு C2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தின் கல்விசாரா பணியாளர் சபையின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் இணைப்பு C3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2.4 அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பணியளார் சபை வெற்றிடங்கள் மற்றும் நியமனங்கள்.

2024 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை 17,988 ஆகும். 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் கல்விசார பணியாளர் சபையின் உண்மையான ஊழியர் எண்ணிக்கை 13,944 ஆகும்

கல்விசாரா ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் 5.3 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது

5.3 அட்டவணை உயர் கல்வித்துறையில் நிரந்த கலவிசாரா ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள்.

நிறுவனங்கள்	அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை	வெற்றிடங்கள்	தற்போதுள்ள பணியாளர் சபை
பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்	16,351	4,476	11,875
பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு	325	108	217
இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்	142	34	108
இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்	111	16	95
உயர் கல்விப் பிரிவு	301	104	197
இலங்கை உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவகம்	758	195	563
மொத்தம்	**17,988**	**4,933**	**13,055**

மூலம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம்

5.2.5 கல்வி அமைச்சின் (உயர் கல்விப் பிரிவின்) ஊழியர்கள்

உயர் கல்விப் பிரிவின் நிரந்தர பணியாளர் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 40 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் கீழ் உள்ள 08 பல்கலைக்கழகங்களில் 2023.12.31 ஆம் திகதியன்று வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். இவ் ஊழியர்கள் 40 பேர்களில் 36 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள பல்லைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் சேவையாற்றுவதுடன் அமைச்சின் கீழ் காணப்படும் இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகங்களகத்தில் மற்றும் பாலி மற்றும் பௌத்த பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் 04 பேர்களும் அடங்குகின்றனர். இவ் எண்ணிக்கை 2024.12.31 ஆம் திகதியளவில் 31 வரை குறைவடைந்துள்ளது. அவ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வேறு தொழில்வாய்ப்புக்கள் கிடைத்தமையினால் இவ் அமைச்சில் இருந்து விலகியுள்ளனர். அவ் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்படுள்ளன.

5.4 அட்டவணை உயர் கல்விப் பிரிவில் நிரந்தர பணியாளர் சபையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2024.12.31 ஆம் திகதியன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

பல்கலைக்கழகங்கள் / நிறுவனத்தின் பெயர்	2023.12.31 ஆம் திகதியன்று	2024.12.31 ஆம் திகதியன்று
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	6	4
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	4	4
றுஹுனு பல்கலைக்கழகம்	4	4
களனிப் பல்ககலைக்கழகம்	1	1
சப்ரகமுவ பல்கலைக்கழகம்	12	9
வடமேல் பல்கலைக்கழகம்	4	4
கம்பஹ விக்ரமாரச்சி உள்நாட்டு இறைவரி வைத்திய பல்கலைக்கழகம்	4	1
ரஜரட்டை பல்கலைக்கழகம்	1	1
இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்	3	3
பாலி மற்றும் பௌத்தெ பட்டப்பின் படிப்பு நிறுவகம்.	1	0
பெற்றம்	**40**	**31**

மூலம்: நிருவாக பிரிவு (கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சு – உயர் கல்வி அமைச்சு பிரிவு)

2023 ஆம் ஆண்டில் உயர் கலவ்வித்துறையின் ஊழியர் சபை 210 அகும். மொத்த ஊழியர் எண்ணிக்யையில் 21 பேர் நிறைவேற்று உத்தியோகத்தர்களும் 03 பேர் மூன்றாம் நிலை மட்டத்தின் உத்தியோகத்தர்களும் 147 பேர் இடைநிலை மட்டத்திக் உத்தியோகத்தர்களும் 39 பேர் ஆரம்ப மட்டத்தின் உத்தியோகத்தர்களும் சேவையாற்றுகின்றனர். 2023 ஆம் ஆண்டில் 66 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் 2024 டிசம்பர் மாத இறுதியளவில் 104 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஊழியர் எண்ணிக்கையின் உள்ளீடு 5.2 படத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2 படம் உயர் கல்வத்துறையின் பணியாளர் சபை உள்ளீடு – 2024



மூலம் : நிருவாகப் பிரிவு (கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சு – உயர் கல்வப் பிரிவு)

5.3 கல்விசாரா பணியாளார் சபையின் கொள்ளவினை மேம்படுத்தல்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வித்துறையில் கல்விசார் மற்றும் கல்விசார ஊழியர்களின் கொள்ளவினை விருத்தி செய்வதற்காக அரசாங்கத்தின் மற்றும் தனியார் துறையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் உள்நாட்டைப் போன்று வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.3.1 கல்வி அமைச்சின் (உயர் கல்விப் பிரிவு) இனால் மேற்கொள்ளப்பட்ட பணியாளர் சபை அபிவிருத்திப் பணிகள்

அமைச்சின் பணியாளர் சபையில் வினைத்திறனை விருத்தி செய்வதற்காக வெளிநாட்டு பயிற்சி வாய்ப்பிற்காக அமைச்சின் உத்தியோகத்தர்கள் பலர் பங்கேற்றுள்ளனர். பொது நிருவாக சுற்றரிக்கை 18/2020 இற்கமைய அரச உத்தியோகத்தர்களினால் எட்டப்பட வேண்டிய அரச கரும மொழி தேர்ச்சியிற்கு (அபிவிருதத உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்) 96 பேர்களும் மேலும் வெளிநாட்டு பயிற்சி மூன்று வேலைத்திட்டங்களுக்காக 03 பேர்கள் என்ற அடிப்படையில் பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக பங்கேற்கச் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வித்துறையின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் கொள்ளவினை விருத்தி செய்வதற்காக அரசாங்கத்தின் தனியார் துறையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் உள்நாட்டைப் போன்று வெளிநாட்டு பயிற்சி வாய்புக்களை வழங்குவதற்கு அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.4. கல்விசார் மற்றும் கல்விசார ஊழியர்களின் கொள்ளவு விருததி.

5.5 அரசாங்கத்தின் மற்றும் தனியார் துறையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து வழங்கப்பட்ட உள்நாட்டைப் போன்ற வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள்

தொடர் இலக்கம்	பல்கலைக்கழகம்	2023		2024 (ஜனவரி – ஒக்டோபர்)	
		புலமைப்பரிசில் எண்ணிக்கை	நிதி (ரூபா.மி)	புலமைப்பரிசில் எண்ணிக்கை	நிதி (ரூபா.மி)
1	UGC-RMIT Scholarship Scheme	6	No financial obligation to UGC		
2	UGC-Grant Scheme			2	3,600,000.00

மூலம் - பல்கலைக்கழக மானிய மானிய ஆணைக்குழு

5.5. தகவல் மற்றும் தெடர்புசாதன தொழில்நுட்ப பிரிவின் பணியாளர் சபையினால் 2023.11.01 தொடக்கம் 2024.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள்.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிருவகிக்கப்படும் 17 பல்கலைக்கழகங்களுடன் இணைந்த 18 நிறுவனங்களினால் அனைத்து கல்விசார், கல்விசாரா பணியாளர் சபைகளின் வெளிநாட்டு விடுமுறையினை அங்கீகரித்தல் ஒன்லைன் முறையில் வெளிநாட்டு விடுமுறையினை அங்கீகரித்தல் (online foreign leave approval) இம் முறையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- வெளிநாட்டு புலமைப்பரிசிலிற்காக விண்ணப்பம் கோருவதற்கு ஒன்லைன் முறை ஊடாக மேற்கொள்வதற்கு தேவையான முறைமை (online management system for scholarships) தயாரிக்கப்பட்டுள்ளதுடன் புலமைப்பரிசில் விண்ணப்பதாரர்களுக்கு இதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய நேர்முகப் பரீட்சையினை மேற்கொள்ள Zoom தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

- அரச சார்பற்ற பல்கலைக்கழக பிரிவில் Online Interest Free Student Loan Management System முறைமையினை பராமரித்தல் மற்றும் புதிய தேவைகளை உள்ளடக்குவதற்காக உரிய செயற்பாட்டு இணைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் Ms Teams தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி அமைச்சு மாணவர் கடன் பிரிவின் மாணவர்கள் சுமார் 4,500 இற்கும் மேற்பட்டோர் நேர்முகப் பரீட்சையுடன் தொடர்புடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றனர்.

- மேலும், 2016 வரவு செலவு யோசனைகளுக்கு அமைய, மடிக் கணனி கொள்வனவு செய்வதற்காக வட்டியுற்ற கடன் வழங்கும் செயற்திட்டத்திற்கு உரியதான செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றன.

- அமைச்சின் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்குவதற்கு (HR management system) தேவையான மென்பொருள் உருவாக்கி சமகாலப்படுத்தப்படுவதுடன் அமைச்சின் நிலையான சொத்து ஆவணத்தினை பராமரித்து முன்னெடுப்பதனைப் போன்று, கணனி உதிரிப் பாகங்கள் நிலையான சொத்து ஆவணம் சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றன.

- 2020 வரவு செலவு திட்ட யோசனைக்கு அமைய பல்கலைக்கழகங்களில் Wi-fi வசதிகளை தொடர்ந்தும் விரிவுபடுத்துவதற்கான மூன்றாவது கட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊவா வெல்லஸ்ஸ .சப்ரகமுவ, தொல் பொருளியல் பட்டப்பின் மற்றும் நிறுவனங்களுக்கு இடையில் சராசரியாக 100% செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

5.6 அட்டவணை அமைச்சின் இணையத்தளத்திற்கு தகவல்களை உள்ளடக்குதல் மற்றும் சமகாலப்படுத்தல்.

இலக்கம்	பிரிவு	தகவல்கள்	அளவு (இலாபம்)	அளவு (ஆங்கிலம்)	அளவு (தமிழ்)
1	அபிவிருத்திப் பிரிவு	உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்காக புலமைப்பரிசில், அரச ஊழியர்ளுக்காக வெளிநாட்டு புலமைப்பரிசில் அறிவித்தல்.	65	65	65
2	மேலதிக (செயலாளர்) அபிவிருத்தி	இணையத்தளத்தின் முன்தோற்றத்தினை மாற்றியமைத்தல் புதிய அம்சங்களை உள்ளடக்குதல் மற்றும் ஏனைய இணையத்தளங்களுடன் தொடர்புபடுத்தல்.	20	20	20
3	கௌரவ இராஜாங்க அமைச்சர்	அமைச்சின் கூட்டங்கள், பொது மக்கள் சந்திப்புக்கள், தொடர்புபட்ட புகைப்படங்கள் மற்றும் கட்டுரைகள்	58	58	58
4	தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில் நுட்ப பிரிவு.	மடிக் கணனி தொடர்பான விலை மனுப்பட்டியல், மாணவர் கடன் செயற்திட்டம்.	15	15	15

5	பெறுகை	கேள்வி கோரள்களை வெளியிடல்.	35	35	35
6	அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு	உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பாடநெறி பட்டியல்.	65	65	65
7	நிருவாகம்	வெற்றிடங்களை வெளியிடல்	12	12	12
8	மாணவர் கடன் பிரிவு	மாணவர் கடன் செயற்திட்டம	33	33	33
9	STHRD செயற்திட்டம்	கேள்வி கோரள், வெற்றிடங்களை வெளியிடல்.	10	10	10

மூலம் : தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பிரிவு

- **உயர் கல்விப் பிரிவினால் இணையத்தளத்தினை நவீனமயப்படுத்தி தயாரித்தல்.**

தகவல் தொடர்புசாதன தொழில்நுட்ப முகவர் நிறுவகத்தின் (ICTA) பங்களிப்பு கொண்ட, உயர் கல்விப் பிரிவின் இணையத்தளத்தினை தயாரிக்கும் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

5.7 அட்டவணை அமைச்சின் அந்தந்த பிரிவுகளுக்கு சேவை வழங்கள் (2023.11.01 தொடக்கம் 2024.12.31 வரை)

இலக்கம்	சேவை வழங்கள் விபரங்கள்	அறிக்கைப்படுத்தப்பட்ட மற்றும் தீர்க்கப்பட்ட கேள்விகளின் எண்ணிக்கை (2023.11.01 தொடக்கம் 2024.11.30 வரை)
1	இணையதளத்திற்கு பிரவேசிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகள்	90
2	E-Mail தொடர்பான பிரச்சினைகள்	35
3	மென்பொருள் சமகாலப்படுத்தல்.	108
4	புதிய மென்பொருள் தாபத்தல்.	65
5	சிறு வனபொருள் பிரச்சினைகள்	285
6	கணனி அச்சுப் பிரச்சினைகள்.	345
7	கணனி அச்சு உபகரணங்களில் உள்ள குறைபாடுகள்	300
8	WI-FI தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள்	295
9	வலயமைப்பு பிரச்சினைகள்	208
10	வைரஸ் மூலம் ஏற்படும் பிரச்சினைகள்	25
11	Share Folder இல் ஏற்படும் பிரச்சினைகள்	95
12	கணனிகள் மூலம் ஏற்படும் பிரச்சினைகள்	08
13	வாகன அனுமதிப்பத்திர முறைமை பிரச்சினைகள்.	65

மூலம் : தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பிரிவு.

5.8 அட்டவணை செயற்பாட்டு முறைமையில் மீள தாபிக்கப்பட்ட கணனி மற்றும் / மடிக் கணனி எண்ணிக்கை (2023.11.01 தொடக்கம் 2024.12.31 வரை)

இலக்கம்	பிரிவுகள்	குணனிகளின் எண்ணிக்கை
1	அபிவிருத்திப் பிரிவு	15
2	அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு	5
3	தகவல் தொழில்நுட்ப பிரிவு	6
4	உள்ளக கணக்காய்வுப் பிரிவு	5
5	கணக்குப் பிரிவு	10
6	அரச கணக்காய்வுப் பிரிவு	5
7	பெறுகைப் பிரிவு	8
8	நிருவாகப் பிரிவு	12

மூலம் : தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பிரிவு

5.9 அட்டவணை வாகன அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் (2023.11.01 தொடக்கம் 2024.12.31 வரை)

2023.11.01 தொடக்கம் 2024.12.31 வரை		
01	நவம்பர் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	136
02	டிசம்பர் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	45
03	ஜனவரி மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	24
04	பெப்ரவரி மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	107
05	மார்ச் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	61
06	ஏப்பரல் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	72
07	மே மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	69
08	ஜுன் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	08
09	ஜுலை மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	36
10	ஆகஸ்ட் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	57
11	செப்படம்பர் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	10
12	ஒக்டோபர் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	134
13	நவம்பர் மாத வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.	45
	மொத்த எண்ணிக்கை	**824**

மூலம்: தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப பிரிவு

5.6 உயர் கல்விப் பிரிவு அபிவிருத்திப் பிரிவின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் யோசனைகள்.

பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாளர் சபையின் வெளிநாட்டு விடுமுறையினை அங்கீகரிப்பதற்காக ஒன்லைன் முறைமை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. அதனை காலத்திற்குக் காலம் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை அடையாளம்கண்டு அவ் ஒன்லைன் முறைமயினை சமகாலப்படுத்துவதன் மூலம் அதிசிறந்த பண்புசார் தரம் கொண்ட சேவையினை வழங்குவதற்கு முற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்களுக்கு வெளிநாட்டு சுற்றாலாவினை ஆரம்பப்பதற்கு 07 நாட்களுக்கு மன்னர் ஒன்லைன் முறைமைக்கு தகவல்களை உள்ளடக்குவதற்காக தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இவ் ஒன்லைன் முறைமை மூலம் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கு அமைய 2024 ஆண்டில் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் 3,563 பேருக்கு கடமை மற்றும் தனிப்பட்ட விடுமுறை தொடர்பாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இலங்கை தாதியர் பல்கலைக்கழத்தினை தாபித்தல் மற்றும் பலக்லைக்கழகங்களின் காணியினை சுவீகரிக்கும் செயற்பாடுகளுக்கு உரியதான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்வதற்கான யோசனை.

1. தற்போது பயன்படுத்தப்படும் கணனி முறைமைக்காக வினைத்திறன் புதிய கணனி முறைமையினை அறிமுகப்படுத்தல்.
2. உத்தியோகத்தர்களின் பயிற்சி தேவைகளை அடையாளம்கண்டு அதற்காக வாய்ப்புக்களை வழங்குதல்.

5.7 உயர் கல்விப் பிரிவின் வெளிநாட்டு கல்விப் பிரிவின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்.

வெளிநாட்டு இராச்சியங்களைப் போன்று கல்விசார் நிறுவனங்கள் மூலம் இலங்கைக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை மும்மொழிகளிலும் பகிரங்க பத்திரிகை மூலம் மற்றும் எமது இணையத்தளம் (www.mohe.gov.lk) மூலம் பகிரங்கப்படுத்தப்படுவதுடன் ஒன்லைன் (Online) முறை ஊடாக விண்ணப்பம் கோரும் செயற்பாடுகளை மேற்கொண்டு முறையான மற்றும் நெகிழ்வுத் தன்மை கொண்ட முறைகள் ஊடாக மாணவர்களை தேர்ந்தெடுக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.7.1 உயர் கல்வித்துறையின் வெளிநாட்டு கற்கைப் பிரிவின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் யோசனைகள்.

- மானிட வள மற்றும் உட்கட்டமைப்ப வசதிகளை விருத்தி செய்தல்.
- பயிற்சித் தேவைகளை அடையாளம் காண்பதற்காக வாய்ப்புக்களை வழங்குதல்.

5.8 கல்வி அமைச்சின் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) வாசகத்தின் பிரகாரம் கணக்காய்வாளரின் தர கணிப்பீட்டுக்கு அமைவான கருத்துரைப்பு.

தலைப்பு 126 – கல்வி அமைச்சின் 2023 டிசம்பர் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலமைகள் தொடர்பான வெளிப்பாடு, அன்றைய தினத்துடன் முடிவடைந்ம ஆண்டிற்கான நிதி செயற்சாதனை வெளிப்பாடுகள் மற்றும் நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடுகள் மற்றும் போதியதரம் கொண்ட கணக்கீட்டுத் கொள்கைகளுக்கு உரியதாக குறிப்புக்களை உள்ளடக்கி நிதி 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஒழுங்குவிதிகளுடன் இணைத்து வாசிக்க வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 (1) பிரமாணக்குறிப்பில் உள்ளடங்கும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய எனது கட்டளையின் கீழ் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) வாசதக்திற்கு அமைய பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தருக்கு சமர்பிக்கப்படும் இந் நிதி வெளிப்பாடுககள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் மேற்பார்வைகள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (2) வாசகத்திற்கு அமைய பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தருக்கு வருடாந்த விளக்கமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை எதிர்வரும் காலங்களில் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154(6) பிரமாணக்குறிப்புடன் இணைத்து வாசக்க வேண்டிய 2018 ஆம் ஆண்டின் இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆவது வாசகத்திற்கு அமைய சமர்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும்.

இவ் அறிக்கையில் 1.6 வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மூலமான அழுத்தங்களைத் தவிர, நிதி நிலமை வெளிப்பாடுகள் மூலம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று கல்வி அமைச்சின் நிதி நிலமைகள் மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்சாதனைகள் நிதிப்பாய்ச்சலில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலமைகள் காண்பிக்கப்படுவது என்பது எனது கருத்தாகும்.

5.8.1 தரஅளவையியல் கணிப்பீட்டிற்கு அமைய கருத்துரைப்பிற்கான அடிப்படை.

இவ் அறிக்கையில் 1.6 ஆம பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது கருத்துரைப்பு தர கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு தரங்களுக்கு (இ.க.த.) இற்கமைய என்னால் கணக்காயவுகள் மேற்கொள்ளப்பட்டன. நிதி வெளிப்பாடுகள் தொடர்பில் எனது பொறுப்புக்கள், கணக்காய்வின் பொறுப்பு என்ற வாசதக்தில் தொடர்ந்தும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துரைப்பிற்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதியளவு மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும்.

06

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

6.1 அறிமுகம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் தொழில்நுட்பம் உட்பட புதிய உலகின் புதிய அறிவோடு இணைப்பதற்கும், 21 ஆம் நூற்றாண்டின் அடுத்த தசாப்தத்தில் உள்ளூர் மற்றும் உலகளாவிய பொருளாதாரத்திற்குத் தேவையான மனித மூலதனத்தை அதனூடாக கட்டியெழுப்புவதற்கும் ஒரு நாட்டின் உயர்கல்வித் துறை பெரும் பங்கு வகிக்கிறது. ஒரு நாட்டை அல்ல, உலகையே வெல்வதற்கான சவால்களுடன் முன்னோக்கிச் செல்லும்போது ஆரம்ப, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம் நிலை உயர்கல்வி முறைமைகளின் அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டங்களை உருவாக்குவதற்கு அனைத்து தரப்பினரின் கூட்டு ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும். இதன் கீழ், உயர் கல்வித் துறையின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல், பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், பட்டதாரிகளின் தரத்தை அதிகரிப்பதன் மூலம் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பை அதிகரித்தல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை அதிகரித்தல் போன்ற துறைகளில் பங்களித்தல் வரை கல்வி அமைச்சின் (உயர் கல்விப் பிரிவின்) பணிகள் விரிவடைந்து செல்கின்றது. இதற்கு இணையான வகையில், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலும் அவர்கள் பயிலும் பாடநெறிகளுக்குப் பொருந்தும் வகையிலும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியுள்ளது.

6.2 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு

வருடாந்த அரச பல்கலைக்கழக முறைமைக்கு ஒதுக்கப்படும் மொத்த மூலதன ஒதுக்கீட்டில் அதிக சதவீதம் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதி ஏற்பாடுகளினுள் அடிப்படையாக நிலையான சொத்துக்கள் கையகப்படுத்தல், பராமரிப்பு மற்றும் புதிய நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதி ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன. நிலையான சொத்துக்கள் கையகப்படுத்தலின் கீழ் பல்கலைக்கழக முறைமைக்கு தேவையான அலுவலக உபரகரணங்கள், நூலக புத்தகங்கள், தகவல் தொழில்நுட்ப கருவிகள், விளையாட்டு உபரணங்கள் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் போன்ற உபகரணங்களை கொள்வனவு செய்யும் செலவினங்கள் உள்ளடங்குகின்றன. பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதி ஏற்பாடுகள் தற்போது காணப்படும் கட்டிடங்களை புனரமைப்பதற்குப் போன்றே இயந்திர உபகரணங்களின் பராமரிப்பு செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டில் அரச உயர் கல்வி முறைமைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த மூலதன ஒதுக்கீடுகளின் 88% உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் அது 79% ஆக இருந்ததுடன், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடுகள் 09% இனால் அதிகரித்திருப்பதனைக் காணமுடியும். 2024 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டின் இறுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் நிதிசார் முன்னேற்றம் 86% வீதமாகும். உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விதம் மற்றும் அதன் முன்னேற்றம் 6.1 உரு. மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.



உரு. 6.1: உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவினம் - 2024

(மூலம்: பல்கலைக்கழகங்கள் அறிக்கை 2024.12.31 ஆம் திகதியன்று)

6.3 நிர்மாண செயற்திட்டங்கள்

2024 ஆம் ஆண்டில் பலக்லைக்கழக முறைமையில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 75% அதாவது 22,214 மில்லியன் ரூபா நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந் நிர்மாண செயற்திட்டங்களின் எண்ணிக்கை 73 ஆகுமென்பதுடன் அவற்றில் செயற்படுத்தப்பட்டுவரும் நிர்மாண செயற்திட்டங்கள் 35 உம், இந்த ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 08 உம், இறுதிக் விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவினை மேற்கொள்ள வேண்டியுள்ள நிர்மாண செயற்திட்டங்கள் 30 உம் உள்ளடங்குகின்றன. அந்த செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 92,205 மில்லியன் ரூபா ஆகும். 2023 ஆம் ஆண்டில் நிர்மாண செயற்திட்டங்களுக்காக ரூபா 17,240 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் 86 செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

செயற்திட்டங்களிற்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும்போது அரசாங்கத்தின் பிரதான நோக்கமான விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம், பொறியியல் ஆகிய துறைகளுக்காக அனுமதித்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இணையாக செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி நிர்மாண செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் 8,366 மில்லியன் ரூபா உள்நாட்டு நிதியங்கள் மூலமும், மீதி ஒதுக்கீடான 13,848 மில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடன்கள் மூலமும் நிதியீடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன்களின் கீழ் அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்களாக வயம்ப பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்தி செயற்திட்டம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மானிட வளங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதார பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் மட்டக்களப்பு விபுலானந்தா நிறுவகத்தின் கேட்போர்கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆகிய செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகள் உள்ளடங்கியுள்ளன.

றுஹுனு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக பண்ணிரண்டு மாடிகளைக் கொண்ட கட்டிடத்தினை நிர்மாணித்தல், றுஹுனு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்ததிற்காக கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் பேராசியர் பிரவொன்றைத் தாபித்தல் ஆகிய செயற்திட்டங்கள் முக்கியமாக வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் நிர்மாண செயற்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது. புதிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவாக பேராதனை பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு 500 மில்லியன் ரூபா நிதி 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2024 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு முடிவடையும்போது மொத்த நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் நிதிசார் முன்னேற்றம் 87% ஆகும். 2024 ஆம் ஆண்டில் நிர்மாண செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பல்கலைக்கழக மாணியங்கள்

ஆணைக்குழுவின் செலவினத் தலைப்பின் கீழ் மற்றும் கல்வி அமைச்சின் உயர் கல்வி செலவினத் தலைப்பின் கீழ் அட்டவணை 6.2 மற்றும் 6.3 அட்டவணை மூலம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், நிர்மாணச் செயற்திட்டங்களின் தொகுப்பு அட்டவணை 6.3 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 6.1: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செலவினத் தலைப்பின் கீழ் நிர்மாணச் செயற் திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகள் பெறுவனவுகள் மற்றும் செலவினம் பற்றிய தகவல்கள் - 2023 மற்றும் 2024

பல்கலைக்கழகம்/ நிறுவனம்	2023.09.30				2024.12.31			
	செயற் திட்.எண்ணிக்கை	ஒதுக்கீடு	செலவினம்	%	செயற் திட்.எண்ணிக்கை	ஒதுக்கீடு	செலவினம்	%
பேராதனை	13	258	230	89	07	180	180	100
கொழும்பு	04	255	168	66	03	57	57	100
ஜயவர்தனபுர	02	400	400	100	03	697	697	100
களனி	01	113	100	89	01	200	178	89
மொரடுவை	07	231	81	35	07	320	270	84
ருஹுணு	01	100	90	90	01	60	60	100
யாழ்ப்பாணம்	02	152	150	99	01	160	160	100
கிழக்கு	01	36	-	-	01	70	70	100
ரஜரட்டை	03	185	170	92	05	295	185	63
சப்பரகமுவ	05	190	93	49	03	285	285	100
தென்கிழக்கு	02	107	86	80	02	126	99	79
வடமேல்	11	93	61	66	04	122	103	84
அழகியல்	02	120	120	100	02	120	117	98
ஊவா வெல்லஸ்ஸ	04	122	91	75	03	216	193	89
திறந்த பல்.கழ.	-	-	-	-	01	36	36	100
வவுனியா பல்.கழ.	01	130	76	59	01	120	113	94
திருகோணமலை வளாகம்	03	112	48	43	03	240	232	97
பாளி மற்றும் பௌத்த கற்கை பட்டப்பின் பட்ட நிறுவகம்	01	100	87	87	01	22	22	100
வரவு செலவுத் திட்ட முன்மொழிவு செயற்திட்டம் (தொழில்நுட்ப பீட நிர்மாணம் உட்பட)	09	975	636	15	10	565	565	100
புதிய வரவு செலவுத்திட்ட முன்மொழிவு (ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்) மருத்துவ பீடம் நிர்மாண செயற்திட்டம்)	01	200	-	-	-	-	-	
மொத்தம்	73	3,879	2,687	69	59	3,891	3,622	93

(மூலம் - நிர்மாணச் செயற்திட்டங்கள் பற்றிய பல்கலைக்கழக அறிக்கை 2023.09.30 ஆம் திகதியன்று மற்றும் 2024.12.31 ஆம் திகதியன்று)

அட்டவணை 6.2: உயர் கல்வி செலவினத் தலைப்பின் கீழ் நிர்மாண செயற்திட்டங்களுக்கான ஒதுக்கீடு – 2024

பல்கலைக்கழகம்/ நிறுவகங்கள்	செயற்திட்ட எண்ணிக்கை	ஒதுக்கீடு (மி.ரூ.)	செலவினம் (மி.ரூ.)	%
பிக்கு	01	150	21	14
பௌத்த மற்றும் பாலி	01	47	35	75
வெளிநாட்டு கடனின் கீழ் அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்	06	15,490	12,962	84
வரவு செலவு யோசனை செயற்திட்டம்	06	2,636	2,620	99
நிர்மாண செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடு	***14***	***18,323***	***15,638***	***85***
கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆரம்ப சிகிச்சை கட்டத்தொகுதி நிர்மாணத்திற்காக பெற்றுக் கொண்ட உள்நாட்டுக் கடன்நிதியத்தின் கடன் வட்டி கொடுப்பனவு		1,850	1,463	79
முழு மொத்தம்	**14**	**20,173**	**17,101**	**85**

(மூலம் - பல்கலைக்கழக அறிக்கை 2024.12.31 ஆம் திகதியன்று)

அட்டவணை 6.3: நிர்மாணக் கருத்திட்டங்களின் தொகுப்பு - 2024

	செயற்திட்ட எண்ணிக்கை	மதிப்பீட்டு செலவினம் (மி.ரூ.)	ஒப்பந்தத் தொகை (மி.ரூ.)	திரட்டிய செலவு (மி.ரூ.)	நிதி ஏற்பாடு (2024) (மி.ரூ.)	செலவு (2024.12.31) (மி.ரூ.)
இறுதிக் விலைப் பட்டியல் தீர்க்கப்பட வேண்டியுள்ய செயற்திட்டங்கள்	30	18,798.93	21,704.23	17,100.95	1,764.61	1,763.45
2024 ஆம் ஆண்டின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள்	08	2,902.27	2,357.25	2,361.95	352.04	318.42
2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள்	34	69,489.91	54,542.01	50,050.74	19,896.85	16,962.99
2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படுகின்ற புதிய செயற்திட்டங்கள்	01	1,014.00	-	200.00	200.00	200.00
மொத்தம்	**73**	**92,205.11**	**78,603.49**	**69,713.64**	**22,213.50**	**19,244.86**

(மூலம் - பல்கலைக்கழக அறிக்கை 2024.12.31 ஆம் திகதியன்று)

6.3.1 - 2024 ஆண்டின் நிர்மாண செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள்

கடந்த ஆண்டுகளில் நிர்மாண செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 08 செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை 2024 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டாகும்போது பூர்த்தி செய்ய முடிந்துள்ளது. நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி நிலமைகள் போன்ற எதிர்பாராத நிலமைகளுக்கு கடந்த காலங்களில் நாட்டிற்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டமையினால் திட்டமிடப்பட்டவாறு நிர்மாண செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமையினால் 2024 ஆம் ஆண்டில் நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த பல செயற்திட்டங்களின் நிர்மாண செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியவில்லை.

நாட்டிற்கு எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்ட எதிர்பாராத நிலமைகள் காரணமாக ஒப்பந்தாரர்களுக்கு எதிர்கொள்ள வேண்டிய ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அமைச்சினால் தொடர்புடைய தரப்பினரை அழைத்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டது. அதற்கமைய, அநேகமான சிக்கல்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு பல்வேறு தரப்புக்களுடன் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதுடன், அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மூலம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இந்த ஆண்டின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் பற்றிய ஆவணம் இணைப்பு D இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **உயர் கல்வியை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் செயற்திட்டம் (AHEAD)**

உலக வங்கயின் கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இச் செயற்திட்டத்தின் மொத்தக் கடன் பெறுமதி 100 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதுடன், 2019 இல் ஆரம்பிக்கப்பட்டு 2023.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்ததுடன், அதன் உத்தரவாதக் காலம் 2024.06.30 ஆம் திகதி வரை நிலவியது. 2024 ஆம் ஆண்டிலும் இந்தத் திட்டத்தின் இறுதி விலைப்பட்டியல்களைச் செலுத்துவதற்காக 762.58 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், இந்த நிதி ஏற்பாட்டில் 762.38 மில்.ரூபா 2024.12.31 ஆம் திகதியன்று செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய இந்தச் செயற்திட்டத்தின் முதலாவது பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட கூறுகளின் கீழ் பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய பிரிவுகளுக்காக அனுமதித்துக்கொள்ளப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வதற்காக சிவில் பணிகளுக்காக 3,840.41 மில்லியன் ரூபா தொகை மற்றும் மேலதிகமாக 1,912.53 மில்லியன் ரூபா தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர, வயம்ப, கொழும்பு, பேராதனை, றுஹுணு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் என்பவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வியை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிர்மாண செயற் திட்டங்களின் புகைப்படங்கள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

உரு. 6.2: நெனோ விஞ்ஞான தொழில்நுட்ப திணைக்களம், தொழில்நுட்ப பீடம், வயம்ப பல்கலைக்கழகம்

உரு. 6.3: இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகம், ATI நிலையம், மன்னார்

6.3.2 - நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள்

2024 ஆண்டிற்கு முன்னர் ஆரம்பித்து நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 34 ஆகும். மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 69,490 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க இச் செயற்திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டில் 19,897 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டாகும்போது இந்த ஒதுக்கீட்டின் நிதிசார் முன்னேற்றம் 16,963 மில்லியன் ரூபா ஆகும்.

மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 1,000 மில்லியனுக்கு மேற்பட்ட பல செயற்திட்டங்களின் தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் பற்றிய ஆவணம் இணைப்பு D1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு பீடத்திற்காக கட்டத்தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் - கிழக்குப் பல்கலைக்கழகம்**

செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 5,480 மில்லியன் ரூபா என்பதுடன் நிர்மாண செயற்பாடுகளுக்காக மாத்திரம் ரூபா 2,507 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டம் அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்தினால் கிடைக்கும் கடன் மூலம் செயற்படுத்தப்படுகின்றது.

செயற்திட்டத்தினை பூர்த்தி செய்ததன் பின்னர் மருத்துவ பட்டத்திற்காக 100 உம், தாதியர் பட்டத்திற்காக 70 உம், முருந்தாளர் பட்டத்திற்காக 20 உம், பொது சுகாதாரம் தொடர்பான பட்டத்திற்காக 20 உம் என்ற அடிப்படையில் வருடாந்தம் இப் பீடத்திற்காக பட்டதாரிகளை சேர்த்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். இப் பீடத்தின் கீழ் கீழ் குறிப்பிடப்பட்ட கற்கை திணைக்களங்கள் 03 இனைத் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

I. ஆரம்ப சுகாதார சேவை கற்கைப் பிரிவு மற்றும் மருத்துவ கற்கைப் பிரிவு.
II. சிகிச்சையியல் விஞ்ஞான கற்கைப் பிரிவு மற்றும் மேலதிக மருத்துவ கற்கைப் பிரிவு.
III. மானிட உயிரியல் விஞ்ஞான கற்கைப் பிரிவு மற்றும் நோயியல் விஞ்ஞான ஆய்வு கற்கைப் பிரிவு

- **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வளங்கள் அபிவிருத்தி செயற்திட்டம்.**

